[illegible]

( [illegible] )

TDR നം 3298

RR നം 4-4-1871

[illegible]

[illegible]

DIGITIZED

10-,892M,N
M71
16398

உ

கடவுட்டுணை.

# தமயந்திநாடகம்

என்னும்

# நளச்சக்கிரவர்த்திநாடகம்.

இஃது

சங்கீதசாகித்தியத்திற்சிறந்த

வேலூர்

நாராயணசாமிமுதலியாரால்

தஞ்சாவூரிலுள்ள

பல ஏட்டுப்பிரதிகளைக்கொண் டாராய்ந்து

நீக்கவேண்டியதை நீக்கியும்

சேர்க்கவேண்டியதை நூதனமாயியற்றிச்

சேர்த்தும்

பரிசோதித்த

அ. வீராசாமிநாயுடு அவர்களால்

தமது

சர்க்குணநிதி யச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

காப்பி - ௲ ௫

REGISTERED. COPYRIGHT.

கஅஎகரு ஆகஸ்டு.

116398

O-, 894811, N
1871



கடவுள்துணை.

# தமயந்தி நாடகம்.

## பாயிரம்.

காப்பு.

விநாயகர் துதி.

விருத்தம்.

திக்கொளிவாரணமலைபுயத்தோனெட்டுத்
திக்குமன்னர்வணங்கிவருஞ்செயத்தோன்வெற்றிச்
செங்கமெனுநிடதநகர்தன்னில்வாழுஞ்
சித்திரபதிசத்திரபதிசெங்கோல்நீதித்
தங்கனளச்சக்கிரவர்த்தி சரிதைதன்னைத்
துதித்திடவேயக்காவந் தும்பைபலுடன்
தங்கையணிசங்கரனீன்றமத்திக்
கணபதிபொற்பாதமலர் காப்பதாமே.

திரிபுராந்தகர்-துதி.

சக்கரத்தாற்புவியனைத்து மொருகுடைக்குளாண்டநளச்
சக்கிரவர்த்தி
முக்கியமிகுசரிதைதனை நாடகமாய்ச்செந்தமிழில்
மொழிந்துகூற
மைக்கடலிற்பிறந்துவரு மிக்கவிடமுண்டமழு
மானேயந்தும்
நக்கனெனும்புரமெரித்த முக்கணர்தம்பதமனதில்
நாட்டுவோமே.

திருமால்-துதி.

ாலமதிபோலுநுதல் தமயந்திக்கினியமணவாளனான
லமிகுநிடதநக ராண்டநளன்சரிதைதனைச்செப்பமுன்னாள்
லமெனவோலமிடும்வேழமதைக்காத்தகரு முகில்மெய்போன்ற
பலைநடுத்துயின்றதிருமாலிருபதாம்புயத்தைவேண்டுவோமே.

கலைமகள்துதி.

நிலமாதிருமாதனதுகுடைவசமாகநிறுத்தும்நீதி
நலமானபதிமேவுநிடதநகர்நளன்சரிதைநவிலப்புவிற்
பலமானகலைநூலின்பொருளாகநின்றிலங்கிட்டநாவல்கூறும்
கலைமாதிசைமுகன்றன்பூங்கமலத்தாளிணையைக்கருதுவோமே.

திருமகள்துதி.

திரிபிறைடைக்கியன்பத்தாறுதேசந்
திக்கெட்டுமனுநீதிசெலுத்துஞ்செங்கோல்
மகிபாலனிடதநளன்சரிதைதன்னை
மதுரமிகுசெந்தமிழால்வழுத்தமுச்சின்
நகைமுல்லைமுறுக்கிதழ்வாய்வதனகஞ்சம்
நாடியேப்போததியி லுதித்தெழுந்த
பங்கயசுர்தமை[illegible]வன்றட விண்மார்பிற்
[illegible]ங்கிளையாம்பணிதல்செய்வாம்.

சுப்பிரமணியர்துதி.

நிடதநகர்[illegible]க்கதிப னுறங்கூர்வேல்கருதலர்த
நெஞ்சினுட்டிக்
கடல்புடைசூழ்புவிமுழுதுமொருகுடையிலாண்டநளன்
கதையைக்கூறத்
தடியிடைதெய்வானைவள்ளி தமையிருபாகத்தில்வைத்துத்
துவஜமேந்தித்
திடமுளமயூரமிசை வருமுருகன்பதமலரை
தியானிப்போமே.

அவையடக்கம்.

அணிக்குலமைநிடதநகராண்டநளன்சரிதைதனை
யாவலாக்
கனிக்குமிசைத்தமிழ்ப்புலவர்க்கெதிர்ப்புகலென்புன்மொழியுங்
கடியவேகந்
தனிக்கரியபெருநக்கருடன்றனக்கிணையென்றொருசகடந்
தாவுமாப்போற்
பனிக்குமிதிலெழுத்துச்சொற்பிழையுறினும்பொறுத்தருளும்
பாவலோரே.

பாயிர·முற்றுப்பெற்றது.



உ

கடவுள்துணை.

# தமயந்திநாடகம்.

நூல்.

தோடையம்.இ-ம்-ஜம்பை.

புவனமதையொருகுடையி லாண்டுசெங்கோல்செலுத்தும்
புஜபலனளன்சரிதையிசையினுடன்கூற ஆ-ஆ
பவனிவந்தடியார்கள்பவமறுத்தாண்டசிவ
பாலனுமையருள்விக்னேஸ் பரன்பதந்துணையே-ஜெய-ஜெ

நீதிநெறிகவனும லாதிநெடுமால்பதத்தை
நேயமுடன்றுதிநிடத நிருபன்புக[illegible]ாக்க ஆ-ஆ
தாதவிழுங்கட்பமலர் தாரணியும்புயமு[illegible]
சரவணபவன்கமலத் தாளிணைகள்துணை[illegible]

ஆதிமனுநீதிமுறை யாலகிலமியாவுமொரு
வாதையின்றிமேவுதிருவளர்நிடதபதியான் ஆ-ஆ
காதலுயர்நளன்சரிதை கருத்தூடனேவகுக்கநல்ல
கமலநிகர்முகவாணி கணவன்பதந்துணையே ஜெய-ஜெயா

மங்களம்.

இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

மங்களம்நளேந்திரனுக்கு மங்களம்-ஐய
மதிமுகத்தமயந்திக்கு மங்களம்

அனுபல்லவி.

மங்கயக்கன்மாயனுக்கும் பாவைதிருநேயனுக்கும்
சங்குசக்ரதாரனுக்கு மங்களம்-நித்ய
சர்வதயாபரற்கு மங்களம்
கற்றவர்படித்தவர்க்கும் காதினல்கேட்பவருக்கும்
சுத்தமாய்ப்பாடுவோர்க்கு மங்களம்-இந்த
தொல்புவியிலுள்ளோருக்கு மங்களம் (மங்களம்)

விநாயகர்வருதல்.

விருத்தம்.

பொன்னுநவமணியிழைத்தமௌலிபூண்டு
புனிதநுதற்றிலதமதிபோலுநால்வாய்க்
கன்னல்மதமொழுகுதிருமுகத்தோடைந்து
கரமதிலங்குசபாசங்காணவெற்றி
பன்னுமறைமுன்னூலாபரணமாடப்
பசும்பொன்னுடையிலங்கப்பதாம்புயத்தில்
வன்னமணிக்கிங்கிணியுங்கலகலென்ன
வாலகணபதிசபையில்வருகின்றாரே.

தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிவிநாயகர்வந்தார்-ஆகுவிலேறி-ஆதிவிநாயகர்வந்தார்,

அநுபல்லவி.

...ிதை யோதவதுபெரிதே
...யெல்லாம் பார்க்கவிப்போதே (ஆதிவி)

சரணங்கள்.

மும்மதம்பொழிசோதி முச்சுடர்தனக்காதி
நன்மையுதவுநீதி நளன்கதைக்கனுபூதி (ஆதிவி)
வானவர்மலர்தூவ வணங்கிவந்தனைகூற,
வண்ணமொழிந்தநல்ல வகையாய்ச்சபையில்மேவ (ஆதிவி)
சோதிமகுடமின்ன துலங்கும்பணிகள்துன்ன
நீதியாய்நடனம்பண்ண நிறைந்தசபைக்குமுன்னம் (ஆதிவி

கட்டியக்காரன்வருதல்.

விருத்தம்.

தட்டிகல்லடக்காரன்தாடிக்காரன்
சரிகைமுண்டாசுக்காரன்சால்வைக்காரன்
பட்டைநாமக்காரன்பொட்டுக்காரன்
பச்சைக்கல்முருகுவண்டிக்கடுக்கன்காரன்
இட்டவெள்ளித்தடிக்காரன் ஈட்டிக்காரன்
எக்குநயஞ்சொல்லவெகுகெட்டிக்காரன்
கட்டழகுபெற்றநளராஜன்வாசல்
காக்குமெழில்கட்டியக்காரனும்வந்தானே.



தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரனும்வந்தானே-சபைதனிலே
கட்டியக்காரனும்வந்தானே-நளேந்திரன்வாசல்
கட்டியக்காரனும்வந்தானே

அநுபல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் துஷ்டரேகமிகுந்தான்
அஷ்டதிக்கெங்குமுகந்தான் இஷ்டமும்பெருகத்தந்தான் (கட்டி

சரணங்கள்.

நீட்டியபிரப்பங்கோலும் நாட்டிக்கொண்டுமென்மேலும்
தாட்டியாய்வயிற்சால்போலும் கூட்டியசபைமுன்னுலும் (கட்டி)
சரிகைமுண்டாசுகட்டி மிருகண்ணையுமுருட்டி
மருவுதட்டியுங்கட்டி இரு...விரித்தக்கொட்டி (கட்)
பாரினில்மிகுந்தமோடி வீரனைக்...
ஆபாரத்துடன்கூடி பூரிகல...ணிபாடி (கட்டி)

வீரசாம்பன்வருதல்.

விருத்தம்.

தந்தமணிவெற்புயனும் திடதகோமான்
கருணைமிருகனகசபை காகதிகூற
விந்தையுடன்கள்ளையுண்டுவெறிகள்மிஞ்சி
வெற்றிலைப்பொயிலைக்காம்புயாக்குவேண்டி
கந்தையிடையுடுத்திமாடறுக்குஞ்சூரி
கனுமூக்கிற்றடிமாக்கால்கையிற்கொய்டு
தொந்தமெனநடமாடிச் சபையிற்பாடி
சொகுசுடனேசாம்பவனுந்தோற்றினனே.

தரு-இ-ம்-கன்னியாசி-ஆடதாளம்.

பல்லவி.

வீரசாம்பனிதோவாறார் வேடிக்கைபாரும்

அநுபல்லவி.

தேறியேவாய்விட்டுக்கூவி தென்புடனெழுந்தகாவி (வீரசா)

சரணங்கள்.

மாடறுக்கும்பெருஞ்சூரி மடியிற்சொருகிமீறி
பாரிற்கள்ளுண்டுவாய்நாறி பண்பாகயிருமிக்காறி (வீரசா)

சொத்தைப்பல்லுங்கண்ணீர்பூளை சொரியவாயிலுங்கோழை
மெத்தவாய்வெருத்துக்கூவி சுற்றிலுமடுத்துக்காவி (வீர)
தம்பட்டமடித்துக்கொண்டு சாமிநளன்வாராரென்று
குட்டிட்டுத்தும்பிட்டுக்கொண்டு கோணவாயையென்றுகொண்டு(வீ

நளமகாராஜன்-வருதல்.

விருத்தம்.

புதிமுகமாந்திருமுடியில்மகுடமின்ன
மணிமகரகுண்டலமுஞ்செவியிற்றுன்ன
கதிர்பெருகும்புயவளைமுத்தாரஞ்செம்பொற்
காந்தியுறுஞ்சிவரத்தினமாலைபூண்டு
விதமுடனேயங்கிதமான்சாதராவும்
விளங்கமலர்க்கரந்தனிலேவில்லுமேந்தி
சதுருடன்கட்டி[illegible]க்கூற மறையோர்வாழ்த்தச்
[illegible]வர்த்தி[illegible]ராஜன்சபைக்குவந்தான்.

இதுவுமது-சந்தவிருத்தம்.

மகபதிசகத[illegible]மகிழ்பதிகனமுடை வளர்பதிகணபதியாம்
சுரபதிபெரு[illegible]ல்மணிமுடிபுனைநரபதிதுதிநலமுயர்பதியாம்
ஜெகபதிதிருவுறைஜெயபதிவலுவுயர்திடபதிதிகழ்பதியாம்
திடதமெனகர்பதிசசிகுலநளபதிசபையினில்வந்தனனே.

தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

நளமகாராஜேந்திரன்வந்தான்-ஜகம்புகழும்
நளமகாராஜேந்திரன்வந்தான்

அனுபல்லவி.

தளபதிமந்திரிகள்கூடத் தக்கதமொழிமாதராட
வளமிகும்நளனிடத மாநகர்தனிலுயர்
கனகல்துரியுய புனிதவிஸ்தார (நளமகா)

சரணங்கள்.

சந்திரவட்டக்குடை தாங்கவே-இருபுறமும்
சாமரைசுருட்டி யோங்கவே
வந்தமன்னர்தினா தாங்கவே-வந்தனையுடன்
மாநிலத்தோர்கலி நீங்கவே



ஐந்தமிழ்க்கவிஞர்கள் சிந்துபதங்கள்பாட
அந்தமிகுந்தஜய துந்துமியொலிநீட
ஆர்த்திடுஞ்சேனை வணங்கப்
பார்த்திபரெல்லாம் வணக்க (நளமகா)
ஆரணம்புகழு நீதியே-மற்றோர்களும்
ஆசிமகிழ்ந்திட ஓதியே
பூரணகும்பங்கள் சோதியே-செழிக்கநிதம்
பூவுலகெங்கும்பிரக்யாதியே
ஆனைக்கூட நல்ல தாரணிதனர்களும்
வாரணம்பரியுடன் காரணமாகவெங்கும்
மாமறையாளர்க்கு நிதம்
நேமமாகக் கொடுத்த (நளமகா)
கதிர்மணிமகுடஞ் சூட்டியே-தகதவென
கனகபொற்பணி பூட்டியே
மதனைனுஞ்சம்பிரமங் காட்டியே-ஒயிலுடனே
வந்தநயம்பா ராட்டியே
சுதியுடனே அடாணா விதமுடனே நிதமும்
துதிக்குமனமகிழ்ந்து மதிக்குந்தயவுகந்து
சுந்தரப்புய வதார
சௌந்தருவெனும் கெம்பீர (நளமகா)

நளமகாராஜன்-கட்டியனுக்குச்சொல்-விருத்தம்.

சென்னியிற்பாகைசூடி திகழும்நற்பணிகள்பூண்டு
நன்னயநமதுவாசல் நயந்தகட்டியனேகேளாய்
சொன்னயமிகுந்தமந்திரி சமுகமீன்றுநீயும்
மன்னியசமுகந்தன்னில் வரும்படிசொல்லுவாயே.

வசனம்.

அகோவாருய்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய மதிநுதி மந்திரியை அதிசீக்கிரத்தில் அழைப்பியும்பிள்ளாய்.

கட்டியக்காரன் மந்திரிக்குச்சொல்-விருத்தம்

சீலமுங்குலமுநீதி தெளிந்தநல்லறிவுமூன்று
காலமுங்கருதியோதுங் கருத்தனாவமைச்சனோ

ஞாலமும்புகழுங்கீர்த்தி நவகண்ட நளராஜேந்திரன்
கோலமாஞ்சமுகத்தன்னில் கொப்பெனவரச்சொன்னரே.

வசனம்.

அகோ சாணஞ்சரணமையா சுவாமி மதியூகிமந்திரியே நவகண்ட சக்கர்வர்த்தியாகிய நளமகாராஜா அதிசீக்கிரத்தில் நம்மை அழைத்துவரச்சொன்னாரையா சுவாமி.

மந்திரிவருதல்-விருத்தம்.

தேசமெனுமைம்பதிகா றதனை நாளுந்
திகிரியினாலடக்கிவென்றசெங்கைவேலான்
நேசமுடன்முறைதவறா தவனியாளும்
நிதியுள நற்றனடதியாம்நிடதர்கோமான்
வீசுபுகழ்பெருகிவ... போஜராஜன்
...யமிகு... தாண்டன்வெற்றிவேந்தன்
வாசல்வளர... மந்திரிதானும்
மன்னர்பணி நளன்சபைக்குவருகின்றானே.

...-இ-ம்-தன்னியாசி-அடதாளம்.

பல்லவி.

வந்தனன்மதியூகிமந்திரி-நளேந்திரன்சபைக்கே
வந்தனன்மதியூகிமந்திரி

அனுபல்லவி.

செந்திருமேவிய — விந்தைநிடதத்தில்
சந்திரமிகுஜய — சுந்தரன்சபையினில் (வந்தனன்)

சரணங்கள்.

வெற்றிமகுடஞ்சொர்ன்ன — அஸ்தகடையமின்ன
சுற்றிமாநர்கள்தன்ன — நத்திதெங்கள்பன்ன
சத்தியமிகுமன்ன — சத்திரபதிக்குமுன்னே
தத்துவமுயர்கன — சித்தசனிவனென (வந்தன)
அத்திதிஜாருமாட்டி — தக்கப்பணிகள்பூட்டி
துங்கமலர்கள்சூட்டி — தங்கத்திலதந்தீட்டி
பொங்குந்தந்திரங்காட்டி — சங்கமிகவேகூட்டி
சிக்கமெனவேமேட்டி — யெங்கும்புகழைநாட்டி (வந்தன)



ஆசையுடனேகூடி — வாசமலரைச்சூடி
பாசமாதர்கள்கிர்த்தி — தேசமந்திரிகள்கோடி
பேசவந்தனைதேடி — வீசிநடந்துமோடி
ராஜன்புகழைப்பாடி — போஜன்சபையைநாடி (வந்)

மந்திரிசொல்-விருத்தம்.

புவனமீரேழுமோங்கப் புரவலர்வணங்கிப்போற்ற
அவனிபோர்குடைக்குளாளும் அண்ணலேயரசேகோவே
நவமணிமாலைமார்பா நளேந்திரமகிபாவென்னை
உவகையாயழைத்தசேதி யுரைசெய்வீர்சரணந்தானே.

வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி அடியேனை அழைப்பித்த காரியம் இன்னதென்று அருளிச்செய்யவேணுமையா சுவாமி.

நளமகாராஜன்சொல்-வி...த்தம்.

மதிதனிலதிகமான மந்திரிசொல்லக்கேள்...
அதிபதிமகுடம்பூண்ட அரசருமற்றமுன்ன
சதுர்பெறுங்குடிகள்சேனை தவருஞ்சகங்கள்தானே
புதியதாய்வார்த்தையுண்டோ புகலுவாய் புகலுவாயே.

வசனம்.

அகோவாரும் மதியூகிமந்திரியே ஐம்பத்தாறுதேசத்து ராஜர்களும் நமது நிடததேசத்திலிருக்கின்ற யாவரும் யாதொருகுறையில்லாமல் சுகித்திருக்கிறார்களா மந்திரி.

மந்திரிசொல்-விருத்தம்.

நவகண்டந்தன்னையாளும் நளேந்திரமகிபாகேளும்
சிவன்செயலாலுமிந்த தேசதேசத்திலுள்ளோர்
சவுக்கியமும்கிருபையாலுந் தானவிருக்கிறார்கள்
தவதாகரனேயுந்தன் றாளிணைசரணமையா.

வசனம்.

அகோ சரணஞ்சரணமையாசுவாமி நவகண்டபதியாகிய சக்கிரேஸ்வரா கடவுளினது அருளாலும் தேவரீருடைய கிருபாகடாட்சத்தினாலும் ஐம்பத்தாறுதேசத்து அரசர்களும் நமதுதேசத்துக் குடிகளும் சவுக்கியமாயிருக்கிறார்களையா சுவாமி.

நளமகாராஜன்சொல்-வசனம்.

சந்தோஷம் சந்தோஷம் மந்திரி எனது நாயகியாகிய தமயந்தியை அதிசீக்கிரத்தில் அழைப்பியும்பிள்ளாய் மந்திரி.

தமயந்திவருதல்.

பொதுவிருத்தம்.

கருமுகிலையனையகுழலணியுமலர்கமகமென
கனகவளைகதிரொளிசெய
இருகுழையுநவமணியுமுகமதியுநகநகென
யிலகுதாடியிடைதுவளவே
முருகுபரிமளகளபமொழுகுபிறைவடமசைய
முனிவொரிரவருபதுமைபோல்
கருவளருமுனிவமார்மனமுருகியெதிர்பாவு
தையல்தமயந்திவந்தாள்.

இதுவுமது-கொச்சகம்.

அம்போகணிந்துநுதல் ஆல்வயிறுகொங்கைகரிக்
கொம்போவமுதமொழி கொண்டல்திகோசுந்தல்
செம்பதுமாதிபதி தீரனளராஜனது
கும்போகாஞ்சிதஞ்சேர் தையல்தமயந்திவந்தாள்.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

அதிரூபஸ்ரோமணிவந்தாள்-தமயந்திதேவி
அதிரூபஸ்ரோமணிவந்தாள்

அநுபல்லவி.

மதிசுதிரொளிரத்தின — மாலிககதகென
அதிவிதநயகுண — பதியெனவுறுஜக
அதிநளனுயர் — சபைதனில்வருகை (அதிரு)

சரணங்கள்.

செக்கவினை — குலுக்கவே-மெய்யிலணிந்த
சிறந்தமணி — துலக்கவே-
கொங்கையிணை — குலுக்கவே-ரத்தினமணிமுக
குத்திபனப்பென் றிலங்கவே
செங்கைதனிற்பூச்செண்டு சிந்தைமகிழ்வுடன்கொண்டு



மங்கையர்கள்சூழ்ந்திட — வணங்கியேதாழவும்
இங்கிதமாமையல் — தங்குமெய்போலுயர் (அதிரு)
காவிற்சதங்கை — கொஞ்சவே-கூந்தலைக்கண்டு
கார்முகில்மன — மஞ்சவே-
பாலினுமொழிகள் — மிஞ்சவே-அனமுங்கண்டு
பாவைநடைக்குத் — தஞ்சவே
வாலமதிபோல்வே — சிலநுதலின்மேலே
மணமுயர்திலதமும் — பிணைகயல்விழியென
இணையொருவருநிக — ரிலையெனமலர்முக(அதிரு)
உபையசாமரை — வீசவே-மாதர்கள்வந்து
உவந்துநயங்கள் — பேசவே-
சுடபணியொளி — கூசவே-சவ்வாதுபன்னீர்
சுகந்தமாதர்கள் — பூசவே-
சபைபற்புகத்தைநாடி — சரிகைபட்டாடைசூடி
தவமதுபெருகிய — தருநளபதிவளர்
சபைதனிலழகிய — தமயந்தியனமெனும்(அதிருப)

தமயந்திசொல்-வசனம்.

பிரம்மாண்டத்தையும் அரசாட்சிசெய்யும் பிரதாபம் படைத்த
ஏனதுபிராண நாயகா சரணஞ்சரணமையாசுவாமி.

பொதுவிருத்தம்.

தங்கப்பிரகாசமான சந்திரமாமண்டபத்தில்
எங்குமேதியஞ்சூழ மெழில்மலர்மஞ்சமீது
இங்கிதாதிமதன்போ லேகாந்தமாயிருந்து
சங்கீதநளராஜேந்திரன் சயனமேசெய்யலுற்றான்.

தரு-ஐ-ம்-சாவேரி-அடதாளசாப்பு.

பல்லவி.

சயனமதுசெய்தாரோ-நளேந்திரன்
சயனமதுசெய்தாரோ

அநுபல்லவி.

கயல்விழித்தமயந்தி — கனகமடிதனிலே(சயனம)

சரணங்கள்.

திறைகதிரொளிசொர்ணச் சுவரொடுவளர்ந்து
னிரைதிரையொருகோடி-

மாரகதமணிவச்சிர வயிரத்தாலாமிழைத்த
மலர்மணிப்பலகை மூடி
ஏழில்மிருக்கட்கொழிக்குமுத்தா விசைத்தமண்டபநாடி (சயனம)
ஆரவமணிமிருத்த தீபங்கள்நிரைநிரை
யலங்காரமாய்த்துலங்கு
பாவிய நவமணித் தீபமனந்தங்கோடி
பந்திபந்தியா யிலங்க
கூடல்நீருண்டகரு முகிலோதிநேச கன்னியர்கவரிவீச (சயனம)
ஆயிரத்தெட்டுமாற்றுத் தங்கச்சங்கிலியுஞ்ச
லழகுமஞ்சணையாட
தூயமலர்பரப்பிச் சரிகைத்தலையணைமேல்
சுகந்தவாசனை மூட
மணமிகுந்தநாயகிதமயந்தி மாதுமின்னுருடன்சேர்ந்து (சயன)

நளமகாராஜன் தான்கண்டகனவை தமயந்திக்குரைத்தல்.

பொதுவிருத்தம்.

உத்தமிதமயந்திப்பெணுடன்மகிழ்ந்தம்சதூளி
மெத்தையில்நித்திரைசெய்தவேந்தனுங்கனவுகண்டு
சித்தமாயனந்தல்நீங்கித் தேவிதன்முகத்தைப்பார்த்து
கொற்றவனளராஜேந்திரன் கூறுவான்கூறுவானே.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

கனவுநான்கண்டேனதைக்கேளடி-பெண்ணே
கனவுநான்கண்டேனதைக்கேளடி

அனுபல்லவி.

மனமகிழ்ந்தின்பசுக யோகத்துடன்கூடி
மஞ்சத்தில்நித்திரை செய்யும்பொழுது (கனவு)

சரணங்கள்.

ஒற்கமென்னேவல்செய்யும் புஷ்கராஜன்வந்
தென்னுடன்சூ தாடவும்
பார்க்குளுயர்நிட... பதிசெல்வமரசையும்
பந்தயந்தனில் தோற்கவும்



ஊர்குலவும்விதற்ப தேசந்தனிற்செல்லவென்
காதல்மைந்தரை யுனதுதந்தைமுன்
ஏகிடும்படியே நடத்திட (கனவு)
வனந்தனிலேநா மிருபேருமாய்க்கூடி
மனந்தளர்ந் தேகிடவும்
இணைபிரிந்ததுபோலு மனந்தனைப்பிடித்திட
வென்றாகில் போகிடவும்
துணைகொள்கதிர்மறைந்த யிராவிலோர்மடத்திதனில்
கன்னியுனைப்பிரிந்து தன்னியனாகவே
முன்னிலனலது தன்னில்நடந்திட (கனவு)
கதிக்குஞ்சுரபன்னன்பால் விதிக்கும்வேலைகள்செய்து
காலம்நான்போக்கிடவும்
மதிக்குமுயர்வதன மானேயுனக்குமறு
மணமென்றுகேட்டிடவும்
பதிக்குளுயர்விதற்ப தேசந்தனிலெல்லோரும்
பருதிமணிமுடி கருதியணிந்திட
உறுதியாய்நிட்க நகரிலிருந்தேன் (கனவுநான்)

தமயந்திசொல்-விருத்தம்.

ஞானேநளேந்திரபூபா சொற்பனங்கண்டாலென்ன
நாரணன்கிருபையாலே நமக்கொன்றுமனுகாதையா
வீரனேநினைவதல்லால் வேறொன்றுமில்லையெந்தன்
ஆருயிர்ப்பிராணநாதா ஐயமதகற்றிடீரே.

வசனம்.

அகோகேளும் என்பிராணநாதா கனவிற்கண்டபொருள் கைக்கெட்டுமோ அது நினைவல்லாமல் வேறல்ல நமக்கு நாராயணர் துணையிருப்பார் யாதொன்றுக்கு மஞ்சவேண்டாமையா...ம்.

பொதுவிருத்தம்.

அளிமதுசுகந்தமாலை சொருகுகூந்தல்வேற்கண்...
தளபதிநளனைக்கூடி தரித்ததுயிற்றிற்செற்ப...
வெருத்திடமுகந்தனங்கள் மிகக்கறுத்திட...ருந்த
கிளிமொழிதமயந்திப்பெண் செற்பமாய்...றானே.

கரு-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்,

பல்லவி.

கெற்பத்துடனேவந்தாளே-தமயந்திதேவி
கெற்பத்துடனேவந்தாளே

அநுபல்லவி.

அற்புதமானமாத ரனைத்தம்பேர்களுமே
பொற்புளமகத்தாதி போல்மகர்தாழுமே
பொக்கமதாய்வெரு மங்கையர்நடமிட
இங்கிதஅனமெனக் கின்கன்முகத்துலங்க (கெற்பத்)

சரணங்கள்.

திருவுடைத்திலேகுட்டி சொருவுக்குழல்கள்சேர
மருமலராணிந்தகிபோன் மதிமுகம்வியர்வைசேர
புருவந்தனைப்பணிந்து புகழுமுகம்வெளுத்து
பொங்குசெழுக்குமி லின்சொல்தாகமே
துங்கமுடனெரு சன்னையிலாமலே (கெற்பத்)

தோகைம[illegible]லப்போதும் தேகம்பசுநரம்பு
தோன்ற[illegible]ரியில்சுவை வேண்டுமனம்விரும்பும்
வாகுமோகினியன்னாள் லோகநாயகியின்றுள்
வந்தியர்மிகுஞ்செய செஞ்சொல்தருங்குயில்
குஞ்சரமும்மயி லுஞ்சரிநடைபொருந்த (கெற்பத்)

படைக்கப்பணைத்துயிம்மி கடித்திருமாந்தத்தங்க
குடத்திலேமுன்னுவனி படர்சுடப்பெறுமணி
வடத்திலேவயிற்றுள்ளி பிடித்தகைத்துடித்தாள்ளி
மங்கையாகரமிகு செங்கதிரொளியென
இ[illegible]தபுதல்வனை மங்கருள்புரிந்திட (கெற்பத்)

பொதுவிருத்தம்.

பை[illegible]கனைத்தானான பைந்தொடிதமயந்திக்கு
தரித்த[illegible]யிற்றிற்கெற்பந் தவத்தினுலெனமகிழ்ந்து
கருத்தின[illegible]லன் ஸ்ரீமந்த கலியாணஞ்செய்யவென்று
பொருத்தமே[illegible]ர்த்தநல்ல புரோகிதர்தமையழைத்தார்.



பிராமணர்வருதல்.

இதுவும்-பொதுவிருத்தம்.

அஞ்சாமலருணைகால மாற்றினில்தீர்த்தமாடி
நெஞ்சினில்அயுத்திரிய நித்தியகிர்த்தியங்கள்செய்து
ரஞ்சிதமுடனேசோம ஞர்மடிபூணுலிட்டு
பஞ்சாங்கஞ்சொல்லும்வேத பாரகர்வருகின்றாரே

கரு-இ-ம்-சக்க்ராபரணம்-அடதாளம்.

பல்லவி.

வாசனுணமறையோன்வந்தானே-பஞ்சாங்கஞ்சொல்லும்
வாசனுணமறையோன்வந்தானே

அநுபல்லவி.

காமினியோர்புகழ் போத[illegible]ந்தர
வாசந்தனேந்திரற்கு நேசமங்கள[illegible]சொல (வாச)

சரணங்கள்.

கையினிற்பஞ்சாங்கம் பிடித்து-பிரயமந்திரம்
கற்பனைவிடாமல் படித்து
செய்யகல்வியில்மனந் தொடுத்து-வாராகிரகங்கள்
சித்திக்குந்திசை யடுத்து
ஐயநாமந்தானணிந்து சுத்தமாய்ப்பூ[illegible]ல்புனைந்து
வையப்பையவேநடந்து பரமபதந்தினைந்து (வாச)
ஓமயக்கியங்கள் செய்யவே-தர்ப்பைகள்கொண்டு
ஓதுமந்திரக்க ஞய்யவே-
பூமலர்மாரிகள் பெய்யவே-பூசாராதி
புரிந்துமொழியப் பையவே-
சோமசூரியகுலமன்னன் தோகைதமயந்தியர்க்கு
மாமணஞ்செய்யநாலோத் மகிழ்வுடன்சபையில்வேத (வாச)

பிராமணர்சொல்-வசனம்.

தீர்க்காயுஸ்பவிஷ்திரஸ்து அன்னதா கபேவா தர்மை மஹாப் பிந்தகாரிய மின்னதென்று தெரிவிக்கவேணுமைய்யா மகாராஜனே.

நளமகாராஜன்சொல்-வசனம்.

அகோவாருமையாசுவாமிவேதியரே இந்த ஆசனத்திலே உட்க்காரும். இப்போ நமதுதேவியாகிய தமயந்திக்கு ஸ்ரீமந்தகலியாணஞ்செய்ய முகூர்த்தம்பார்த்துச் சொல்லு[illegible]மையா சுவாமி.

பிராமணர்சொல்-விருத்தம்.

நீரேன் நளராஜேந்திரா ஸ்ரீமந்தமுகூர்த்தஞ்செய்ய
வாரமுஞ்சிரகாசி வளர்திதிநட்சத்திரங்கள்
பூரணமான்யோகம் பொருந்தியேயிருவருக்கும்
சீருடனிருக்குதையா ஸ்ரீமந்தஞ்செய்யலாமே.

ஸ்ரீமந்தகலியாணம்.

ராகம்-இ-ம்-மோகனம்-அட்டதாளசாப்பு.

பல்லவி.

ஸ்ரீமந்த கல்யாணஞ்செய்தார்-அன்று
தேவர்கள் பூமலர் பெய்தார்

அநுபல்லவி.

விமன்றல் திருசொல் பாரித்தார்-ஜக்
வேந்தான் தன்மனம் பூரித்தார்
மாமந்திரப்பிடிகை யாமந்தக்குடிலை
வர்ணமணிக்கொடி சொர்ணத்தூண்கண்ணாடி
தாமந்தநில மரகதக்கோமன்
சம்பிரமமாடத்தில் பொன்மணிக்கூடத்தில் (ஸ்ரீமந்)

சரணங்கள்.

சித்திரச்சாலைகள் ஜோடித்தார்-மணி
முத்தினாம்பந்தல்கள் மூடித்தார்
சுற்றிலும்மலர்மாலை தூக்கினார்-புட்ப
சுகந்தபரிமளந் தூக்கினார்
பத்திபத்தியாக் ஆலாத்தியேத்தியே
பங்கயமலர்விழி மங்கையர்நட்டமிட்ட
உத்தாதேசாதி வர்த்தனர்மகிழ்வும்
ஓமங்கள்வேதியர் நாமங்கள்செய்யவும் (ஸ்ரீமந்)
மங்கைக்குவார்குழல் பின்னினார்-மணி
வளாபரணங்க ளணிந்தனர்
கொங்கைக்குவார்முத் திறுக்கினார்-சொர்ணக்
கோவைமணிவடங்கள் பெருக்கினார்
செங்கைக்குச்சூடக முன்கைக்குப்பொன்வளை
திக்கின்றதவிழ் திலதமெழுதியே



பங்கயபாகத்தில் தண்டைச்சிலம்புடன்
பசும்பொன்னிறுசெய்த பாடகம்பூட்டியே (ஸ்ரீமந்த)
சொர்ணமணிமுடி சூட்டினார்-தங்கத்
தாய்பதிஜாங்கி மாட்டினார்
வர்ணப்பதக்கங்கள் பூட்டினார்-நல்ல
வாடைச்சவ்வாதையுந் தீட்டினார்
தன்னிளமென்று மயில்நடமாடவே
சந்திரவட்டக்குடை தன்னிழல்நீடவே
மன்னர்க்குமன்னவ னளேந்திரபூபதிக்கும்
மங்கைதமயந்தி மாமயிலாளுக்கும் (ஸ்ரீமந்த)

பொதுவிருத்தம்.

ஸ்ரீமந்தமானபின்பு தேசமன்னவர்கள்சென்றார்
வீமராஜேந்திரன்றானும் விதர்ப்பதேசத்திற்போனான்
தாமரைமலர்முகத்தாள் தையலீரைந்துமாதம்
நேமமாயானபின்பு நேரிழைவருந்தலானே.

தமயந்தி பிரசவவாதனை படல்.

திபதை-இ-ம்-தன்னியாசி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்குவேனடிமாதே யேதுநான்செய்வேன்
அன்னமேயென்மனமுமஞ்சுதே என்னமாவுப்வேன்
சிற்றிடைநோகுதேயடி மாதேஅடிமாதே
மெத்தநீர்சிறுத்துவலிக்குதிப் போதேஇப்போதே
அன்னையுமின்றுநடுநடுக்குது அன்னமேபாங்கி
இனையனவுஞ்சகிக்கலாமோ யென்மனந்தாங்கி
நடிக்குதேபிள்ளையுள்வயிற்றில் சுறுசுறுப்பாக
அடிவயிற்றில்மிகவுநோகுது அன்னமேபாங்கி
படபடென்றுஉடல்நடுக்குதென் பாங்கிசகிமாரே
ஜடலமெல்லாநோகுதென்னடி தாதிச்சகிமாரே
கன்னிகையுமறந்தனன்மனந் தளர்ந்தேனிந்நேரம்
எந்தன்கணவரிடஞ்சொல்லி வந்தாலுபகாரம்

### மருத்துவக்கிழவிவருதல்.

பொதுவிருத்தம்.

திட்டமாய்க்கலைநரைத்துத் திரள்வாயுமுக்குநீண்டு
ஒட்டியவயிறுமார்பி லுதித்ததோர்முலையுமாட
அட்டலட்சுமிக்கொப்பான அரிவையாள்தமயந்திமுன்
கெட்டியாய்த்தடியையூன்றி கிழவியுந்தோற்றினளே.

தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

நரைத்தலைக்கிழவி நாச்சியும்வந்தாள்-மருத்துவம்பார்க்க
நரைத்தலைக்கிழவி நாச்சியும்வந்தாள்

அநுபல்லவி.

உரத்ததடியையூணி ஒட்டகம்போலேகோணி
இரைப்புத்திகைப்புமாக இருமியிருமிக்கொண்டு (நரை)

சரணங்கள்.

திருத்தமுடனெவர்க்கும்வருத்தமில்லாமற்றீர்ப்பேன்-பிறந்தபிள்ளை
உருத்தெரியாமல்மூடும் கருத்தசிரந்தியெல்லாந்தீர்ப்பேன்-பச்சிலை
[மூலி
திறத்துடனேபிடுங்கிச் சேர்ப்பேன்-சேதமில்லாமல்
கன்னிமார்களுக்கொரு பின்னமில்லாமல்வரும்
ஜன்னிசயித்தியமெல்லாம் உன்னத்தெரியுமென்று (நரை)

நெத்தச்சுனைக்கிணையா-யொத்திருந்தோப்புமுலையாட- நடுநடுங்கிக்
குத்திருமலுடனே சற்றுஞ்சுப்பரிந்துஓட-சங்கையில்லாமல்
மெத்தவயதெனவே புத்திரர்கள்ளையாட-சந்தோஷமாக
ஒத்தகண்காளிற்பிள்ளை மெத்தவடிந்துவாயில்
தத்துதமயந்தியை நத்திதலைநடுங்கி (நரைத்)

மருத்துவக்கிழவிசொல்-விருத்தம்.

அன்புள தமயந்திப்பெண் அன்னமேசொல்லக்கேளாய்
முன்பெறுந்தலைச்சனுக்கு மிகுதியாய்வருத்தந்தோற்றும்
பின்பெறும்பிள்ளைக்கெல்லாம் பேதையேநோய்தோற்றாது
தன்செயலாலேயுந்தன் சஞ்சலந்தவிர்த்திடாயே.



வசனம்.

அகோவாருமம்மாதாயே தமயந்திதேவி தலைச்சன்பிள்ளையாதலால் எல்லாருக்கும் வருத்தந்தோற்றுவது வழக்கந்தான் ஆகையால் சற்றுநேரம் சஞ்சலப்படாமல் சுவாமியை தியானித்துக்கொண்டிருமம்மாதாயே.

தமயந்திசொல்-சிங்காரபத்தியம்.

தயக்குதேயென்மனந் தாளுமோஅம்மணி
சடலத்தின்வேதனை சகிக்கவசமோ
மயக்குதேபுத்தியு மலர்விழியிருளுதே
மைந்தனுநெஞ்சினிலேறுதம்மா
பயங்களுண்டாகுதேபாவிநானென்செய்வேன்
பசறுதேயுடலனுபானவமாமோ
நயங்களாய்ச்சொல்வதுநாட்டினிலெவர்களும்
நடுங்கவேவயிற்றினைமுறுக்குதம்மா

தயிர்யமென்பதுசொலத் தாயுமில்லையே
குயில்மொழித்தாதிகாள் குழந்தையெனது
வயிற்றைவிட்டின்னமும்வரவுமில்லையே
செயலதாய்நான்செய்ததீவினையிதோ.

திபதை-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஐயோநானென்செய்வேன் அடிவயிறுளையுது
ஆற்றமுடியவில்லையே சகிமாரே
உற்பனமாகியசெற்ப மிப்படிவருத்துமென்
றளவுநானறிகிலேன் சகிமாரே
பொற்புளமடந்தையர்கள் புத்திரப்பிரசவமென்று
பூவுலகிலார்க்குமுண்டோ சகிமாரே
காலனெனுமிதனைப் பாலகனென்றேமொழிந்த
காரணமிதென்னசொல்வீர் சகிமாரே
மேலெல்லாம்வலிக்குதே விஷம்போலேறுதேயெங்கும்
வேதனைபெருகுதே சகிமாரே
தேகம்நடுக்குதுசித்தங்கலக்குது
தீரமருந்தறியீரோ சகிமாரே

கோலமாமொழியாரே குலதெய்வந்தனைவேண்டிக்
கொண்டிருந்தணிவீர் சகிமாரே.

பொதுவிருத்தம்.

அதிசயமாய்ப்பிரலாபித்த அரிவையுந்துயரந்தீர்ந்தி
கதிரவனொளியைப்போலுங் காய்ச்சினதங்கம்போலுஞ்
சதுர்பெருகிடநாட்டோர்சகலருமகிழ்ச்சிகூர
மதிகுலம்விளக்கவேதான் மைந்தனும்பிறந்திட்டானே.

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

பாலகன்பிறந்தானே-சுபதினத்தில்
பாலகன்பிறந்தானே

அனுபல்லவி.

கோலநளன்மகிழ குவலயத்தோர்புகழ
சீலன்குலம்விளங்க ஜெயபேரிகைமுழக்க(பாலகன்)

சரணங்கள்.

தத்தைமொழியாள்இன்னக் குத்துமுலைப்பாலுண்ண
சித்தமகிழ்ந்தெல்லோரு மெத்தஆசிகள்கூற(பாலகன்)
வினாதானம்நளராஜன் மிகுதியாய்த்தான்கொடுக்க
அரசரும்வருகவே யிரவலர்பெருகவே(பாலகன்)
விந்தைமதிகுலத்தில் சிந்தைமகிழ்ந்துதித்த
சுந்தரனெனும்பிரகாசச் சந்திரனெனவேநல்ல(பாலகன்)

பொதுவிருத்தம்.

மைந்தனும்பிறந்தானென்று மன்னவனளராஜேந்திரன்
அந்தணியார்க்கும்வெகுஞ் சோடசதானமீய்ந்தார்
மைந்தனுந்தமயந்திக்கு மஞ்சனச்சடங்குசெய்து
புந்திமகிழ்ந்துமாதர் புகழ்ந்துதாலாட்டினாரே.

தாலாட்டல்.

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

ராரிரரோ ராரிரரோ ராரிரரோ ராரிரரோ

தங்கமுடியணிந்து-எந்நாளுந் தழைக்கப்புவியனைத்தும்
செங்கோல்செலுத்திவரும்-நளேந்திரன் செல்வமேகண்வளரீர்(ராரி)
இந்திரன்முதல்வானவரும்-துதிக்க இளமதிபோல்வளரும்
சந்திரகுலந்தழைக்க-வந்துதித்த தங்கமேகண்வளரீர்(ராரி)



12

தெள்ளமுதேயினிய-மதுரம் தெவிட்டாதமுக்கனியே
வள்ளல்நளேந்திரனுர்-மகிழ்ந்திடும் மைந்தனேகண்வளரீர்(ராரி)
ஆலைக்கரும்பே-அலங்கிர்த அரும்பொருளேயெனது
மாலைமணிவிளக்கே-மயிலேயென் மைந்தனேகண்வளரீர்(ராரி)
எக்கம்பிடியாமல்-குழந்தையொன் றில்லையென்றெண்ணாமல்
பாக்கியமதுபோல-வந்துதித்த பாலகனேகண்வளரீர்(ராரி)
மெத்தவருந்தியேநான்-சலித்து மெலிந்தலைந்துவாடாமல்
அத்தாருணதனில்-வந்துதித்த ஐயனேகண்வளரீர்(ராரி)
ஆரமணியார்பன்-இந்த அவனியெல்லாமாண்டிருந்த
வீரசேனன்பேரனை-வந்த மெய்யனேகண்வளரீர்(ராரி)

ராரிரரோ ராரிரரோ ராரிரரோ ராரிரரோ

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் நளமகாராஜன் பிள்ளைக்கு நாமகரணஞ்சூட்டி தமயந்தியுடனே மகாசந்தோஷமாய் சிம்மாசனத்திலிருந்து ராசியபரிபாலனஞ் செய்துக்கொண்டுவருங்காலத்தில் புட்பமாநகரத்தையாளும் புஷ்கராராஜன் கொலுவுக்குவருகிறவிதக்காண்க.

பொதுவிருத்தம்.

இக்குவில்மாரனென்ன யிருபுறக்கவரிவீச
மைக்குழல்ரதியையொத்த மாதர்கள்நட்டனமாட
சொற்கவிராஜர்பாடச் சூழ்ந்துகட்டியர்கள்போற்றப்
புட்கராராஜதிரன் புனிதன்போல்கொலுவில்வந்தான்.

புஷ்கராராஜன்வருதல்.

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

பல்லவி.

இந்திரனும் இவனெனவேயெல்லோருமகிழ-கன
தந்திரபுஷ்கராராஜன் சபைதனில்வந்தனனே

அனுபல்லவி.

சுந்தரஞ்சேர்முகமிலங்க விந்தரத்தினமுடிதுலங்க
தந்தகாணசிக்கமென பொங்கும்புகழ்மேவியாக(இந்)

சரணங்கள்.

வச்சிரமணிப்பதக்கமின்ன வர்ணக்கொடிபறக்க-குஞ்ஜ
மகாமணிகுண்டலத்த ஏகிலமெங்குஞ்சிறக்க

பச்சைபணிபடைக்கலமுங் — குகவடிவாளுறக்க-உயர்
காணமயில்வீரனைப்போல் — கோசவொளிநிரக்க
நச்சநவமணியிழைத்த — பொற்சரிகைத்துகிலணிந்து
நவிரயின்னூர் நடனமிட — நாவலர்கவிசைபாட (இந்திர)

தூனாதகஜதுரகஞ் — சேனைபடைசூழ-இனம்
அச்சர்மதிமந்திரிமார் — அடியிணையில்தாழ
வானவரும்சனிபகவான் — மனமகிழ்ந்துவாழ-இந்த
மண்டலத்தையொருகுடையில் — வாக்கியவனை
தானவர்கள்கண்டுடனந் — தயக்கமிகநடுக்க
சத்துருக்கன்மதிமயக்கி — துணர்ந்தபலமொடுக்க (இந்தி)

செந்திருவாமடமாதர் — சிறந்துவிளையாட-இந்த
தேசமெங்குமிவன்புகழை — தினந்தினங்கொண்டாட
முந்தவருஞ்சநிபலத்தால் — முயற்சியெக்குங்கூட-வெகு
மூர்க்கமுடனெதிர்த்தமன்னர் — முறிந்துபயந்தோட
சுந்தரனளராஜனுடன் — பந்தயஞ்சூதாட
தொல்லுலகமுழுதாளும் — வல்லமைகள்நீட (இந்திர)

பொதுவசனம்.

இப்படிபுஷ்கராஜன் கொலுவுக்குவந்த சமாச்சாரத்தை யறிந்த சூரியன்குமாரனை சனிபகவான் புஷ்கராஜனிடம் வருகிறவி தங்காஸ்கு.

சநிபகவான்வருதல்.

விருத்தம்.

புனிதன்மாலயனீசற்கும் புரிதந்ததகமோனுக்கும்
தனிரிஷியிந்திரனுக்குஞ்சகலஜீவாத்மாவுக்கும்
இனியதோர்கருப்பத்துக்கும் ஏழரைநாட்டானை
சனிபகவானும்வந்து சபைதனிற்றோற்றினனே.

தரு-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

குவலயம்நடுக்கிட சநிபகவானிதோ
ஓராபயதாய்வந்தான்



13

அநுபல்லவி.

தவமுனிவர்களோடு — ரிஷிகளிந்திரன்முதல்
தானவர்வானவர் — மானவர்நடுக்கிட (குவலயம்)

சரணங்கள்.

நீலமந்திரம் போலும்-பருத்தவுடல்
ஆலமுந்தியங் காலும்
சூலமுந் கண்டுகோலும்-நெற்றியிலிட்ட
நாமமுங் கருநாளும்
ஞாலமுந்தயங்கிட — நான்முகன்மயங்கிட
வேலனுமிரண்டிட — விமலனுமரண்டிட (குவல)

ஈசனுங்கயிலை விட்டே-சுடலையில்
வாசமாயலைய விட்டேன்
பூசரன்றலையைப் புட்டேன்-மலைப்பாம்பாக
வாசவன்றனையுந் தொட்டேன்
பாசமோடியமனை — பாரில்விழுகவென்று
கோசிகனைப்புவியி — லேசவேசெய்தேனென்று (குவலய)

மன்க்கவலையுந் தீர்ப்பேன்-துதிப்பவரை
வாழ்வுபெற்றிருக்க வைப்பேன்
நினைக்கவு — மறியாத-புல்வர்களை
நீசர்க்கடிமையாகப்பிரித்திடுவேன்
அனைத்துலகும்நளனை — யாளவைப்பேனென்று
வனத்தில்விடுவேனென்ற — வாசகம்பொய்யோவென்று (குவ)

புஷ்கராஜன்சொல்-விருத்தம்.

கார்நிறமாகவந்தசனிபகவானேபோற்றி
வாரிசூழ்புவியில்வாழு மனிதரைப்பொருட்டாயெண்ணி
பூரணமாகிதேவி பொற்பிட்டகதையைப்போல
சீருடன்வந்ததென்ன திருவுளம்பற்றுவீரே.

வசனம்.

அகோவாருமையா சுவாமி அடியேனையொருபொருட்டாவெ ண்ணி தேவரீர் இவ்விடத்திற்குவந்தசங்கதியை தெரியப்படுத்தவேணு மையா சுவாமி.

சநிபகவான்சொல்-விருத்தம்.

வானவர்புகழுண்டாகி வளரும்புஷ்கரனேகேளாய்
ஆனதுநன்றமல்ல அற்பகாரியமேயாகும்
நான்தமயந்திமாதை நன்மணஞ்செயவிருக்க
மானிடனன் றுஞ்செய்த வஞ்சனைதெரிந்திலாயோ.

சநிபகவான்சொல்-சிந்து.

இ-ம்-புன்னாகவராளி.

நளச்சக்கிரவர்த்திசெய்த நல்ல
ஞாயமுனக்குத்தெரியாதோ
விஸ்தாரபூலோகத்தில் சிறந்த
விதற்பதேசத்திலேயொருபெண்
தமயந்தியென்றவள்பேர் பூரணச்
சந்திரவதனத்தையொத்தவள்காண்
இமையோர்மயங்கிடுவார் அந்த
இந்திரன்கூடவே யிச்சைபட்டான்
எந்தன்விவாகமெல்லாம் அவள்
எவ்வணமாகட்டுமென்றிருந்தேன்
அந்தப்பெண்ணைவிவாகம் நளன்
ஆசையுடன்செய்யலாமோ அவர்கள்
இருபேரும்வேறாகப் பிரிந்து
தேசமேகாட்டிலலையவைப்பேன்
தருவாகநீதான்போய் நளன்
தன்னுடன்சூதாடவேணுமென்றே
பார்ப்பாயரைக்ஷணத்தில் அவன்
பதியுமரசுமுனக்காக்கிவைப்பேன்

சநிபகவான்சொல்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் புஷ்கராஜனே நீ இப்போதே நளனிடத்திற்குப்போய் சூதாடினால் அவனைத் தோல்வியடையவும் உன்னை ஜெயிக்கும்படியாகவும்செய்து உனக்கே அந்த நிடததேசத்தை மகுடாபிஷேகஞ்செய்துவைக்கிறேன் இப்போதே புறப்படும் புஷ்கராஜனே.



புஷ்கராஜன்சொல்-விருத்தம்.

ஈசனைபிரக்கவைத்த வெழில்சனிபகவானேகேள்
ராஜர்க்குராஜனான நளமகாராஜனுக்குக்
காசுக்கப்பங்கட்டித் தன்மையாய்வருகின்றேனான்
பாசமாய்தேவரீர்க்குப் பயந்திதோபோறேனையா.

வசனம்.

கேளுமையாசுவாமி சநிபகவானே அரசர்க்கரசனுன அந்த நளமகாராஜனுக்கு பகுதிகட்டி சமாதான்மாய் இத்தனைநாள் இந்த நகரத்தையாண்டிருந்தேன் இப்போது அவரிடம்போய் எப்படிசூதாடவாருமென்றழைப்பேன் ஆனாலும் தேவரீருடைய சொல்லுக்குப் பயந்து இதோபோகிறேனையா சுவாமி.

பொதுவிருத்தம்.

தந்திரமாகச்சொல்லி சநிபகவானுஞ்சென்றார்
சுந்தரனளேந்திரன்முன்னே சூதாடப்போகாவிட்டால்
நிந்தையாஞ்சநியன்பொல்லான் நேர்ந்திடும்பகையென்றஞ்சி
அந்தமாநிடதேச மரசனும்வருகின்றானே.

தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

நளபதிசமுகந்தேடி நடந்தான்புஷ்கராஜன்

அநுபல்லவி.

வளரும்நிடததேச மன்னனேந்திரபூபன்
அழகானசபைதேடி அமைச்சருடனேகூடி (நளபதி)

சரணங்கள்.

கன்னியர்நடனமாட கவிராஜர்புடைசூழ
மன்னவர்வணங்கிப்போற்ற மகுடவர்த்தனர்தாழ(நளபதி)
சூதால்நளனையின்று தோற்கச்செய்யலாமென்று
வாதாடப்புஷ்கராஜன் மனமகிழ்ந்தேவல்லரசன்(நளபதி)
பருதிமகன்சநிசொல் பண்புடன்கொண்டுநாடி
விருதாரிஷபக்கொடி வெற்றியுடன்கொண்டுநீடி(நளபதி)

புஷ்கராஜன்சொல்-விருத்தம்.

திருவடிசரணமையா ஜெயநளராஜகோவே
அருமையாய்ப்பந்தயங்க ளதிசயமாகவைத்து

இருவருஞ்சொக்கட்டானை யிசைந்தொரட்டமாட
மருவியேவந்தேனிக்கே மனமகிழ்ந்தெழுந்திடீரோ.

வசனம்.

சர்வஞ்சாரணமையா நளமகாராஜனே பந்தயங்கள்வைத்து சொக்கட்டானாடவேணுமென்கிற ஆசையுடனேவந்தேன் எங்கிற்கிருபைவைத்து ஒராட்டமாட எழுந்தருளுமையாசுவாமி.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

சந்தேகம்வேண்டாமப்பா சமானமாய்த்தானுட்காரும்
உந்தனெண்மனப்படிக்கு உவந்துசொக்கட்டானாட
பந்தயம்வைப்பேனும் பயங்கொளாதெதிரிருந்து
விந்தையாஞ்சூதாட்டத்தை விளையாடவருகுவாயே.

வசனம்.

அகோவாரும் புஷ்கராஜனே நீசொக்கட்டானாடவேணுமென்கிற ஆசையோடு வந்தபடியால் உன்னிஷ்டப்படியே பந்தயங்கள் வைத்து ஆடுவோம் வாரும் புஷ்கராஜனே.

பொதுவிருத்தம்.

கைமாஞ்சேர்த்திடாமல் கட்டியவீட்டிற்குள்ளே
பொய்மலரின்றிக்காய்த்த குற்றமாங்காய்பரப்பி
பொய்யவதானமாகப் புரிந்திடுஞ்சொக்கட்டானை
மெய்யென்றுநளராஜன்றான் விரும்பியேஆடலுற்றான்.

வசனம்.

அஃதெப்படியென்றால் அர்சர்க்கரசனான நளமகாராஜன் சநிபகவானுடைய பலத்தினால் புஷ்கராஜன்சொல்லுக்கிசைந்து பஞ்சபாதகத்திலொன்றாகிய சூதை ஆடுகிறவிதங்காண்க.

சூதாடல்.

நளமகாராஜன்-சொல்வது.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

போடுறேனன் பாரும்-புஷ்கராஜா
போடுறேனன் பாரும்
போடுறேன்றுதலாட்டம் பின்னையார்தனக்கிது
ஆடுக்குங்குமப்பச்சை அந்தந்தவீடுதோய்த்து(போடு)



புஷ்கராஜன்சொல்-தரு.

நான்போடுறேன் பாரும்-நளராஜா
நான்போடுறேன் பாரும்
நான்போடுறேன்பாரும் நலமாய்விநாயகர்க்குத்
தான்போடுறேன்பகடை தானேதுவைந்ததிதோ(நான்)

நளமகாராஜன்சொல்-தரு.

இருக்காலும்பகடை யிதோ-எந்தனுக்கிப்போ
ஒருக்காலேவிழுகு திதோ
பெருக்காகவே யெட்டினால்-குங்குமம்பச்சை
பிசகாமல்ஜோடு கட்டினால்
சருக்காகப்பனிரண்டு சொல்லுமுன்போடுறேன்
பிரிக்காமல்நெருக்கியே பிசகாமலாடுறேன்(போடுறே)

புஷ்கராஜன்சொல்-தரு.

பனிரண்டு பனிரண்டுமே-விழுகிதோ
தனியாகத்துடிகொண்டுமே
கனியெடுத்தேன் பாரும்-விளையாட
இனியுஞ்சம்மதி கூறும்
மனிதர்வலுவோதெய்வ வலுவெனக்கிருக்கையில்
சநிதிசையிலமாகத் தானுண்டவர்செயலால்(நான்)

இதுவும்-புஷ்கராஜன்சொல்-தரு.

இந்தாட்டந் தோர்த்தாயே-எனதுகையில்
பிந்தாமற் பார்த்தாயே
வந்தாட்டம் கையாலே-தோர்ந்தபந்தயம்
வழங்குமென் கைமேலே
சிந்தாகுலமுமென்ன ஜெயிப்போமென்பந்தவிட்டு
சந்தோஷமாகப்பந் தயத்தைமுன்னேகொட்டு(நான்)

பொதுவிருத்தம்.

மத்திமமானசூதை மன்னவனாடும்போது
சித்தம்பேதலித்துமந்திரி தேரதகவலையுற்று

மெய்த்தவம்புரிந்தமாது மின்னிடைதமயந்திப்பெண்
பத்தினிசமுகந்தேடிப் பதறியேவருகின்றனே.

வசனம்.

இப்படி நளமகாராஜன் சநிபகவானென்னும் பாசத்தில் கட்டுண்டவனாய் சகலநீதிசாஸ்திரங்களையு மறந்து வஞ்சகமனத்தனான புஷ்கரனுடன் சூதாடுகலை மந்திரிகண்டு மனந்திகைத்து பெருமூச்செறிந்து தமயந்திசமுகத்திற்குவந்து சொல்லுவதுகாண்க.

மந்திரி-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

பைங்கிளிமொழியேஅம்மா பாவிபுஷ்கரனும்வந்தான்
சங்கையென்றுமல்ராஜன்சமதையாயவனோடேதான்
மங்களமில்லாச்சூதை மகிழ்ந்துபந்தயங்கள்வைத்து
இங்கிதமாகஆட இடர்வருஞ்சொன்னேனம்மா.

வசனம்.

அகோகேளும்மா தாயே நம்முடைய ராஜாவானவர் மதிமயங்கி புஷ்கரராஜனுடன் பந்தயம்வைத்து சொக்கட்டாடுகிறார் அதைப்பார்த்தால் நமக்கு ஏதோ விபரீதகாலமாகத் தோற்றுதம்மா தாயே.

தமயந்தி-மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

மந்திரியேராஜர்க்கு வந்ததோவிபரீதங்கள்
இந்தமாமொழியைக்கேட்க்க என்மனக்கலங்குதப்பா
அந்தமாஞ்சபையிற்சென்று அரசருக்குகந்தவார்த்தை
தந்திரமாகச்சொல்லி தடுத்திடாய்சூதாடாமல்.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மந்திரி நம்முடைய ராஜாவின் சமுகத்திற்குப்போய் நீதிசாஸ்திரங்களையெடுத்துக்கூறி சூதாடாமல்தடுத்துவாரும்பிள்ளாய்-மந்திரி.

மந்திரி-நளமகாராஜாவுக்குச்சொல்-விருத்தம்.

பார்தனிலனேகமன்னர் பண்பிலாச்சூதையாடி
சீருள்நகரம்நாடு செல்வமுமிழந்தார்சுவாமி
தாரணிமன்னராடார் தாங்கெட்டுக்கெடுக்கவித்தை
வீரனேயிந்தச்சூதை விளையாடவொண்ணாதையா.



வசனம்.

கேளுமையாசுவாமி ராஜராஜேஸ்வரா பூர்வத்தில் அநேகராஜர்கள் இந்த நிந்தையான சொக்கட்டாடி நாடுநகர முதலானவைகளையிழந்த அறுதியானார்கள் ஆகையால் தேவரீர் சூதாடுவதைநிறுத்தி எழுந்திருமையாசுவாமி.

மந்திரிசொல்-தரு.

இ:ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

நிறுத்துமையா-சொக்கட்டாடலை-நிறுத்துமையா
நிறுத்துமையாமுன்    இந்திரன்சூதினால்
பொருத்தகண்டதி    யுறுக்கிழந்தனன் (நிறுத்து)

வசனம்.

கேளுமையாசுவாமி முன்னாளில் தேவேந்திரனானவன் இந்திராணியுடனே சூதாடி தன்னுடைய அரசும் பதியு மிழந்தானேயா சுவாமி.

நளமகாராஜன்சொல் தரு.

ஏசடாமந்திரி-இவ்வார்த்தைகள் - என்னுடன்சொன்னாய்
ஏதடாமந்திரி    இவ்வுலகந்தனில்
சூதினையாடின    தொல்வேந்தரில்லையோ (ஏசடா)

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மந்திரி என்னைச் சூதாடவேண்டாமென்று தடுக்கவந்தாயே இந்தஉலகத்தில் முன்னிருந்த அரசர்கள் சூதாடினதில்லையோ அப்பாலேபோம்பிள்ளாய் மந்திரி.

மந்திரிசொல்-தரு.

சூதுவதென்ன    ஆடுமைமுன்னேநின்று
நீர்மொழிகூறலுற்றீர்    அந்த
வேளையறிந்து    விரைவாயமைச்சன்
விளம்புவதன்றோ    தனம்பாமலேபூமி
தாழ்மையில்லாமலே    வாழ்மையபெறுந்தர்ம
சாஸ்திரத்தின்படி.    தோற்றிடச்சொல்லுவேன் (நீவிர்)

வசனம்.

கேளுமையாசுவாமி அரசர்களுக்குத் தோற்றாமல் தன்பய்வருங்காலத்தில் மந்திரியானவன் தடுத்துச்சொல்லவேணுமென்கிற தருமசாஸ்திரத்தின்படி சொன்னேனையா சுவாமி.

நளமகாராஜன்சொல்-தரு.

சொன்னதிறலென்ன அன்னீதமோயிந்த
ருசைநிறைத்தமென்றே-நீ
பன்னுமறைகளையென் னெதிரேநீட்டுகிற
தென்னவொடுக்கமில்லாமலே
கன்னியர்கள்வலை தன்னிலகப்படுங்
காமுகர்போலவென் னுமல்வருத்துறாய் (ஏதடாம)

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மந்திரி சூதினாலே மோசம்வருமென்று நீதிமார்க்கங்களை கொஞ்சமாகிலும் அடக்கமில்லாமல் சொல்லவந்தாயே நானென்னஸ்திரீமயக்கத்தினாலேசூதாடிசெல்வமிழந்துபோகிற காமுகனா அப்பாலேபோம்பிள்ளாய் மந்திரி.

மந்திரிசொல்-தரு.

வருத்தமில்லாமல் சிருக்கமுடனிந்த
வையகமாண்டிருந்தோம்-நீர்
பொருத்தமுடியும் அரசுங்கனமும்
பொருந்தும்பதியும் இருந்துமில்லாமலே
வெறுத்துமதியுந் தருத்துடனெங்களை
விட்டகலச்செய்நீ தொட்டதுகாணிது (நிறுத்த)

வசனம்.

கேளுமையா சுவாமி இந்தப்பூலோகமுழுதுஞ்செங்கோல்செலுத்தி எங்களை ஆதரித்துவந்த நீர் இப்போது பரதேசியாகவிட்டுவிடுவீர்போல் தோற்றுதையா சுவாமி.

பொதுவசனம்.

இப்படி மந்திரியானவன் சகல நீதிசாஸ்திரங்களைச்சொல்லி டுத்தும் நளமகாராஜன் சநிபலத்தினால்கேளாமல் ஞாஷித்தாத் தாத்தின படியால் மந்திரியானவன் மனவருத்தத்துடனே தமயந்தியினிடத்திற்குவந்து சொல்லுவதுகாண்க.

மந்திரி-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

செந்திருமாதுபோன்ற தேன்மொழியாளே நானும்
உந்தனல்லுனையைக்கேட்டு ஓடியேவந்தனர்க்கு



17

விந்தையாயுலகந்தி வினய்பியுங்கெட்டிடாமல்
எந்தனைமுனியத்தாழ்ந்து இங்குநான்வந்தேனம்மா.

தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

தாயேதமயந்தி ஞாயமினியென்னசொல்வேன்-நளச்
சக்கிரவர்த்திசெய்த அக்ரமத்துக்கென்னசொல்வேன்
மாயச்சூதாடவேண்டா மத்தியமென்றேன்-அந்த
மன்னவரொந்தனை கோபிக்கவணங்கிநின்றேன்
ராஜன்மொழிதள்ளி மோசம்வருமென்றுசொல்ல-மன்னர்
தாழுவேதன்னை வாளையுருவினர்கொல்ல
காசினியாண்டிடும் ராஜர்க்குமேதகாதென்றேன்-நான்
சத்தியம்வித்தை யனந்தையுங்காட்டிநானின்றேன்
கண்டுவணங்கினன்-தெண்டனிட்டேயிருவந்தேன்-தெய்வ
கற்பனையால்வரும் அற்பலமென்றுனம்நொந்தேன்
பொல்லாதபுஷ்கரன் தன்னுடனேமிகச்சூது-அவர்
பிரியமாகவே தேடிக்கொண்டாரையோவாது
சல்லாபமாகிய தன்னரசுமிண்டாரே-எல்லாஞ்
சகலமும்புஷ்கர ராஜனேஒப்புக்கொண்டானே

வசனம்.

அகோவாருமம்மாதாயே நம்முடைய இராஜாவானவர் நானென்னசொல்லியுங் கேளாமல் பாவியான புஷ்கரராஜனுடனே சொக்கட்டானாடி நாடு நகரம் ரதகஜதுரகபதாதி முதலான சகல சாம்பிராச்சியங்களையுந் தோற்றுவிட்டார் இதையோசிக்குமிடத்தில் சநியவனுடைய மாய்கையாயிருக்குதம்மா தாயே.

பொதுவிருத்தம்.

மந்திரிசொல்லக்கேட்ட மாத்திரந்தமயந்திப்பெண்
சுந்தரவதனஞ்சோர்ந்து அடிதனைமண்ணில்வீழ்ந்து
சிந்தையுங்கலக்குப்போது சேடியருபசரிக்க
எந்தனுக்குகர்த்தநாதா என்றுமேபுலம்புவாளே.

தமயந்திபுலம்பல்.

கரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயோவிதுக்கென்னசெய்வேன்-மந்திரி
ஆருடனேசொல்லி உய்வேன்

அநுபல்லவி.

வையகத்தரசர்கள் வைத்தோமுகதாம்போக
வருந்திநடக்கலாச்சே வாழ்வரசும்போச்சே(ஐயோ)

சரணங்கள்.

பாராளும்வேந்தன் விடம்-புஷ்கரன்வந்து
நேராய்ச்செய்தானே அடம்
ஊரான்குலைநாடித் தோராமல்ராஜனுட
சீராய்ப்பகைமுடித்தான் சீராச்சனிபிடித்தான் (ஐயோ)
சிக்காரமுடி. சூட்டியேராச்சியபார்த்து
செய்தெங்கும்புகழ் நாட்டியே
பொங்கமுடனேவாழ்ந்த பொல்லாச்சூதினால்தாழ்ந்த
பங்கப்படுத்தவேதான் படைத்தானேபிரம்மதேவன்(ஐயோ)
நாடுநக இழந்தோம்-பஞ்சைகள்போல
நாமுமனதயர்ந்தோம்
பாடுபடவும்சொந்தப் பாலருடனேயிந்த
காடேகும்படிநிந்தை கலிராஜன்செய்தவிந்தை(ஐயோ)

பொதுவிருத்தம்.

சிந்தையுமெலிந்துவாடித் தேன்மொழிபுலம்பியேக்கி
தந்தைதனூருக்கேகத் தனயனாயனுப்பவேண்டி
அந்தமாஞ்சபையிற்சென்று அழைத்தநல்லுரையைக்கேட்டு
இந்திரசேனன்றானு மெழுந்திதோவருகின்றானே.

வசனம்.

அந்தப்படியென்றால் தமயந்தியம்மனவள் பிரலாபித்து இந்த சமயம் வாறுண்டாய மாய்கையென்று தனக்குத்தானேதேறி நம புத்திரர்களை தேரின்மேலேற்றி விதர்ப்பதேசத்திற் கனுப்பிவிடுதலே நலமென்று தீர்மானித்து அழைக்க இந்திரசேனன் வருகிறவிதக்காண்க.



இந்திரசேனன்வருதல்.

சென்னிதனில்மகுடமின்னப் பணிகள்பூண்டு
திகழ்குழைப்பால்நிறைகுண் டலங்களிட்டுக்
கன்னல்மதன் றனக்கிணையாமிவனென்றேத்தக்
கவரிகுடைவாத்தியமெக்காளந்தன்ன
தன்னயமாய்க்கையினில்வில்லம்புகொண்டு
தாரியர்கள் நடனமிடக்கவிஞர்பாட
மன்னர்குலநளராஜன்சபையைநாடி
மகிபனிந்திரசேனனிதோவருகின்றானே.

கரு-இ-ம்-கலியாணி-ஆடதாளம்.

பல்லவி.

சீலநளன்மகிழ் பாலனெனுமிந்திர
சேனன்சபையில்வந்தானே.

அநுபல்லவி.

வாலைமகிழுந்தந்தி தூரத்திலதமின்ன
மலைநிகரொத்தபுய மதனிற்பணிகள்தான்மின்ன
பாலொத்தமொழியைப்பேசி ஜாலத்துடன்கையைவீசி
காலத்தையறிந்துவெல்ல கோலத்துடனேசொல்ல(சீலநளன்)

சரணங்கள்.

சூரத்தனமதனை சேர்த்துடனேகொண்டு
ஆரபாரத்துடன்சென்று
சீராய்வீரவெண்டையம் நேராய்க்காலிலசைய
திக்குகள் நடுக்கவும்நின்று
கூர்வடிவில்லம்புகையில் குலுக்கப்பணிகள்மெய்யில்
கோலஜாலத்துடன்கூடி வாலைப்பருவர்நீடி
கூறுநளன்சபையில் பேருடையிலுடனே(சீலநளன்)
தங்கமகுடமின்ன எங்குங்குடைகள்தாங்க
பொங்கமாமதனென்ன
திங்கள்குடையப்போலே துங்கமாயொருக்காலே
செல்லுங்கீர்த்தியென்மேலே
தங்கையர்கிதம்பாட எங்கும்புகழ்கொண்டாட

நாகரிகத்துடன்மன்னர் போகாவந்தனையென்ன
மங்களகல்யாணகுண இங்கிதநய்த்துடனே (சிலனள)

வாசகந்தங்கள்பூசி அசிறம்பல்னிரைவீசி
பாசமாதர்கள்பேச
வாசற்கட்டியர்கோடி வணங்கித்துதிகொண்டாடி
வர்ணக்கவரிவீச
தேசாதிதேசமன்னன் வாசகமதுகேரண்டு
சிங்காரமதனைத்தேடி பொங்கியேமகிழ்ச்சிகூடி
தேசிகனனன்சமுகத் தாசையுடனேசமுக (சிலனன்)

இந்திரசேனன்சொல்-வசனம்.

அகோ சரணஞ்சரண நம்மாதாயே அடியேனை அழைப்பித்தகாரிய மின்னதென்று தெரியப்படுத்தவேண்டுமம்மா தாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

கருதியவுனதுதந்தை காசினியரசையெல்லாம்
பொருதியேசூதிலே புஷ்கரன்வெலித்துக்கொண்டான்
உருகுதேசிந்தைவாடி யுங்களைப்பிரியவிப்போ
வருவிதியறிகிலேனே மைந்தனேயென்செய்வேனே.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

மைந்தனே நானென்னசெய்குவேன்-பட்டமுங்கட்டி
வைத்துநான்கண்டாலேஉய்குவேன்

அனுபல்லவி.

இந்தநாளனீதமாக உந்தனைப்பிரிந்துபோக (மைந்த)

சரணங்கள்.

மிக்கதோர்புரவியா யானையும்-ரதங்களுடன்
வெருதிளாகிய சேனையும்
பொக்கிஷமாளிகை மனையும்-சூதாற்பறித்துப்
புஷ்கரன்செய்தவஞ் சனையும்-ஐயோ நானினி
மக்களைமன்னவனோடு காடியேசெல்லுவேன்காடு
தக்கவுன்பாட்டனார்வீடு தன்னிலேநீசென்றுகூடு (மைந்த)



தாயுடன்தந்தையைப் பிரிந்து-போகுரேயென்று
தயங்கிடாதேமன முழிந்து
காயமோடிருந்தாற் பரிந்து-பொன்முடிசூடிக்
காசினியாளலா மிருந்து-இப்போநான்சொன்ன
நேயமாமொழிதள்ளாதே நெஞ்சினிற்துயர்கொள்ளாதே
வாயினாலொன்றும்விள்ளாதே வஞ்சனையிதென்றெண்ணாதே
மைந்தனே
மன்னவருன்தந்தை மதியே-இந்தச்சூதாட
வந்ததுநம்தலை விதியே
இன்னமென்வருமோ சதியே-அப்பாமகனே
ஏகுவிரென்தந்தை பதியே-மயங்கிடாமல்
பொன்னின்ரதத்திலேறிப் போய்வாருமனந்தேறி
தன்னிலேவிசனமாறி சங்கராபரணக்கூறி (மைந்த)

இந்திரசேனன்சொல்-விருத்தம்.

அன்புடனெங்களைப்பெற்ற அன்னையேசொல்லக்கேளாய்
துன்பமேவந்தால்பெற்ற சுதனையும்பிரிவாருண்டோ
தென்புடன்பாட்டனார்க்குச் செல்லெனச்சொன்னீர்நாங்கள்
முன்புசெய்வினையோ அம்மா மொழிந்ததும்மறந்திடமே.

இந்திரசேனன்சொல்-தரு.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

தாயேயென் னம்மா பிரிந்துபோகத்
தகுமோடி அம்மா
ஓயாமலுனைத்தேடி உள்ளம்பதறிவாடி
பேரயென்பாட்டனைக்கூடி பிழைத்திருப்பதென்றடி
தாயேயென்னம்மா

தமயந்திசொல் - தரு.

மாலாகன் மணியே-உத்தமனை
பதறாமல் தனியே
ஆலயமதையுகந்த அன்னைகற்பனையிதக்
காலமதனைவெல்லும் காரணமேதோசொல்லடா (பாலா)

இந்திரசேனன்சொல்-தரு.

காரணமாவ தேதும்-அம்மாநீயுங்
கருத்தாக ஓது.

தாரணியிறந்ததோ தயவென்னமறந்ததோ
வாரணந்தேர்பரி வருசேனையொழிந்ததோ (காரண)

தமயந்திசொல்-தரு.

அரசனைக் கண்டான்-புஷ்கரன்சூதால்
அவனியைக்கொண்டான்
பரதேசியாகவே பதியைவிட்டேகவே
தருவனமெய்திடச் சண்டாளஞ்செய்திட (அரசனை)

இந்திரசேனன்சொல்-தரு.

அவன்றலைகொய்வேன்-கலியின்றுன்பம்
அணுகாமற் செய்வேன்
கவலைப்படுவதுண்டோ காரியமேதுகொண்டோ
புவனமுழுதுஞ்சேரும் பூவையேவிடைதாரும் (அவன்)

தமயந்திசொல்-விருத்தம்.

சிறுபிள்ளைபுத்தியாகச்செப்பினையிந்திரசேனா
உறுதியாயுக்களைய குலகொருகுடையின்கீழே
அருமையாயரசுசெய்தா ராக்கினைச்சக்கரத்தால்
பொறுமையேபெரிதாமெந்தன் புத்திரனேபோகலாமே.

வசனம்.

கேளுமப்பா இந்திரசேனா சிறுபிள்ளைத்தனமாகப்பேசாதே உங்கள்தந்தை நவகண்டத்தையும் ஒருகுடைநிழலில் அரசாட்சிசெய்து இப்போ புஷ்கரராஜனுடனே சூதாடி சகலபாக்கியங்களையு மிழந்ததை ஆலோசிக்கில் நாம் முன்செய்த தீவினையாகத் தோற்றுது ஆகையால் பொறுத்தவர்பூமியாள்வாரென்னும்வாக்கியத்தின்படி நமக்கு நற்காலம்வருமளவும் நீ உனது தங்கையாகிய நளாயினியோடு தேரிலேறிக்கொண்டுபோய் உங்கள் பாட்டனார்வீட்டில் சுகித்திருமப்பா இந்திரசேனா.

பொதுவிருத்தம்.

விரியாதத்திலேதான் விளங்கவேபரிகள்பூட்டி
சிருடனலங்கரித்துச் சில்லேற்றிக்கொடிகள்கட்டி
கார்குழல்தமயந்திப்பெண் கருதினபடிக்குத்தானே
சாரதிதேர்நடத்தத் தனயருமேகின்றாரோ.



வசனம்.

இந்தப்பிரகாரந் தமயந்திசொன்னதைக்கேட்டு "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லையென்னும்" நீதிநூலின்படியே இந்திரசேனன் பாட்டனார்க்குப்போகச் சம்மதித்து நளாயினியென்னுந் தங்கையுடனே தேரேறி விதற்பதேசத்திற்குப்போகிறவிதங்காண்க.

தரு-இ-ம்-சௌராஷ்டகம்-அடதாளம்.

பல்லவி.

ஜெயநளராஜ இரணருளிந்திர
சேனன்தேரேறினனே.

அநுபல்லவி.

வயிரநவமணிகள் மதிகதிர்போன்றிட
வந்தபவுஷணனும் வாம்பரிதாண்டிட (ஜெய)

சரணங்கள்.

அன்னையேஉந்தனைவிட்டுப்-பிரிந்திட
லாச்சுதோவென் றழுது
பின்னையில்லாமலேபோய்-வாருமென்று
விடைதருகதி தொழுது
பொன்னொளிமேவுந் தமயந்திவல்லி
புத்திரசிகாமணி சித்தமகிழச்சொல்ல (ஜெயநள)

மழைமுகக்காணுப்பயிர்போல்-வாடியே
மதிமுகமுஞ் சோர்ந்து
பழகுமந்திரிமார்கள்-துரைமன்னர்
பாலரின்கண்க ளூர்ந்து
நிழல்பெறுங்குளிர் சோலைமணமலர்
நிறைந்தவாழ்நன் னிடதபுஜபல (ஜெயநள)

தாயுளநட்டாமல்-பாட்டனார்தேசஞ்
சகுதியிற்செல்ல வென்று
நேயமாய்ச்சாரதிதேரை-நடத்தும்
நிமிஷமெனப் புகன்று
வாய்வேகங்கொண் டெழும்பப்புரவியும்
வாரிபோலதிரவே மண்டலமுங்குகையும் (ஜெயநள)

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் இந்திரசேனனையும் நளாயினியையும் தேரின்மீதேற்றி தனது தகப்பனான வீமராஜனிடத்திற்கனுப்பிவிட்டு மக்காக்கிரந்தையா யிருக்கும்போது நளமகாராஜனுடனே சொக்கட்டாடிக்கொண்டிருந்த புஷ்காராஜன் சொல்லுகிற விதங்காண்க.

புஷ்காராஜன்சொல்-விருத்தம்.

நிக்கனேநளேந்திரபூபா நீயோண்டாட்டந்தோற்றாய்
வைத்ததோர்பந்தயங்கள் வாவில்லையெந்தன்கையில்
பத்தியாயானைசேனை பரிவாரமந்திரியோடு
முத்திரைபொக்கிஷங்கள் முன்னுகையொப்பிப்பாயே.

வசனம்.

அகோவாரும் நளமகாராஜனே நீர் இரண்டாட்டமாடித் தோற்ற நாடு நகரம் யானை குதிரை தேர் சேனை பொக்கிஷமுதலிய சகலமும் ஒப்பித்துப்போம் ராஜனே.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

எந்தன்ராயசக்காரா நீ இப்பதுட்டனுரைக்கக்கேளாய்
அந்தமாநிடதமீதசம் யானைகள்சேனையோடு
தந்திரபொக்கிஷங்கள் சகலபூஸ்திதிகள்தம்மை
இந்தபுட்காராஜர்க்கு இட்சணமொப்பிப்பாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராயசக்காரா நம்முடைய நாடு நகரம் யானை சேனை பொக்கிஷமுதலிய சகலமும் இந்த புஷ்காராஜனுக்கு ஒப்பித்துவிடும்பிள்ளாய் ராயசக்காரா.

பொதுவிருத்தம்.

நளராஜன்சீமையெல்லாம் நலமுடனிழந்தபின்பு
வளர்-திநிடதர்கோனும் வனவாசமாகச்செல்லத்
தளர்விலாச்சநியன்செய்த தகாதவஞ்சனையினாலே
நளன்பதியதனிட்புட்கராஜனுமாண்டிருந்தான்.

வசனம்.

இந்தப்பிரகாரம் ராயசக்காரன் சகலமும் ஒப்பித்தபின்பு புஷ்காராஜன் சந்தோஷித்து நளமகாராஜனுடைய சகலசாம்பிராச்சியத்



தையும் சநிபகவானுடைய அருளால் அநுபவித்துக்கொண்டிருந்தானென்றுகொள்க.

இதுவும்-பொதுவிருத்தம்.

பதியுடனரசமந்திரி பணிதனம்பரிவாரங்கள்
மதிகப்பிச்சூதால்தோற்று மன்னவன்தலைகுனிந்து
விதியினாற்சனியன்செய்த விதமென்றுமனதிலெண்ணி
சதிமோசமானபின்பு தமயந்தியிடம்வந்தானே.

வசனம்.

அஃதெப்படியென்றால் நளமகாராஜன்சநிபகவானுடைய கொடுமையால் மதிமயங்கி பஞ்சபாதகத்திலொன்றாகிய சூதை சிரேஷ்டமென்றெண்ணி புஷ்காராஜனுடனே ஆடி சகலசாம்பிராச்சியத்தையுந்தோற்று இது விதிப்பயனென்று தீர்மானித்துக் தலையிரக்கங்கொண்டு தமயந்தியிடத்திற்குவந்து சொல்லுகிறவிதங்காண்க.

நளமகாராஜன்-தமயந்திக்குச்சொல்

கலித்துறை.

கண்டோர்க்கிருவுட லாவியொன்றானவென்கண்மணியே
விண்டானவற்குமுயரயன்செய்யும்விதியதனால்
உண்டானதுநின்றிடபந்தயம்வைத்தென்னுடைமெல்லாந்
தண்டாளபுஷ்கரன்றன்பறித்தானடி கையலரே.

[illegible]ஜன்சொல்-தரு.

இ-ம்-நவரோசு - ஆதிதாளம்.

அதிருப்சித்திரமே-தலை விதியால்மதிமயங்கி-நான்
அரும்புவியனைத்து-மவ ஞரும்படியானேன்.

தமயந்திசொல் - தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

எம்பிராணநாதனே கனிந்ததுயரம்-மனதில்
முன்பாய்செய்த தவப்பலனின்று
மூண்டுதேபுவி யாண்டுவாயே(எம்பிரா)

நளமகாராஜன்சொல்-தரு.

துரையானசெங்கோலும்-கன கிரையானகவேலும்
சூதாலவன்பறித்தா-னெந்தன் தொல்பதிதனைவிடுத்தேன் (அதி)

தமயந்திசொல்-தரு.

விடுத்தாலென்ன கொடுத்தான்சநி
விதிக்கந்திட லாமோ

அடுக்கோர்தலைக் கெடுத்தபாவி
அழிந்தவன்போ காஞே (என்பி)

நளமகாராஜன்சொல்-தரு.

விதியேதினிசதியேதினி அதியாசைகொண்டதனல்-ருதை
விருப்பும்படிவளர்புஷ்கரன் விருதாவெற்றிக்கொண்டான்(அ)

தமயந்திசொல்-தரு.

விருகோசதி கிருபையாலிந்த
விதஞ்செய்தாஞே அறியேன்
பெரிதாகிய மறுதாய்கண்ட
பிள்ளைபோல்கேலி கொள்ளலாமோசுவாமி (என்பி)

நளமகாராஜன்சொல்-தரு.

கொள்ளுங்கணிவுள்ளந்தனில் எள்ளளவுமில்லையே-உன்னைக்
கூட்டிநடந்தேகியெந்த காட்டில்திரிந்திடுவேன்(அதி)

தமயந்திசொல்-தரு.

காடேகுவதேஞே என்தந்தை
நாடேகிநாமிருப்போம் சுவாமி
கூடாய்ப்பயி ரவிநவரோசும்
ஜோடாய்மொழிந் திருந்துவாழலாம் (என்பி)

தமயந்திசொல்-கலித்துறை.

பூதேவிருழும்பஞ்சாயகோடி புவனமன்னர்
நீதேவனென்றுவந்தேகைதொழுதுநீங்காதிருக்க
சீதேவிவாசத்திஞலுலகாண்டு திரும்பியெந்தன்
நாதாவரும்விதியார்செயலோசொல்லும்நங்கையர்க்கே.

வசனம்.

அகோவாருமையாசுவாமி செல்காலம் நிகழ்காலம் எதிர்கால மென்னும் மூன்றுகாலங்களையும் அறிந்திருந்தும் நீர் இப்படி விசனப்படலாமா இது சநிபகவானுடைய செய்கையேயொழியவேறல்லஉம்முடைய தனலட்சுமி புஷ்கரனிடத்திற்போனாலும் தைரியலட்சுமியில்லையா விசனப்படவேண்டாமையா சுவாமி.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

சட்டமாயழகுபூண்ட தமயந்தியயிலேகேளாய்
விட்டாரெழுந்ததாலே விதற்பதேசத்தைநோக்கித்



திட்டமாய்ப்பாலரோடு செல்லுவாய்சீக்கிரத்தில்
கஷ்டகாலங்கள்தீரக் கன்னியேவனம்போய்வாரேன்.

நளமகாராஜன்சொல்-தரு

தரு-௩-ம்-காம்போதி-ஆதிதாளம்.

கன்னியேநான்வனம்போறேன் கஷ்டகாலந்தீர்ந்திடவே
உன்னுடதாய்மனைக்கேகும் உறுதியாய்ப்பெண்ணே

தமயந்திசொல்-தரு.

உறுதியாயின்றளவுநான் உம்முடன்கலந்திருந்து
பிரியமனக்கூடுமோதான் பிராணநாயகா

நளமகாராஜன்சொல்-தரு.

தாயகிதமயந்தியே நல்லரசிழந்தபோதே
நாயகமேகூடாதெந்தன் கதையலாசே

தமயந்திசொல்-தரு.

அரசிழந்துபோனதினு லையனேயுமைப்பிரிய
சரசமோசொல்லுவீரெந்தன் சாமிநாதனே

நளமகாராஜன்சொல்-தரு.

நாதனருளால்வந்த காதலருடன்வனத்தில்
வேதைகளாகித்திரிய வேணுமோபெண்ணே

தமயந்திசொல்-தரு.

பெண்ணையும்பிள்ளையுமென்னைப் பெற்றதாய்மனைக்கனுப்பி
இன்னமையும்முடன்வனஞ் செல்லுவேன்மன்னு

நளமகாராஜன்சொல்-தரு.

செல்லுவாயுன்தந்தையிடம் தேன்மொழிமாதேநமக்கு
நல்லகாலம்வந்தவுடன் நாமுங்கூடுவோம்

தமயந்திசொல்-தரு.

கூடதீர்வந்தெந்தகப்பன் நாடோச்சியங்களெல்லாம்
ஈடில்லாதாகசெய்து இருக்கலாமையா

நளமகாராஜன்சொல்-கந்தார்த்தம்.

விதியின்பயன்களெனையுந்தூடர்ந்து விகடம்புரிந்தகலியால்
மதியுங்கலங்கி மணியும்புனைந்த மகுடம்புனைந்த அரசும்
பதியுந்திரண்ட மதிமந்திரிசேனை பலவும்பிரிந்துதனியே
புகமன்றல்செய்த உன்தந்தையூரிற்

போனூற்பெருமைதருமோ-இந்தவேஷம்
ஆன்றக்கக்ஷிஷம்வருமே
மானமில்லாமலே நானுமுன்னேறெட்டிர்
கோனெழில்விமனூந் தானாசாள்கையில் (போனூற்)

தமயந்திசொல்-கந்தார்த்தம்.

சல்லாபமான முடிமன்னர்வந்து சரணம்பணிந்துமகிழ
உல்லாசமாக மணியாசனத்தில் உலகோர்குடைக்குளாள
எல்லாமிருக்க வருகேனெனச்சொல் லியல்போலவர்க்குமிலையோ
மல்லார்புயத்தி னாசேவிதற்ப

மாநகர்தனிற்சென்றதால்-நம்மையொருவர்
ஈனஞ்சொல்வார்களுண்டோ
மானரிவாழ்புலி கானகமேகுவ
தேனெனதாருயி ரானகுணாளனே (மாநகர்)

நளமகாராஜன்சொல்-கந்தார்த்தம்.

ஒயிலேமிகுந்த நடையன்னவஞ்சி யுடலேயிளைத்தவர்களும்
அயலோர்மனைக்கு மிகவாடிவெய்த லழகோநமக்குமுறையோ
மயிலேதனித்து வனமேநடக்க மகிழேயெனக்குவிடைநீ
கயலேபழிக்கும் விழியாய்துணிந்து

கண்ணேயுன்தாய்மனைசேரும்-தமயந்திப்
பெண்ணேவிடையினிதாரும்
கண்மணியேயிது உண்மையதாமென
எண்ணியுன்தந்தைநகர் நண்ணிடுவாயென்னிரு (கண்)

தமயந்திசொல்-கந்தார்த்தம்.

இடியோசைகண்ட அரவாய்மெலிந்து இருகாள்பணிந்துவெழிலார்
மடமானெனச்சொல் தமயந்தியன்பு மறவாதயெந்தன்ராசே
விடைதாருமென்று எனேவேமொழிந்த விதமீதெனத்தெரிகிலேன்
அடியாளுமுந்த னடியைப்பிரிந்து

அரைநாழிகையுமுய்வேனோ-உம்மைப்பிரிந்து
தனிமிகிலென்செய்வேனோ
அரசுமிழந்திட மருவியிருந்திட
இருவர்பிரிந்திட உரைகள்பகர்ந்திட (அரை)



விருத்தம்.

போவேனோஉம்மைவிட்டுப் பிரிந்துநானிருக்கமாட்டேன்
ஆவலாய்ப்பாலர்தம்மை யனுப்பினேன்விதர்ப்பதேசம்
பூவுலகாளுமன்னு பிராணநாயகனேயெந்தன்
சீவனுஞ்சீர்பாதத்திற் செலுத்துவேனுள்ளமட்டும்.

வசனம்.

கேளும் என்பிராணநாயகா நமது குழந்தைகளை எனதுதகப்பனுகிய வீமராஜனிடத்திற் கனுப்பிவிட்டேன் இனிமேல் என்னுடையபிராணனிருக்கும்வரையில் உம்மைப்பிரியேனையாசுவாமி.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

அன்னீதச்சொன்னையாடி யான்வனம்போறேனென்றால்
என்னுடன்வருவேனென்று ஏக்கியேமயங்குகின்றாய்
அன்னமீதேறும்வேத னமைத்ததுவீண்போகாது
கன்னியேநகரம்விட்டுக் கானகமேகுவோமே.

வசனம்.

கேளும்பெண்ணே தமயந்தி நான் வஞ்சனையான சூதாடி நாடுநகரமெல்லாந்தோற்று காட்டுக்குப் போகிறேனென்றால் நீயும்வருகிறேனென்று வருந்துகிறாய் பிரமன்விதித்த விதியை யாவரால் விலக்கக்கூடும் இனி நாம் இந்தநகரத்திலிருக்கிறது சரியல்ல வனத்திற்குப்போவோம் வாரும்பெண்ணே தமயந்தி.

கரு-இ-ப-பாசு-ஆதிதாளம்.

பல்லவி.

வன்னமயிலே அன்னமே-இனி
வந்திடுவாய்வனமேகுவோம்

அநுபல்லவி.

இந்நகர்தனி லென்னரசையு
மிழந்துநானினி யிருக்கவோ-மன
தேர்க்கவே-பயந் தீர்க்கவே-நம்மைக்
கார்க்கவே-இந்த பார்க்குள்ளேயுண்டோ (வன்ன)

சரணங்கள்.

வாசமாகியமாளிகைவிட்டு வேஷமாறியேவந்ததும்-இக்கு
நேசமானவரொருவரும்வந்து பேசிடாமலேயிருந்ததும்-பசி

நீடவே-முகம் வாடவே-எந்தன்
கூடவே-துய ரோடவே-பெண்ணே (வன்ன)

காட்டுக்கிழங்குஇலைகளுண்டுமே வாட்டும்பசியைத்தீர்க்கலாம்-இந்த
நாட்டிற்காணாதஅதிசயங்களைப் பேட்டியாகவேபார்க்கலாம்-அடி.
நங்கையே-என்ன சங்கையே-சதி
வங்கையே-தீர மங்கையேயிப்போ (வன்ன)

கோட்டைவாசலும்நகரங்கடந்து பாட்டையில்வந்துகூடியே- மன
நாட்டமுடனேபரசுராகம் சூட்டும்பதங்கள்பாடியே-நம்மை
நாடியே-சதி தேடியே-மிக
மோடியேசெய்து கூடியேவந்தான் (வன்ன)

பொதுவிருத்தம்.

ஓட்டியேசதியன்றனு முச்சாயமாயிருந்தான்
கோட்டைவாசலைக்கடந்து கொற்றவனுடனேமாது
பாட்டைமேல்வருகும்போது பலஅவசகுனங்கண்டு
பேட்டியாய்த்தடைகளாகப் பெண்மயிற்குரைசெய்வானே.

வசனம்.

அஃதெப்படியென்றால் சநிபகவானுடைய வஞ்சனையினால் நளமகாராஜன் நாடுநகரமுதலியவற்றை யிழந்து தமயந்தியுடனே காட்டிற்கேகும்போது பல அவசகுனங்கள்காண அதை தனது நாயகிக்கு விவரித்துச்சொல்லுகிறவிதங்காண்க.

நளமகாராஜன்சொல்-தரு.

இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

பதியைவிட்டுநாம்வரும்போது ஒற்றைப்
பார்ப்பானெதிரேவாரான்பாரும்பெண்ணே
சதுர்குலந்தவனத்தில்வருகையிலே குயவன்
தட்டோடுநாவிதன்பாரும்பெண்ணே
வெறுங்குடத்தைக்கொண்டுமுன்னேவாரு ளொருத்தி
விரிந்ததலையுடன்வாரான்பாரும்பெண்ணே
சிறுமையாகவனத்தில்வரும்போது எதிரே
திங்காகவிறகுதலையன்வாரான்



24

இவ்விடத்தைவிட்டுவருகையிலே பெண்ணே
என்னெய்க்குடமெதிரேவருகுதையோ
வல்லமையானகெருடப் பட்சியிதோ
மாறிவலமாகப்போகுதையோ
கோட்டானொடுஆந்தைகாகங்களும் பெண்ணே.
குறுக்காகவேகுதிமரிக்குதையோ

பொதுவிருத்தம்.

இப்பொழுதுநமக்கெதிரேசகுனங்கண்ட
இடரேதுசொல்லுமெனத்தமயந்திப்பெண்
தப்பிதமொன்றில்லையிதஞ்செய்யுமென்று
தைரியமுடன்துணிந்துயிருபேருமாக
எப்பொழுதுநமைக்காக்கயீசன்பார
மெனவிரண்டுயோசனைதூரங்கள்சென்று
அற்புதமாங்கானிலுமாமலையிலுள்ள
அதிசயத்தைத்தேவியர்க்கு அருள்செய்வானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சகுனத்தடையாக தமயந்தியானவள் மதிமயங்கி இதன்பலனென்னவென்றுகேட்க நளமகாராஜன் நன்மையேயென்று தைரியவார்த்தைகள்சொல்லிக்கொண்டே இரண்டுயோசனைதூரங்கடந்து அங்குள்ள நெருங்கிய காடுமலைகளின் அதிசயத்தை விவரிக்கும்விதங்காண்க.

நளமகாராஜன்சொல்-திபதை.

இ-ம்-முகாரி-

கண்ணிகள்.

வெண்ணைவனங்கள்தன்னைப்பாராய்-பெரி யோர்கள்தரிசனம்
பெற்றிடலாமினி-சற்றிடம்வாராய்
தண்ணீர்க்குளமனேகமங்கே-பசி தாகந்தெளிந்திடச்
சாப்பிடலாங்கனி-தோப்பினிலிங்கே
மானுங்கலைகள்விளையாடும்-பஞ்ச வர்ணக்கிளிகள்தன்
வார்த்தையினால்துயர்-தீர்த்திடக்கூடும்
எனப்புலிகள்சிங்கம்யானை-காட் டெருமைகள்
எங்கெங்கும்வாழ்மலை-மங்கையகானே

அந்தமலையின்முநிவோர்கள்-நிதம் அன்புடனேயிருந்
தாகாசவாசிகள்-யோகஞ்செய்வார்கள்
இந்தவழியயோத்திக்கேகும்-விதர் பாபுரிவிம
னிருக்கும்பதிக்குச்-சுருக்குடன்போகும்
முன்னேதெரியுமபார்சோலை-அதில் வேதவியாசரும்
முக்கியமுடன்செய்யுமெக்கியசாலை
பின்னேதுடர்ந்துவழிகூடி-நடந்து முகாரியைப்
பேதையரேநீயுங்-காதலாய்ப்பாடி.

பொது-விருத்தம்,

மன்னவருடனேமாது மலைவளந்தான்கண்டேக
இன்னமுமிடர்விளைக்க எண்ணியேசநியன்றானும்
தன்னிகரில்லாரூபி தமயந்திகாணமுன்னே
அன்னத்தைப்பழிக்குமன்ன மாகியேவருகின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் நளமகாராஜனும் தமயந்தியும் நெருங்கியகாட்டிற்போகும்போது சநிபகவான் இவர்களுடைய வஸ்திரத்தைப்பறிக்கவேண்டுமென்று அன்னப்பட்சியாய் தமயந்திமுன்னே வருகிறவிதங்காண்க.

தரு-இ-ம்-சவுராஷ்டகம்-ஆதிதாளம்.

வசனம்.

அன்னப்பட்சியும்வந்ததே-தமயந்திமுன்
அன்னப்பட்சியும்வந்ததே

அநுபல்லவி.

மன்னனனுடன் உன்னதக்காடுசேர்ந்த
கன்னியுடனமுன்ன அன்னிதஞ்செய்யவிந்த (அன்ன)

சரணங்கள்.

நீடுபுகழ்க்கொடியும் சூடுமணிமுடியும்
தேடும்பொருள்கெடுத்தே காடுதனில்விடுத்த (அன்ன)
கன்னிமனங்களிக்க உன்னிச்சிறைவிரித்து
என்னிட்டகைவிளாய அன்னல்துகில்களைய (அன்ன)
சுந்தரத்தமயந்தி சிந்தைமகிழ்ந்துவந்தி
முந்திவிடைகொடுக்க வந்துதனைப்பிடிக்க (அன்ன)



தமயந்திசொல்-கொச்சகம்.

நீருமெனக்குமுன்னம் நிர்ணயமாய்த்தூதனுப்பச்
சீருளமணநிமித்தஞ் சேதிசொல்லியேயிருந்த
பாருந்தெரிக்கவன்னப் பட்சிதனைப்பிடித்துத்
தாரும்விளையாடத் தயாளகுணநாயகரே.

வசனம்.

அகோகேளும் என்பிராணநாயகா இந்த அன்னத்தைப்பார்த்தால் முன்னே நமது கலியாணநிமித்தம் தூதுநடந்த அன்னத்தைப்போ லிருக்கின்றது இதை எனக்குப் பிடித்துத்தரவேணும் பிராணநாயகா.

பொது-விருத்தம்.

கன்னிகைதமயந்திப்பெண் கருதியபடிக்குத்தானே
அன்னப்பட்சியைப்பிடித்து அகத்திய,ந்தருவேனென்று
வன்னமாருஞ்சீதைக்காக மாயன்மான்பிடித்தாற்போல
மன்னவனளேந்திரபூபன் வந்ததைப்பிடிக்கின்றானே.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

வந்ததைப்பிடிக்கநளமன்னனும்வந்தான்-இதோ
வந்ததைப்பிடிக்கநளமன்னனும்வந்தான்

அநுபல்லவி.

கந்தமலர்க்குழல்மோக முந்தவேசெய்ததினேக
காட்சியதாய்நினைந்து தாட்சியில்லாமலிந்த
சூட்சிசெய்திட்டவந்த கோட்சநிலையுகந்து (வந்தத)

சரணங்கள்.

கடுகியேபிடியுமென்று காதலிசொல்ல-முழு
கள்ள அன்னப்பட்சிதனைக் கருதியேமென்ன
முடுகியேதாவிடநாடி அடியின்பிறகேயோடி
மூர்க்கத்துடனேபற்றப் பார்க்கப்பயந்துமெத்த
வேர்க்கத்திரோகமுற்ற மார்க்கத்தினிலேயோடி (வந்த)
இக்குகள்தோறுந்தொடர்ந்து திருப்பியேதின்று-அன்னந்
தெட்டிவெழும்பிடவதன் சிறகடிகொண்டு
அக்கணநிடரத்திற்கும் தக்கநளேந்திரன்மிருந்த

ஆச்சரியமதுகொண்டு மாற்சரியந்தனைவென்று
பாச்சலுடனேயென்னை யேச்சுதேயிதுவென்று(வந்தன)
அலைந்துமேயிரிந்திருகா லயர்ந்துமயக்கக்-கிட்டி
அருகினில்வந்ததுபோலே அம்சந்தயங்க
கலையதையுகந்துபோட வலையெனவிழுந்தமூட
ககனமதிலெழுந்து மிகவுமனமகிழ்ந்து
நிகழுங்கலையிழந்து மயிபன்துயரொழுந்து(வந்)

கலித்துறை.

நிலையாயிருந்த அரசும்பதியுநிறைந்திருக்கும்
பலமாதனத்தையுந் தூதாலொழித்தன்னபட்சியைப்போல்
கலையைப்பறிக்கவுங் காட்டில்வந்தென்னைக்கடுசெய்யச்
சதமோவுனக்குச் சநியேயெனவுந்தயங்கினனே.

நளமகாராஜன்-புலம்பல்.

திபதை-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

கண்ணிகள்.

பகவானேயென்னையுந்நீர் மிகவேதனைகள்செய்யப்
பகையோநான்செய்ததென்ன பாவமோ-எந்தன்
பதியுஞ்செல்வமுங்கொலுச் சதுருஞ்சேனையுஞ்செம்பொன்
பாரமணிமுடியும் பறித்தீரோ-நல்ல
மதிமந்திரியுடன்பெற்ற மகனையும்நான்பிரிந்து
மங்கையுடன்வனத்தில் வந்தேனே-சுவாமி
விதிவசந்திருவெந்தன் மதிமோசமாகிச்சூதை
விளையாடினேனேமுன்செய் வினையாலே-நான்
சத்தியவசனந்தப்பி வித்தியாசமாகவிந்தத்
தாரணிதனையாண்டேனோ தமியேனே-அன்னை
பெற்றபிதாகுருக்கள் உற்றதெய்வங்களைநான்
பிழைநிந்தனைசெய்தேனோ பெருமானே-எந்தன்
கனிமொழித்தமயந்தி வனிதைபிடிக்கச்சொன்ன
காதநல்லன்னபட்சி யுங்காடா-வந்த
சதியனாயினுடுத் துயயச்சைவடத்தினை
தாம்பறித்தெனைக்கட்டப் பித்தீரோ



பொது-விருத்தம்.

செப்பியசக்ரவர்த்தி சித்தம்பேதலித்துநின்று
ஒப்பிலாத்தமயந்திப்பெண் ணுடுத்தியபுடவைதன்னை
தப்பிலாவிசனத்தோடு தாமிருவருமுடுத்தி
இப்படிமுடிந்ததோவென் றிராஜனும்புலம்புவானே.

நளமகாராஜன்புலம்பல்.

திபதை-இ-ம்-காம்போதி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

உடுத்துந்துகிலுக்கெந்தனுடனேசதியன்வந்தான் தெய்வமே-முன்பு
கொடுத்தசெல்வந்தனைக்குறையாகக்கொடுத்தாயே தெய்வமே
உபகாரஞ்செய்தவன்னம் அபகாரஞ்செய்ததே தெய்வமே-இப்போ
அபகாரஞ்செய்தோரை ஆர்கேழ்க்கப்போகிறார்தெய்வமே
நீதாகாராச்சியத்தைச் சூதாடித்தோற்றேனே தெய்வமே-இந்த
போதாமற்காட்டிலேபெண்ணைக்கூட்டிவந்தேனேதெய்வமே
அன்னப்பட்சிதன்னாலே அனையின்வஸ்திரம்போச்சேதெய்வமே-இப் [போ
முன்செய்ததிவினைமூண்டுதோயிவ்வனத்தில் தெய்வமே
பஞ்சமாபாதகமென்னசெய்தேனோ தெய்வமே-உந்த
பாதகந்தானிப்போவாதைகள்செய்யுதோ தெய்வமே

பொது-விருத்தம்.

அரிவையுந்தானுமாக அனேகதூரங்கள்வந்து
பெருகிடவமுதம்போன்ற பேருளகுளத்தைக்கண்டு
புரிகுழல்சலத்தையள்ளிப் போசனஞ்செய்தபின்பு
இருவருங்குளிர்ந்தசோலை யிடத்தினில்யிருந்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் நளமகாராஜனும் தமயந்தியுந் துயரப்பட்டுக் கொண்டு காடு மலைகளைக்கடந்து வரும்போது ஒரு தடாகத்தைக்க ண்டு அதிலிறங்கி காத்திறால் சலத்தையள்ளிச் சாப்பிட்டு அங்குள் ள குளிர்ந்தசோலையி னிடத்திற்குவந்து உட்கார்ந்திருக்கத் தமயந் தியானவள் நளமகாராஜனுடைய மடையின்பேரில் தலையைவைத் து நித்திரைசெய்கிறயிதங் காண்க.

தமயந்திநித்திரைசெய்தல்.

தரு-௫-ம்-சஹானா-ஆதிதாளம்.

பல்லவி.

மடியில்நித்திரைசெய்தாளே-நளராஜன்
மடியில்நித்திரைசெய்தாளே

அநுபல்லவி.

மடியில்நித்திரைசெய்தாள் வடிவானதமயந்தி
கெடியானபகவானை அடியாள்மனதிலெண்ணி (மடியி)

சரணங்கள்.

எட்டுலக்ஷமானை பட்டணந்தனைவிட்டு
கட்டிஉறக்கமே பொட்டலிலத்திலே (மடியி)
பாக்கியவதிசீதை ஆக்கும்பஞ்சணைவிட்டு
மாங்குயிலாள்மெத்த ஆங்காரமாகவே (மடியி)
இனியிருபேரையும் தனியேபிரித்துவிடச்
சதியிஸ்பரபகவான் மனதுசந்தோஷமாக (மடியில்)

பொதுவிருத்தம்.

கலையாண்டாய்க்கிழித்துக் காரிகைவிழித்திடாமல்
தலைதனைத்தூக்கிப்பூமி தன்னிலேமெள்ளவைத்துச்
சிலைமதன்ரதியையொத்த தேவியுமாங்கும்போது
நலமுடன்மனந்தணிந்து நளராஜனுட்கின்றானே.

வசனம்.

இப்படி தமயந்தி நித்திரைசெய்ய நளமகாராஜன் சநியென்னும்பாசத்தில் கட்டுப்பட்டவனாய் பதிமயக்கி தமயந்தியின்சிரசை மெல்லெனத்தூக்கி பூமியில்வைத்து இவளைவிட்டுநாம் பிரிந்தபோதால் தாயார்வீடுசேர்ந்து சந்தோஷமாயிருப்பாளென்று தீர்மானித்து தமயந்தியுடுத்தியிருந்த புடவையில் இரண்டுமுழங்கிழித்துக்கொண்டு போகும்போது பிலாபித்தவிதங்காண்க.

நளமகாராஜன்புலம்பல்.

தரு-௬-ம்-சஹானா-ஆதிதாளம்.

பல்லவி.

தெய்வமேயென்னசெய்வேன்-தமயந்திவை-இங்ஙனே பிரிந்தேனே
தெய்வமேயென்னசெய்வேன்



அநுபல்லவி.

தையல்தமயந்தி மெய்மறந்தேநித்திரை
செய்கின்றவேளையில் ஐயோநான்பாவி (தெய்வ)

சரணங்கள்.

தன்னைமாய்நாசஞ்செய்வேன்
கன்னல்மதன்குயிலே-மன லன்னமுடன்முன்பு
சின்னவயதினில் தன்னைமறந்திட (தெய்வ)
சொன்னஉறுதிகள்

வந்துமணம்புணர
இந்திரன்வானவரும்-முன்னே விந்தையாய்யுக்கண்டு
தந்திரங்கள்செய்த யெந்தன்மணங்கொண்டாள் (தெய்வ)
சிந்தைகலக்கவே

வேடிக்கையாயிருந்தோம்
கூடிக்குலாவியல்லோ-நாமும் கோடிகணக்காரும்
நாடுநகருடன் வாடிவந்தேனிங்கே (தெய்வ)
ஆடியேசூதினால்

மாதரசைத்தனியே
பூதலமேபுகழும்-எந்தன் பேதையைநான்வன
ஆகாரமில்லாமல் சோதனைசெய்யவும் (தெய்வ)
மீதினிலேவிடச் பொட்டுந்திருநுதலும்
வட்டமதிமுகமும்-நீலப் பிட்டமிகுந்ததும்
திட்டமதாகவே விட்டிழுந்தேகவும் (தெய்வ)
கட்டழகிதனை

பாலகனைப்பிரிந்த
வாலிபவயதனில்-பெற்ற காலனெனச்சனி
ஆலமெனக்கொடுங் சாலவேயுந்தனை (தெய்வ)
கோலஞ்செய்தானிப்போ

என்றுகாண்பேனையோ
இன்றுபிரிந்திடும்நான்-இனி நின்றிருபேருயிர்
அன்றிரும்பேடனை தன்றிமறந்தேனே (தெய்வ)
ஒன்றென்றிருந்திட்ட

கலித்துறை.

வாரணிகொங்கையுஞ் சிற்றிடைகாட்டிமதனவல்லி
யாரம்பஞ்செய்யுந்தமயந்தியைவிட்டகலவென்று
ஓரடிதன்னைமுன்னூற்றாக்கி யுவந்துவைத்தால்
ஈரடிபின்னிழுக்குதென்செய்குவேனந்திழைபே.

பொதுவிருத்தம்.

போகாமல் நளன்திரும்பிப் பெண்ணாசைகொண்டுவந்து
ஏகாந்தமாயிருக்க எழுப்பினுன்மயிலாள்தன்னை
ஆகாதசரியனாலே யதிகநித்திரையுங்கொண்டாள்
வாகாகமனங்கலங்கி வருந்திநின்றுருகுவானே,

வசனம்.

இப்படி நளமகாராஜன் துயரத்துடனே பத்தடிநடந்து காலே
ழாமல் மறுபடியும் தமயந்தியினருகில்வந்து தட்டியெழுப்ப தமய
ந்தியானவள் சநிபகவானுடைய மாய்கையால் எழுந்திராமல் சோர்
ந்து நித்திரைசெய்வதைக்கண்டு நளமகாராஜன் புலம்புகிறவிதக்கா
ண்க.

சிந்தை-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

மாதேயுந்தனைவிட்டுப் போதேபிரியமனம்
வருதையோ-சிந்தை-யுருதையோ
பாதகச்சநிநம்மை சூதாய்ப்பிரிக்கமனம்
பண்ணினனே-தீதா-யெண்ணினனே

அல்லும்பகலுமுந்தன் சொல்லைக்காதினிற்கேட்டு
ஆர்ந்திருந்தேன்-துயர்-தீர்ந்திருந்தேன்
உன்னைத்தனியேவிட்டு என்னுடலிற்சீவ
னுறைந்திடுமோ-ஆசை-மறந்திடுமோ

சின்னஞ்சிறுவனாயும் பொன்னின்முடியாசுந்
தேடேனே-ஒன்றும்-நாடேனே
விந்தைபுன்னாகவராளி இந்தவனத்திற்சொல்ல
மெய்மறந்தே-நித்திரை-செய்கிறாயோ.

பொதுவிருத்தம்.

அருந்துயராலேமாது அதிகநித்திரையுங்கொண்டாள்
பெருந்துயர்கொண்டுமன்னன் பிரியநிசுநயமேசெய்து
வருந்திநின்றழுதுவிம்மி வனதர்மதேவதைக்குத்
திருந்தியதமயந்திப்பெண் தினமடைக்கலமென்றானே.



வசனம்.

இந்தப்பிரகாரம் நளமகாராஜன் வருத்தமுற்று இவள் நம்மு
டன் காடுமலைகளில் திரிந்து கஷ்டப்படமாட்டாள் நாம்பிரிந்துபோ
னால் தாய்வீடுசேர்ந்து சவுக்கியப்படுவாளென்று தீர்மானித்து தமய
ந்தியை காக்கும்படி வனதர்மதேவதைகளைவேண்டிக்கொண்டுபோ
கிறவிதங்காண்க.

தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

வனதர்மதேவதைகளேயெந்தன்-மாதைரட்சிப்பீர்கள்

அநுபல்லவி.

மனதுருகியென் காதலினால்வந்த
மங்கையிவட்கொரு பங்கமில்லாமலே(வனதர்)

சரணங்கள்.

மதயானைவெம்புலி கொல்லாமலே,
விதமாயிடைவழி நில்லாமலே
நிதமாயொருவினை யில்லாமலே
சதமேஇனியும்மை யல்லாமலே
உதவியாரிந்தக் காட்டினிலெங்களை
நிதமுங்காத்திட நம்பினேனுங்களை (வனதர்ம)
தொடுத்தான்மதி யிடக்காய்ச்சனி
நடுக்கானகந் தனிலேதனி
உடற்கோவழி ரானபெண்க
வடுக்காதென விடுத்தேனினி
துடுக்காகிய ராக்ஷதபூதங்கள்
தடுக்காமலே துணைசெய்திடுங்கள் (வனதர்ம)
மதியும்புனலுந் தரித்தவேணி
கதிபெருகும்பா சாங்குசபாணி
நதிபெருகுமா காசவாஸி
விதியமரர்கோ ஞானித்திராணி
சதிருடன்வீம வகரிற்சேரவே
பதிபுகழ்பூரி கல்யாணிகூறவே(வனதர்ம)

கலித்துறை.

கத்துநதிக்கரைவாழ்குயில்காளிளமாமயில்காள்
கொத்துமலரினிற்றேனைபக்கான்விட்டதொடியென்றே

சற்றுமெனதுமுகம்பார்க்கநாணிச்சலிப்பதுகொண்
டெற்றெனுழாங்களுடனேபறந்தாலுகங்கினரோ.

நளமகாராஜன்சொல்-தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

கானினில்வாழ்ங்குயிலே - கூவாமல்தாவுமயிலே

அனுபல்லவி.

மானியெனையுங்கண்டு போவதுமென்னகுறையோ (கானி)

சரணங்கள்.

மாலைமதனாபூங்கிளியே காலைமலர்ந்தசேகனளியே
சோலையிலெவட்டவெளியே சாலையிற்றிற்சீபணியே
பாலிக்மொழி யாளைவிட்ட
நிலனெனப்பகைத் தொட்டோ (கானி)
ஒண்டியதாகப்பிரிந்த கொண்டபெண்தனையிழந்த
சண்டாளனென்றறிந்தோ கண்டவுடனொளித்தீர்
தண்டுகான் வனபுகுந்தக்
கொண்டதென்ன காரணம் (கானினில்)
அதைவிட்டுநான்தனியே பாதைவிட்டிடச்சனியே
தீங்கதினைத்தானனியே வேதையுமானேனினியே
நாகநாமக் கிரியைநானே
யோதற்சோ டவும்மானே (கானினில்)

பொதுவிருத்தம்.

தான்சொறுப்பெண் வனவிட்டுத் தனித்துமேமனதுவேறாய்
வன்பியேவருகும்போது இருள்யிருவனத்திலேதான்
பாங்குளபுகைதொன்றிப் படருமநெருப்புப்பற்ற
அங்கியில்மேலிருக்கும்சர்ப்ப மொழிந்திடுமிராஜனுக்கே.

வசனம்.

இந்தப்பிரகாரம் நளச்சக்கிரவர்த்தியானவர் தமயந்தியைப்பிரிந்து விசனத்தோடுவரும்வழியில்மூங்கிற்புகலுரென்று நெருப்புப்பற்றியெரியஅதிலிருந்தஒருசர்ப்பம் அலறியட்டுஇராஜாவைக்கண்டுஓப்ராஜாவே என்னை இந்த அக்கினியிலிருந் தெடுத்துவிடுவீராகில் உமக்கு மகா உபகாரமுண்டென்றுசொல்ல நளமகாராஜன் நல்லதென்று



எடுத்துவிட்டமாத்திரத்திலே அந்தசர்ப்பம் இராஜாவைக்கடிக்க உடனே விஷமேறி தேகக்கறுத்து ரூபமாறிப்போக நளமகாராஜன் மனதுயரத்துடனே புலம்புகிறவிதங்காண்க.

நளமகாராஜன்-புலம்பல்.

விருத்தம்.

வையமோரடியளந்த மாதவாஸ்ரீவைகுந்தா
பையரவணைத்துயின்ற பரமனேசதியெஞ்செய்தேன்
தையலாள்சாபந்தானோ சர்ப்பமுந்தீண்டியென்னை
மெய்யெலாங்கறுத்துநோகும் வேதனைக்கென்செய்வேனே.

வசனம்,

அரி ஹரி வைகுந்தவாசா அச்சுதா பரந்தாமா நான் நன்மை செய்ய இந்தச்சர்ப்பம் என்னைக்கடித்து தேகத்தைக்கெடுத்ததே இது நான்செய்த தீவினையோ அல்லது என்மனைவியாகிய தமயந்தி ஒண்டியாய்விட்டு வந்துவிட்டேனென்று வருந்திக்கொடுத்தசாபமோ இந்த தீவினைக்கென்னசெய்வேன் வைகுந்தவாசா.

திபதை-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

மாதவாமதுருகனுதிரு மங்கைமேவியமார்பனே
ஆதிநான்செய்தபாவமோயெந்த னங்கமிப்படியாகுமே,
மன்மதன்தனிலதிகமாமெந்தன் வர்ணமேனியுங்கெடுமோ
தன்மையாகவேபாம்பினுடல் சீயும்புன்கறுயிடுமோ
ஏர்க்கமுங்கசுத்தாயியும்பூசி வாசமேதருந்தேகோ
தர்க்கந்தக்களுமாகவேயின்று சோதனைசெய்ததேதநான்
சாதா அங்கிசாலைவரத்தினக் சரிகைபாடையுந்தரித்தேனே
பாதியாடையுமுடநான்மெய்யில் பத்தபோவெதந்கனகர்ந்தேனே
தேயமாகியநாயகியென்னை நித்திரைதனில்விடுத்தேனே
நாயகந்தனில்சேர்வாளோவெந்தன் காதலால்தேடிவருவாளோ

பொதுவிருத்தம்.

கரும்பினைடையொப்பில்லாத கோதையைவனத்தில்விட்டு
அரும்பிழைசெய்தநானும் அக்கினியைக்கண்டுவிட்டு
திரும்பியேவருகும்போது தீங்காகச்சர்ப்பந்தீண்ட
உருவியேமனதுவாடி உத்தமன்யோசித்தானே.

வசனம்.

இப்படி நளமகாராஜன் பிரலாபித்து இதுவும் நம்முடையவிதி யென்றுமனந்தேறி வனாந்திரங்களைக்கடந்து அயோத்திநகரத்தைய டைந்தான்.

இருதுபர்னமகாராஜன்வருதல்.

இணைவுமது.

தங்கம்ரமகுடமின்னச் சாப்பளிபதக்கமுத்து
துங்கமாமணியிழைத்த தோள்வளைதகதகென்ன,
மங்கையர்நடனமாட மதிமந்திரிமார்கள்சூழ
பங்கயமுகனிருதுபர்னனுங்கொலுவில்வந்தான்.

வசனம்.

இப்படி நளமகாராஜன் அயோத்திக்குவந்தவுடனே அயோத்தி நகரையாளும் இருதுபர்னமகாராஜன் தன்மந்திரியோடு கொலுவு க்குவருகிறவிதங்காண்க.

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

பர்னன்சபைக்குவாரா னுன்னிதம்பார்-ருது
பர்னன்சபைக்குவார் னுன்னிதம்பார்

அநுபல்லவி.

கன்னல்வில்மத — னென்னமகிழ்ந்தெழில்
பொன்னகர்மேவிய — மன்னனைப்போல்ருது(பர்னன்)

சரணங்கள்.

துலங்குமதிவதன — மிலங்கி டவே-ரத்தினச்
சுடர்மணிமகுடந் — துலங்கிடவே-செம்பொன்
இலங்குகுண்டலஞ்செவி — தயங்கிடவே-அண்ட
ரெவரும்பயந்துமனந் — தியங்கிடவே-நல்ல
பிலங்கொளுஞ்சதுரங்க — பலங்களும்நெருங்கவே
களங்கமில்லாவெண்ணக் — கவரிவீசிட்ருது(பர்னன்)
அரசர்மந்திரிமார்கள் — சூழ்ந்திடவே-கண்ட
அரிவையர்மயல்கொண்டு — வீழ்ந்திடவே-செங்கோல்
தரணிமுழுதுமெங்கும் — வாழ்ந்திடவே-வந்து
சகலஜனமுமடி — தாழ்ந்திடவே-துய்ய
அருமறையவாசி — தருகவேகடலோசை
விருதுஜெயபேரிகை — முரசுமதிர்ருது(பர்னன்)



பொதுவிருத்தம்.

மருவளர்சோலைசூழு மாநகரயோத்திவீதி
தெருவினிற்பலர்சொற்கேட்டுத் தியக்கியநளராஜேந்திரன்
உருவமுமனதுவேறு யுருகியேகலங்கிநெஞ்சம்
மருண்டியவிசனத்தோடு மன்னவன்றனைக்கண்டானே,

வசனம்.

இந்தப்பிரகாரம் புஷ்கராஜன் கொலுவிற்குவந்தவுடனே நள மகாராஜன் தயனொன்றுஞ் சமுத்திரத்தில் மூழ்கினவனாய் நெருங் கியசோலைகள்சூழ்ந்த அயோத்திமாநகரத்திலுள்ளவர்கள் சொற்ப டி இருதுபர்னமகாராஜனைக்கண்டான்-என்பதாம்.

இருதுபர்னமகாராஜன்-நளமகாராஜனுக்குச்சொல்

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் நீயார் எந்ததேசம் உன்பெயரென்ன இப்போது நமதுசமுகத்திற்கு வந்த சமாச்சாரமியாது தெரியத்தெரிந் சொல்லும்பிள்ளாய்.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

காவலாநிடததேசங் காத்திட்டநளராஜர்க்கு
ஏவலாளாயிருந்தே னிராஜனுஞ்சூதினாலே
மேவியநகரைத்தோற்று மெல்லியாளொடுகாடேகினார்
கேவலமாகவந்தேன் கீர்த்தியுண்டெனைக்காப்பீரே.

வசனம்.

அகோகேளுமையா மகாராஜனே நிடதநாட்டையாண்ட நள மகாராஜனிடத்தில் சுயம்பாகியாயும், இரதசாரதியாயுமிருந்தேன் எ ன்பெயர் வாகுவனென்றுசொல்வார்கள் எங்களரசன் சநிபகவானு டைய கொடுமையால்மதிமயங்கி நீதிசாஸ்திரங்களைமறந்து பாவியா ன புஷ்கராஜனுடனே பஞ்சபாதகத்திலொன்றாகிய சொக்கட்டா டி நாடுநகரங்களைத்தோற்று தனது நாயகியாகிய தமயந்தியோடு வனவாசஞ்செய்யப்போனார் நான் உம்முடைய கீர்த்திப்பிரதாபத் தை கேள்விப்பட்டு ஜீவிக்கலாமென்றுவந்தேன் என்னைக் காப்பாற் றவேண்டுமையா சுவாமி.

இருதுபர்ணமகாராஜன்சொல்-விருத்தம்.

ஞாயமாயென்பால்வந்த நம்முள்வாகுவாநீ
தாய்ஙமாகவெத்தன் சாதியிருவரோடு
நேயமாயிருப்பாயாகில் நித்தமுந்தாழ்வில்லாமல்
ஆயிரம்பொன்கொடுப்பே னகமகிழ்ந்திருந்திடாயே.

வசனம்.

கேளும் வாகுவா உனக்கு நாளொன்றுக்கு ஆயிரம்பொன் கொடுக்கிறேன் சவுக்கியமாய் சாப்பிட்டுக்கொண்டு சந்தோஷமா யிருமப்பா வாகுவா.

நளமகாராஜன்சொல்-வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

நளமகாராஜன்புலம்பல்-விருத்தம்.

திக்குகளெட்டும்வென்று திறைகட்டியரசர்போற்ற
சக்கரவர்த்தியென்று சகலதேவருங்கொண்டாட
இக்குலமாரனென்ன இஷ்டபாக்கியத்தைப்பெற்றும்
அக்ரமமென்செய்தேனோ அடிமைக்குஆளானேனே.

இபதை-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

மன்னர்புகழ்நிடத நன்னகர்தனில்வாழ்ந்திருந்தேன்-இப்போ
சொன்னபடிருது பர்ணர்க்கேவல்செய்யத்தாழ்ந்தேன்
பொன்னரியாசனந் தன்னிலிருந்துபுவியாண்டேன்-எந்தன்
கன்னிகையைப்பிரிந் திந்நகர்தன்னிலேயீண்டேன்
தாரணிராஜர்க்குச் சீருடனேவிடைகொடுத்தேன்-என்னைச்
சாரதியாவென்று கூறவும்நானப்பேரெடுத்தேன்
வஞ்சிதமயந்தி அஞ்சியெனைத்தேடுவாளோ-தந்தை
வாழும்பதியைப்புன்னா கவராளிபாடிகூடுவாளோ

பொதுவிருத்தம்.

நாதமாய்நிடதமாண்டு சுகத்துடனிருந்தமன்னன்
மருவியசநிபன்செய்த வஞ்சனையால்மெலிந்து
கருதுபர்னராஜன் காட்டினையேவலெல்லாந்
திருவிளையாடல்போலே செய்துவளிருக்கின்றானே.



வசனம்.

அந்தேதப்படியென்றால் ஐம்பத்தாறுதேசத்தரசர்க்கும் அரசனா ன நளமகாராஜன் சநிபகவான்செய்த கொடுமையினால் வருத்தமுற் று தனக்குக் கப்பங்கட்டிவந்த இருதுபர்ணமகாராஜன் சொல்லிய ஏவல்களைச் செய்துகொண்டு ஆதித்தனைக்காணாத அரவிந்தமலர் போலிருந்தான்.

இதுவும்-பொதுவிருத்தம்.

இடுக்கெனவிழித்தமாது இசைத்தராஜனைக்காணாமல்
நடுக்கமெய்பக்தியுள்ளம் நாவரண்டமுகமிழந்து
வடித்திடுகண்ணீர்வெள்ளம் வாரிபோலோடவெக்குத்
சடுக்கெனவோடிப்பார்த்து தமயந்திபுலம்புவாளே.

வசனம்.

நளமகாராஜன் அயோத்திநகரத்தில் இப்படியிருக்க காட்டில் நி த்திரைசெய்த தமயந்தியானவள் இடுக்கென்றுவிழித்து இராஜனைக்கா ணாமல் முகஞ்சோர்ந்து திகைப்பேறி நாவுலரண்டு நாலுபக்கமு ந்தேடி கண்ணீர்தாரைதாரையாய் மார்பின்வழியேயோட முகத்தில றைந்துகொண்டு புலம்புகிறவிதங்காண்க.

தமயந்திபுலம்பல்.

இபதை-இ-ம்-சன்னியாசி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஐயோநானென்னசெய்வேன் ஆரணியந்தனிலென்னை
அழைத்துவந்துவிட்டீரோ பிராணநாதா-சுவாமி
கையாலெனைக்கொல்லாமல் காட்டுமிருகங்கையில்
காட்டிக்கொடுத்திட்டீரோ பிராணநாதா-சுவாமி
நிமிஷமானாலுமெந்தன் நித்திரையிலுமுந்தன்
நினைவைமறந்தறியேன் பிராணநாதா-சுவாமி
இமிசைபடுத்தவென்னை யிவ்வனத்திற்பிரிந்தால்
என்னுயிர்தரிக்குமோ பிராணநாதா-சுவாமி
மண்டபத்திலும்மடி மடியிற்றலையைவைத்து
மயக்கநித்திரைசெய்தேன் பிராணநாதா-சுவாமி
பண்டுபெரியாசம்போல் பக்கத்திலேயொளித்தால்
பூலைநான்சகிப்பேனோ பிராணநாதா-சுவாமி

உற்றமதிதரில்லை யொருவர்துணையுமில்லை
உருகுதென்மனமையோ பிராணநாதா-சுவாமி
இந்தவனந்தன்னிலே யெங்கேகாணுவேனும்மை
இரங்கிவந்தருள்செய்வீர் பிராணநாதா-சுவாமி

தமயந்தி-சநிபகவானை நினைத்துப்-புலம்பல்.

தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

சநிபகவானே-தயவுசெய்வோனே

அநுபல்லவி.

இனியென்னைக்காவாயா யேழைமுகம்பாராயா (சநி)

சரணங்கள்.

சின்னஞ்சிறுபோதெனை செங்கைதொட்டநாதனை
அன்னிதமாகவே தொட்டீர்
அரசிழந்தலைய விட்டீர் (சநிபக)
பாலரும்பிரிந்தாரோவென் பத்தாவுமோர்சஞ்செய்தாரோ
காலம்பொல்லா தாகக்
காட்டில்விட்டுப் போக (சநிபக)
சென்றவழிகாணேனே தேடிவிளைத்தேனே
என்றவருவாரோ பாவி
யென்கண்ணிற்காண் பேனோ (சநிபக)
காட்டில்விட்டலாச்சே கஷ்டமிஞ்சிப்போச்சே
நாட்டைவிட்டுநலங் குன்றி
நாயகன்செய்ததை யெண்ணி (சநிபக)
நாணுங்கலையைப்போலே மருவிப்பிரிந்தகாலே
யானென்னசெய்வே னையோ
ஆதியிற்சொன்னசொல் பொய்யோ (சநிபக)

தமயந்தி-தகப்பனாகிய-வீமராஜனை நினைத்துப்புலம்பல்.

விருத்தம்.

இந்திராணியம்பைபோற்ற வெழிலுடனிருந்தவென்னை
சிந்தைவஞ்சகமாய்க்காட்டில் தியங்கவேவிட்டுப்போன
சந்திரகுலநளேந்திரன் றனக்குமேபாரியாகத்
தந்திடவென்றோவையா தவமிருந்தெனைப்பெற்றாயே



தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயாவென்னசெய்வேன்-ஆரணியந்தனிலே
ஐயாவென்னசெய்வேன்

அநுபல்லவி.

செய்யாத்தவம்புரிந்து தேவாலயந்திரிந்த
மையலுடன்பயின்ற மாநகர்வீமனும் (ஐயா)

சரணங்கள்.

சந்திரகுலராஜன் சக்கிரவர்த்திபோஜன்
வந்தெனைக்கைதொட்டார் வனத்திலலையவிட்டார் (ஐயா)
பாதசரமெட்டு பாதந்தனக்கிட்டு
பூதலத்தென்காலில் புழுதிபடவிடுத்தீர் (ஐயா)
காட்டில்விட்டுப்போன கணவன்வரக்காணாமல்
பாட்டையில்நின்று பரதவிக்கலானேன் (ஐயா)

இதுவுமது.

தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

எத்திசையும்புகழ மெய்த்தவம்புரிந்தெனை
ஈன்றெடுத்தீரோவென் ஐயாவே-இப்போ
இம்சைபடவிடுத்தீர் ஐயாவே

அநுபல்லவி.

சித்தமகிழ்ந்துநீயும் பெற்றபெண்ணும்வனத்தில்
திகைத்தலைந்திடக்கண்டு சகிப்பாயோமனங்கொண்டு (எத்திசை)

சரணங்கள்.

காவலனானையா ஞாலமுடனேயன்று
கைபிடித்தருமையோ ஐயாவே-என்னை
காட்டில்விட்டகலவும் ஐயாவே
மேவிநானுன்வயிற்றில் பாவிவந்தேயுதித்த
வேளையோவறிகிலேன் நானென்னசதியோ (எத்தி)
நாட்டையிழந்துநடுக் காட்டிலெந்தனைப்பிராண
நாதன்பிரிந்தபோக பதிதானோ-சதி
பாதகஞ்செய்கின்ற சதிதானோ

வீட்டிலிருந்தேனென்று கேட்டசெவியாலிந்த
வேடனெனென்றிட வேர்க்கிலிருப்பாயோ (எந்தி)

இருள்வனந்தனில்தவிக்க மிருகங்களைக்கண்டுநான்
என்றுவேண்டுவீமராஜேந்திரனே-மயந்
தாய்தவேயிந்தவு குந்திரமே
உருகுமென்மனமெய்த பெருகுமசாவேரியை
உகந்துசொல்விளர்த்த புகழ்ந்துமனக்களித்த (எந்தி)

தமயந்தி-நளமகாராஜனைநினைத்துப் புலம்பல்.

விருத்தம்.

முன்னமிவ்விதிக்கென்றென்னை முடித்திட்டபிரமதேவா
கன்னிநான்முன்ஜன்மத்திற் காரணமென்செய்தேனோ
தன்னிலேபுலம்பிவாடித் தயங்கியேதிரியவிட்ட
என்னதுபிராணநாதனின்னமும்வரக்காணேனே.

கரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

இன்னம்வரக்காணேனே-ஐயோ-என்பிராணநாதன்
இன்னம்வரக்காணேன்

அநுபல்லவி.

நன்னாயிருந்தன்னுயிர்போ லன்னியநளராஜன்
மருவிபதேசன் பெருவனவாசம்
இரியவேமோசம் வருகவேதேசம் (இன்னம்)

சரணங்கள்.

இந்திரன்விடுத்தூதாக சிந்தையுமகிழ்ச்சியாக
வந்தவர்மணவாளாக முந்திநான்சொன்னதாலேக
அந்தநாள்வர மக்களுண்டோ
அன்றுநான்வந் தறுகொண்டோ
அரிகுலத்துள்ளன் மதிதனிற்சிலன்
புதியநுகூலன் அதியதியாலன் (இன்னம்)

வேதனையாகத்தேடி ஒதையுந்தான்விளையாடி
தீமைத்திரையாநாடி பேதைபோல்வனத்தைநாடி



காதலைமறந்த இந்த
காரணஞ்செய் வாரோவந்த
உலமகள்வேதன் சலமதிறுவோ
தலைவிதியோவென் பலவிருநாதன் (இன்னம்)

ராஜனுக்கென்றேயென்னை ஆசையைவிட்டேனென்னை
தேசமதிலேதன்னை தேசருமுன்னோமன்னை
காசினியி லெதுகுல
காம்போதி தனைப்பாடி
காவினில்வருகப் பாவினானுருகி
சீவனும்பெருக ஆவலுந்தருக (இன்னம்)

தமயந்தி-பர்வதம்-யானை-புலி-மயில்-குயில்களைப்பார்த்து புலம்பல்.

பொது-விருத்தம்

எங்கிலேபறந்தவாடி யிருகண்ணீர்சொரியவோடி
ஒங்கிருள்வனத்திற்காணு முயர்மலைமரங்கள்பட்சி
பாங்கினில்வருமிருகங்கள் பார்த்தனன்கலங்கக்கூவி
மாங்குயிலெனவேசொல்லி வார்த்தையாலுரைக்கின்றாளே.

கீபதை-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

மயில்காள்புறாவினங்காள் எந்நாளுமிங்கே
வாழ்மலையே வனங்காள்
குயில்காளொன்றாக்கூட்டிவந்த மன்னவன்செய்த
கொடுமைகண்டதுண்டோசொந்த

நான்தான்கொடுமைசெய்தேனோ புருடர்மயம்
நற்கல்லென்பதுவும்பொய்யோ
உண்டோவுலகத்திலிது நித்திரைதன்னி
லழவிட்டோடிப்போவது

கலிராஜன்றன்செயலால் காட்டில்விடவும்
கருத்தைவந்தெனைமறந்து
கிளிகாளிரக்கமில்லையோ நளன்சேதியைக்
கேட்கவென்னுடன்சொல்லீரோ

அலிகாளரவக்காணீரோ சொல்லாதிருந்தால்
அரும்பாதகங்கள்பூணீரோ
செப்புஞ்செல்வமுமிழந்தே காட்டினில்வந்தேன்
சொன்றனையுமிழந்தேன்

தாயுந்தந்தையும்விடுத்தேன் கணவனே
தஞ்சமெனவேயடுத்தேன்
பழகாதபேர்களானாலும் நம்பிவந்தோரைப்
படுகானில்விடுவாரோ

கண்டாயோநீயுமன்னமே வம்போதிபாடி
கவிந்தோரைக்கிடர்முன்னமே

இதுவுந் தமயந்திபுலம்பல்.

திபதை-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

இன்னங்காணேனேயிதற் கென்னசெய்குவேன்
மன்னவாகஞ்ணின் முன்னமேவா
கன்னிநானுமே உன்னியவனந்
தன்னிலேதிரிந் தென்னசெய்குவேன்

அருவனந்தனி லொருவர்காண்கிலேன்
மருவியென்னைப் பிரிவலாகுமோ
எரியுதேவயி றருகுதேமனம்
வருகுதேதுயர் பெருகுதேபயம்

கொஞ்சமாகிலும் நெஞ்சகந்தனில்
அஞ்சிடாமலே வஞ்சகஞ்செய்தீர்
பூமனேதச நாமமேமனம்
நீயமென்னவே சோபமாகுதே

இதுவுமது.

திபதை-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அருகிலிருந்த அரசனைக்காணேனே தெய்வமே-எந்தன்
ஆவிதுடிக்குதேபாவிநானென்செய்வேன் தெய்வமே



உருவினகத்தியாலேர்க்கிவெட்டாமலே தெய்வமே-என்னை
ஒண்டியாகவிட்டொளிந்திடத்தர்மமோ தெய்வமே
இருகண்ணினித்திரை பென்னென்றுவந்ததோ தெய்வமே- இப்போ
என்பிராணநாயகரெவ்விடஞ்சென்றாரோ தெய்வமே
விட்டுப்பிரிந்திட வேளைவந்தொத்ததோ தெய்வமே-என்ன
வேதனையால்மணவாளன்பிரிந்தாரோ தெய்வமே
பரியாசமாயெவ்மனம்பார்த்திடலாகுமோ தெய்வமே-இந்த
பாரவனந்தனில்பயங்கரமாகுதே தெய்வமே
கட்டியிருந்தகலையுமொன்றாச்சுதே தெய்வமே-அதை
கையாற்கிழித்திடச்செய்திடுமோசனி தெய்வமே
சத்தியஞ்செய்ததைத்தானுமறந்தாரோ தெய்வமே- இப்போ
சாவேரிபாடியேபூவைபுலம்புறேன் தெய்வமே
நித்திரைதன்னில்நினைவுமறந்ததே தெய்வமே-உயர்
திருபனைக்காணுதிந்தோறும்போகுதே தெய்வமே

பொதுவிருத்தம்.

கூடியேவனத்தில்வந்து கொற்றவன்றனைப்பிரிந்து
தேடியேதவிக்கும்போது தீயவன்கொடுமைதன்னால்
ஆடியேபடம்விரித்து அரவமுஞ்சந்திரன்றன்னை
மூடிடுமிராகுபோல முன்வரப்புலம்புவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் நெருங்கியகாட்டில் கண வனைக்காணாமல் பரதவிக்கும்போது சநிபகவான்செய்யும் வஞ்சனை யினால் ஒருநாகமானது படத்தைவிரித்து சீறிக்கொண்டு சந்திரனை மறைக்கும் இராகுவைப்போல எதிர்த்துவருதலைக்கண்டு தமயந்திபு லம்புவதுகாண்க.

திபதை-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

தெய்வமேயிதற்கென்னசெய்குவேன் எந்தனெதிரே
சீக்குசெய்திடப்பாம்புவருகுதே
உய்வதற்கொருவழியுங்காணேனே நெருங்கிவரும்
உரகந்தன்னாலென்னுயிரும்போகுதே

௯

காலவிஷம்போல ஆதிசேஷனும் உலகம்பிக்கும்
கனல்போல்வரவா அனலுந்தாவுதே
ஓடியேபடம்விரித்துச்சீறியே அரவமெத்தன்முன்
உருமியேயென்னைவளைத்துக்கிமேவுதே
நீளும்புலிகள் நடுக்கமீறுதே காணவேயெந்தன்
நெஞ்சமிகவுங் கலக்கமாகுதே
மன்னவாமனதிரக்கமில்லையோ அரவந்தன்னையும்
வதைத்தென் னுயிரைக்காக்கவல்லையோ
திக்களனைத்துந்தினதயாபரா எந்தனையிப்போ
சித்தமிரக்கிக்காருங்கதக்காதரா
அங்கமெல்லாம்பாம்புசுற்றிமுறிக்குதே ஆகாயவாணி
ஆதரிக்காவிடிற்பாவமல்லவோ

தமயந்தி-பிரமதேவனை நினைத்துப்புலம்படல்.

தரு-இ-ம-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

பிரமதேவர்திதேவாயென்னை காக்கக்கட னுனக்கே

அனுபல்லவி.

வர்மமோயெஞ்சமீதிலுனக்கு வாணிதன்னேயா-தூய்ய
வானவர்க்கருள்தானளித்த மகிழ்ந்தசகாயா (பிரமதே)

சரணங்கள்.

நன்னகர்நிடதநாடுதனைச்சூழில்
நாங்கள்பறிகொடுத்து வந்து
நலங்குலைந்திந்தக்காட்டிற்கணவனை
நான்பிரிந்துதவிக்க (பிரமதே)
வாலவயதில்வயிற்றிற்பிறந்தவென்
பாலகனைப்பிரிய இப்போ
கோலாகாலத்துடன்கொற்றவனையினி
தேடிவயிறெரிய (பிர்ம)
காலவிஷங்கொண்ட ஆதிசேஷனென்னைக்
கலக்கஞ்செய்யுகிறான் இந்த
சோலைதனில்நான்முறையிடுவதுந்தன்
செவியிற்கேழ்க்கிலையோ (பிரமதே)



35

விஸ்தாரமானவனத்தில்விஷங்கொண்ட
வெறிநாகமென்னைவதைக்க பொல்லாக்
கஸ்திப்பட்டிந்தகானகந்தன்னிற்
கலக்கிடச்செய்தாயோ (பிர்ம)

தமயந்தி-ஸ்ரீமகாவிஷ்ணுவை நினைத்துப் புலம்பல்.

தரு-இ-ம-காம்போதி-அடதாளம்.

பல்லவி.

அரிநாராயணவாசுதேவனே
ஐயோயிதற்கென்னசெய்குவேன்-ஸ்வாமி

அனுபல்லவி.

கருநாகமா மலைபோலெனைக்
கண்டுடன்சீறிக் கொண்டுவருகுதே(அரிநா)

சரணங்கள்.

இருகண்ணுமிப்போ தெரியுதேதன
லீசனுர்விழி தனக்கொப்பாகவே
ஏழைநான் மாதுபங்காளா
என்னசெய்வேனிதற் கெப்படியுய்குவேன்(அரிநா)
மாலையிட்டேனை வனத்திலிட்ட
நிலன்றனையுந் தேடிவந்த
சோலைதனிற் பாம்பைக்கண்டுடல்
நடுக்குதேஐயோ(அரிநா)
கடிக்குதேகைகால் ஓலமுடன்
காலனெனவே விழிக்கண்டு
காலகருமா பாசிச்சடல
வேலைதனும் ஒலியுமீறுதே(அரிநா)
மெலியுதேமனம் வேண்டாமென்று
பூண்டாசையல் புனிதன்
புகன்றேனென்றே தனிற்பிரிந்திடக்
காண்டாவனந் காலைச்சுற்றினதே(அரிநா)
கருநாகமும் தியங்கிடச்சதி
தீண்டாமல்முன் பாய்வேஷமாறி
வேண்டாவெறுப் வேண்டிவந்தாரோ
தாண்டிக்கொல்ல சதியோதலே விதியோசுவாமி(அரிநா)

பரதேசிபோல் திரியவிட்டு
அரவுக்கிரை யளித்திடவெனைப்
பிரியத்துயில் தனிற்பிரிந்த
புண்ணியனையென் கண்ணிற்காணேனே (அரிநா)
வரதேவனே குருநாதனே
ஒருதுணையும் வரக்காணேன்
கிருபைவைத்து வரவேணுமென்
சரணம்கார்க்கதீ கருணை (அரிநாராயணா)

பொதுவிருத்தம்.

ஐயனேமாதவாவென் றலறியேயழுதசத்தம்
வெய்யதோர்வனத்தில்வாழும் வேடனுங்காதிற்கேட்டு
பையவேசென்றுநாமும் பார்த்துமேவருவோமென்று
மெய்யிருள்வனத்தைத்தாண்டிவேகமாய்வருகின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் இராகுவின்வாயி லகப்பட்ட சந்திரனைப்போல மதிமயங்கி பெருக்குரலிட்டழுகிற சப்தத்தைக்கேட்டு அந்தவனத்தில் வாசஞ்செய்யும் விபுகனென்னும் வேடன் வருகிறவிதங்காண்க.

இதுவுமது.

வல்லயம்வெடிதுபாக்கி மருந்துகுண்டம்புறாதாணி
மெல்லியதடியெடுத்து வேட்டைநாய்கையிற்கொண்டு
செல்வியாந்தமயந்திப்பெண் தியங்கியவேளைதன்னில்
வில்லம்புகையிற்கொண்டு வேடனும்வருகின்றானே.

இதுவுமது.

முடிகுலுங்கப்பொற்சரிகைச்சந்திரகாவி
மோகவுருமால்கவிக்கிமுறையாய்ப்பூண்டு
வெடிகருமருந்துடனேதுபாக்கிகொண்டு
வெல்லுமெறியீட்டியம்புறாத்தாணிகொண்டு
அடிகவரிபுலிக்கொடிநாய்வலையுங்கண்ணி
கோணிலிட்டுச்சல்லடமுங்கச்சைகட்டி
நடிக்கமலையொத்தபுயமுடையவேடன்
நாடுதமயந்திமுன்னேவருகின்றானே.



வேடன்வருதல்.

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தான்விபுகனெனும் வீரன்-காட்டில்
வாழும்வேடர்க்கதிக சூரன்

அநுபல்லவி.

வந்தானதிகனெனும் வீரத்துடனே
வாய்விட்டலறி மயங்குவதாரென
முந்தியவேகத் துடன்மனக்கூடியே
முதண்டத்தேடிய காடெங்குந்தேடியே (வந்தா)

சரணங்கள்.

வெற்றிவில்லம்புடன் கத்தியுங்கைக்கொண்டு
வேலுஞ்சக்ராயுதம் சூலப்படைபூண்டு
கொத்தலர்மாலை சிரத்தினிலேசூடி
கொம்புதனையெடுத்து துன்பமதாலோடி (வந்தான்)
வெம்புலியன்றிகள் தும்பிகள்வாடியே
வீறிட்டோடுங்கி மிரண்டோடியே
அம்பரம்பட்டிக ளாலிக்கெழும்பிட
ஆர்ப்பரித்திப்படி யெற்றரித்துக்கெடி (வந்தான்)
ஆவென்றலறிய பாவையின்வாய்மொழி
யாதெனவேமன வேகத்துடன்வழி
காவிலுயர்ந்துள மாவும்தயங்கிட
கன்னியைச்சுற்றிய பன்னகம்தொறுங்கிட (வந்தான்)

வேடன்சொல்-விருத்தம்.

ஆரம்மாயிவ்வனத்தில் ;அதிலட்சுமியோநீதான்
பார்ப்பதிசாரதைபிரம்மன் பாரியோரதியோநீயும்
நீரம்மாகானகத்தில் நித்தியவாசந்தானோ
ஊருடனுந்தன்பேரு முண்மையாயுரைசெய்வாயே.

வசனம்.

அகோவாருமம்மாதாயே நீ பார்வதியோ - இலட்சுமிதேவியோ சரஸ்வதியோ-இரதிதேவியோ-அல்லது-பூமிமாதோ-உன்னுடைய ஊரும்பேரும் தெரியப்படச்சொல்லுமம்மா தாயே

தமயந்திசொல்-விருத்தம்.

புவனத்தில்விதற்பதேசம் புகழ்பெறும்வீமராஜன்
தவத்தினால்வந்தபுத்ரி தமயந்தியெனது நாமம்
நவகண்டநளராஜர்க்கு நான்பாரியாகிச்சூதால்
கவனமாய்வனத்தில்வந்து கணவனைப்பிரிந்தேனண்ணே.

வசனம்.

கேளும் வேடனண்ணாவே நான் விதற்பதேசத்தையாளும் வீம ராஜன்புத்திரி என்பேர் தமயந்தியென்றுசொல்வார்கள் நவகண்டத் தையாண்ட நளமகாராஜனுக்கு நான் பாரியானேன்- என்புருஷன் சநிபகவான்செய்த கொடுமையினால் சூதாடி நாடுநகரங்களைத்தோ ற்று என்னையழைத்துக்கொண்டு வனத்திற்குவந்தவிடத்திலே எப்ப டியோ பிரிந்துபோய்விட்டார் அவரைத் தேடித்திகைத்து இவ்வழி யேவந்தேன் இந்தமலைநாகம் என்காலைச்சுற்றிக்கொண்டிம்சைசெ ய்யுது அண்ணாவே,

வேடன்சொல்-விருத்தம்.

அந்தகாரமானகாட்டில் அரிவையேயுன்னைக்கொல்ல
வந்திடும்பாம்புதன்னை வதைத்துவுன்னுயிரைக்காப்பேன்
சிந்தனைவேறேவேண்டாந் தேன்மொழிமாதேகேளு
எந்தன்கைவாளினாலே யிருதுண்டஞ்செய்வேன்பாராய்.

வசனம்.

கேளுமம்மாதாயே நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் இதோ இந்தப்பாம்பை என்னுடையபாணத்தினாலே இருதுண்டாய் வெட் டிப்போடுகிறேனம்மாதாயே.

தமயந்திசொல்-விருத்தம்.

சற்பமாம்புதன்னைத் தணித்திட்டீர்பாணத்தாலே
வெற்றிசேரண்ணாவுன்னால் வேதனைதீர்ந்ததிப்போ
குற்றமாயிருக்குந்தீர்க்கத்தொடர்ந்துநீர்வந்தமார்க்கம்
பெற்றிட்டதந்தையேயென் பிராணனுக்கீனமுண்டோ.

வசனம்.

கேளும் அண்ணாவே எனக்குவந்த ஆபத்தைத் தீர்த்தபோதே எனக்குத் தகப்பனானீர் நீர் வந்தவழியிலே என்புருஷனைக் கண்டிரு ந்தால் சொல்லும் அண்ணாவே.



37

வேடன்சொல்-விருத்தம்.

துணையொருவருமில்லாமல் தயரமாய்வனத்திலேதான்
கணவனைப்பிரிந்துநீயுங் கலங்கிநின்றழுவதேனோ
புணரியிலருக்கன்றானும் போய்விழுந்திடுமுன்னெந்தன்
மனைக்கொளக்குடிசைசெல்வோம் மங்கையேவருகுவாயே.

வசனம்.

அகோகேளும்பெண்ணே தமயந்தி அந்தகாரமான காட்டிலே அரசனைக்காணாமல் மதிமயங்கி திரிவானேன் சூரியன் அஸ்தமிப்பதற் குள்ளாக நம்முடைய குடிசைக்குப்போவோம் வாரும்பெண்ணே

வேடனுக்கும்-தமயந்திக்குந்தர்க்கம்.

தமயந்திசொல்-தரு.

இ-ய-பந்துவராளி-திரிபுடைதாளம்.

வாருமென்றச்சமில்லாமல்கூறும்வேடனே அடபாவி
மதியுனக்குவந்ததென்ன சதியடாஅண்ணே

வேடன்சொல்-தரு.

சதிசெய்தமன்னனைத்தேடி மதிகலங்கியே-அடிபெண்ணே
தயங்கிடநீ நான்மனது மயங்கினேன்பெண்ணே

தமயந்திசொல்-தரு.

மயங்கநீவேண்டாமிந்த பயங்கரமான-பாம்பை
வதைத்துச்செய்ததர்மத்தை சிதைக்கிறாய்வேடா

வேடன்சொல்-தரு.

எந்தன்மீதிலிஷ்டம்வைத்துவக்கிடாமலே அடிபெண்ணே
சந்தோஷமாகவென்பின்னே வந்திடாய்கண்ணே

தமயந்திசொல்-தரு.

பின்னேவருங்காரியந்தனை யெண்ணிடாமலே-அடபாவி
பேதையாலிறந்தவர்கள் கோடானுகோடி

வேடன்சொல்-தரு.

காதலுன்மேலெனக்கு ஆசையாக-நானுன்
கானகத்தில்வீற்றிருப்போந் தானிதம்பெண்ணே

தமயந்திசொல்-தரு.

நீதமெனக்குகந்தமன்னன்சதமல்லாமலே அடபாவி
நேயமாய்த்துணைக்கதுற்றாய் நாயேநீபோடா

வேடன்சொல்-தரு.

நேயமாயழைத்துவந்த    மாயமாய்விட்டுப்-போன்
நிருபனுக்கோநீமனது    உருகிறாய்பெண்ணே

வேடன்சொல்-பத்தியம்.

சித்திரமோவொளிமேவுரத்தினமோதிகழ்பூர்ண
திங்களோவுயர்வானதங்கமோநீ
சுத்தநவரசமிகும்புத்தகமுகோஜகந்
துதிசெனந்தரமதனன்துணைவிரதியோ
நித்தியவானவராசுபெற்றயிந்திராணியோ
நிகரிலாபூரமோதிற்குமனமோ
சித்தசன்மயக்கியுன்பாதகாமனைகளில்
தெவிட்டனிடவோவிந்தவடிவுகொண்டாய்
உத்தமியெந்தன்மேலுனதுசித்தம்
வைத்துநீகாரடிமாதராசே
புத்தியுமயங்குதடிதத்தைமொழியே
இத்தருணமென்குடிசையேகுவாயே.

வேடன்சொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

அன்னமேநான்மோசமாகினேன் - மெத்த
ஆவலுடன்கூடிமேவியிருந்திட    (அன்னமே)
வன்னமயிலே குயிலே    இரு
வாலமதி-போனுதல்-வேலின்விழி-பாலின்மொழி (அன்)

தமயந்திசொல்-தரு.

என்னடாவாய்மதம்பேசுறாய்-வேடா
என்னடாவாய்மதம்பேசுறாய்
முன்னமேமட    மாதர்களால்வெகு
மோகமதனாலே    கெடுலோகமதில்(என்னடா)

வேடன்சொல்-தரு.

வங்கணமாயிருவரும்மானே    குலாவியொன்றா
யிங்கிதவேன்ரதிபோலே-தினமு- மிருந்திடலாமினிமேல்
மங்கையென்மாதே    வருவாயிப்போதே
சங்கையென்றாதே    தடுத்துரையாதே



சம்பிரமனாயென்னை    யடிமையடைத்திட
அம்புயநேர்விழி    நீர்கள்துடைத்திடும்
தக்கமேவுந்த    லங்கமதைத்தொட
தாளவில்லைமானே    கேளுமினிநல்ல (அன்ன)

தமயந்திசொல்-தரு.

பஞ்சைபென்றோ குறிக்கிறாய்-வரும்விதி
பாராமலே யுரைக்கிறாய்
கெஞ்சுவ    தேதுக்கடா-உனதுசொல்
கேழ்ப்பது    மேதுக்கடா
அஞ்சுவதேது    அகல்வாயிப்போது
கொஞ்சத்தனத்திற்    குறியாய்மனத்தை
கோபமுண்டோமனஸ்    தாபமில்லாமலே
பாபஞ்செய்யாதே    பழுதசொல்லாதே
மோசமாந்தீயினில்    முழுகிச்சாகாதே(என்ன)

வேடன்சொல்-தரு.

வஞ்சிடனமிருள்    வனத்திற்பிரிவது
மார்க்கமோ    தான்புனத்தில்
கொண்டவன்றன்மன    தால்சற்றேனும்
குறியாம    லந்தரத்தில்
ஒண்டியாய்விட்டு    உருசலித்திட்டு
விண்டிடுப்போது    விடாமலுன்மோக
மிகுந்ததவம்செய்து    காணவேவுந்தனை
மீறிமதன்கணை    நாடவேயெந்தனை
உகந்தொருமுத்த    மகிழ்ந்தருள்சித்தம்
உதவிசெய்திக    ழாமலென்கண்ணே (அன்ன)

தமயந்திசொல்-தரு.

பார்ல்தவ    முடைய-ரிஷிகளும்
பத்தினி    மாருடைய
நேர்மையழிக்க    வெண்ணு-சிவனுமே
நிசுடயமாக    வெண்ணி
பெருலகற்று    பிச்சையெடுத்து
பின்றுவன்போனது    தானறியாயோ

ம

இக்கானேவந்து இடர்சொல்லுவாயோ
பேதகமென்றுதே ருதினியுன்றுதே
பித்தாவுந்தனது வித்தைதில்லாதடா(என்னடா)

தமயந்தி புலம்பல்.

கலித்துறை.

தனிவழியேவந்தமாதென்றுவேடனுந்தப்பிதமாய்
அனியாயமானவசைசொல்லலுற்றனனுதாவு
இனியாரிக்கானில்மறாசதியில்லையெனைப்புரக்க
கனியாமுனையன்றிவேறில்லைகாருக்கதாானே.

திபதை-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சிவசிவாயிந்தவேடன் சிந்தைமதமாயென்னை-சிவனே
அவமானமாய்ப்பேசிட ஆச்சுதேகேழ்க்கவும்நான்-சிவனே
குவலயத்தாசர்தன் கோதையாதர்களுக்கெல்லாம்-சிவனே
பவஞ்செய்துபிறந்தேனோ பாவியித்துயர்பட்டச்-சிவனே
கானகவேடனென்மேல் காதல்கொண்டேநிற்கிறுன்-சிவனே
மானமழியவுயிர் வைத்திருந்தென்னபலன்-சிவனே
தானேவந்தெனைச்சுற்றுஞ் சர்ப்பக்கொல்லாமற்போச்சே-சிவனே
ஈனம்வராமலென்னை இன்றாட்சிக்கவேணும்-சிவனே

வேடன்சொல்-கொச்சகம்.

நானேவுனைத்தினமு நன்மையுடன்சேர்ந்திருப்பேன்
மானேமதிமயக்கி வாட்டமதுகொள்ளாதே
தேனேதமயந்தி தேவியுனக்கானதெல்லாந்
தானேகொடுத்திடுவேன் தயங்காதேபூங்கிளியே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே தமயந்தி இந்தக்கானகத்தில் நீஒண்டியாக புலம்பித்திரிவானேன் உனக்குத்தேவையான மாமிசங்களும், காய்-கிழங்கு-பழங்களும், கொம்புத்தேனும் குறைவறக்கொடுப்பேன் சந்தோஷமாக என்னைச்சேர்ந்தணையடி பெண்ணே.



39

தமயந்திசொல்-கொச்சகம்.

வாருமென்றுளன்னருகில் வந்துநிந்தைபேசியென்னைச்
சேருமென்றுளந்தனுக்குத் தேறுதலைசொல்லவந்தாய்
நேரும்பழிகளெந்தன் நேயம்வையாமற்குடிசை
சேரும்பிழைபொறுத்தேன் நீங்குசொல்லும்வேடவனே.

வசனம்.

கேளடா வேடா என்னை அணையவேணுமென்ற புத்தியில்லாமற் பேசுகிறது தர்மமல்ல உன்னுடைய வீணாசையை மறந்துவிடு நீயா பெரிந்துபோவாய் நீ பிழைக்கவேண்டுமானால் சீக்கிரம்உன் குடிசைக்குப்போடா வேடா.

வேடன்சொல்-தரு.

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

அதிருபவனிதையே அன்னமேஅமுர்தமே
மதிமுகமலர்ந்தெனை மருவநீவருவாய்

தமயந்திசொல்-தரு.

வருவதேதன்குல வஞ்சியரோசொல்லும்
பருவமதறியாமற் பதறுறாய்வீணா

வேடன்சொல்-தரு.

வீணுமன்மதன்விடு மென்மலர்க்கணையாலே
வாணாள்வாடுவதுந்தன் மனதுக்குசமோ

தமயந்திசொல்-தரு.

மாராருமன்னவன் பாரியென்றென்னுமல்
நேராயென்முன்னின்று நிந்திக்கலுற்றாய்

வேடன்சொல்-தரு.

தென்றற்குளிர்ச்சியால் தேகமெலியுதே
எந்தன்விரகத்தை யிட்சணந்தீராய்

தமயந்திசொல்-தரு.

தீர்க்கவேண்டுமென்று திண்டுமுண்டுபேசாமல்
மார்க்கமாகவுந்தன் வாழ்மனைக்கேகாய்

வேடன்சொல்-தரு.

ஏகபோகமாக யிருவருமாய்க்கூடி
தாகமோகந்தீர்வோந் தையலேசெல்வாய்

தமயந்திசொல்-தரு.

செல்லும்நல்லசதி ஒத்தியாமல்நீயும்
புல்லாவாய்மதம்பேசப் பொருந்தாதேவேடா

வேடன்சொல்-கந்தார்த்தம்.

வேதஸ்புரிந்தவிதியின்பயன்கள்விரவிப்பொருந்தமதனன்
போரின்சரக்கனையுந்தொடர்ந்து பொருதென்றலோடுபனையின்
மீதிற்சிறந்தகுயிலுந்தெளிந்தவெண்டிங்களும்பகைசெயுந்
துன்றனக்கொள் வடிவேமிகுந்த

தோகாயெந்தனைக்காரடி-வகைசொல்லாமல்
மோகாந்தகாரந் தீரடி
தோகையரோமன வேகமதாகவே
சோகமிலாதியல் பாகவேவந்திடும்(தோகா)

தமயந்திசொல்-கந்தார்த்தம்.

ஏண்டாயிப்புவசனங்கள்கூறி யிடதேநினைந்தவெருவாய்
மாண்டோரினங்களறியாமலுந்தன்மதியுங்கலங்கிமிகவுந்
தாண்டாதிலங்குமணிபோலெழுந்தசுடர்மேல்விழுந்தபுழுவாய்ப்
பூண்டாவிநீரும்வேண்டாமடாநீ

போடாயென்முன்னேநில்லாதே-புத்தியில்லாத
வேடாவாதகள் சொல்லாதே
போடுனதாசையை யிட்டுவாயெனைக்
கூடுவோமென்றுநீ வாடுகிறாய்பாவி(போடா)

வேடன்சொல்-கந்தார்த்தம்.

போவென்றுசொன்னமயிலேபிரிந்த புவியாண்டமன்னனுனையே
ஆவென்றிரக்கவேயிக்குவிட்ட அவனென்றெண்ணாதேயெனையுந்
நீயன்பிரிந்துவிடினுப்பிராணசினேகந்தவிர்ந்திடேனுன்
தாவென்றுமுன்னமேவந்தநாகந்

காணுதிறந்ததன்னை-பாரடிபெண்ணே
வாணுளழிந்ததுமுன்னே
காணுமுன்மீதினி லாணுதலாகவே
பூணுதுயாமயல் நாணமில்லாமலே(காணு)



தமயந்திசொல்-கந்தார்த்தம்.

முன்னாலிருந்தவுறவாய்நினைத்து மொழிகின்றபாவியெனையும்
உன்னாமலிந்தவனியாயமெந்தனுடனேமொழிந்தபுலையா
என்னாலிறந்துபழிபூணவேத னெழுதம்பயன்கள்விடுமோ
சொன்னால்மிருந்தகப்பேடிநினைந்த

துகாற்புலம்பிறையடா-வீணிலேசொல்லும்
வாதாற்கலங்கிறையடா
துகநினைந்தகி லேதுவரும்பல
நீதிகுலைந்திடும் பாதகாநிந்தையாம்(துகால்)

வேடன்சொல்-வெண்பா.

போமோமகாராஜன்பூசலிலேயென்னைவிட்டா
லாமோமனமிரங்கி யாளவா-மாமோக
சுந்தரமேபூங்குயிலே தோகைமயிலேயின்பந்
தந்திரக்குமுன்காதல்தான்.

வேடன்சொல்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

சித்தமகிழ்ந்தணைத்தொரு முத்தந்தாராயோ-அடிபெண்ணே
மெத்தமயலாகுதுந்தன் விரகம்சகியேனே(சித்தமகி)

தமயந்திசொல்-தரு.

பித்தாம்பிபேயாயென்னை யெத்தாதேபோடா-அடபாவி
பத்தினலாமென்றெனை சித்தந்தனிலேயெண்ணாதே(பித்தா)

வேடன்சொல்-தரு.

என்னமதில்வேறொன்றில்லை இன்பமுடன்கூடி-உந்தன்
பின்னமுலைதொட்டணையக் கிலேசமதாயெண்ணாமல்(சித்தம)

தமயந்திசொல்-தரு.

அல்லடாபாவிநீசும்மா ஆவியைவீணில்-விடாதே
நில்லாதேபோடாயென்னாசை நெஞ்சந்தனில்வையாதே(பித்தா)

வேடன்சொல்-தரு.

நெஞ்சந்தனிலேயென்மீது நேயமில்லாமல்-பேசாதே
பஞ்சமலர்மாரனம்பு பாயுதிதற்கென்னசெய்வேன்(சித்தம)

தமயந்திசொல்-தரு.

பாயுதமாரனம்பென்று பரியாசமாக-என்னை
வாயிலும்பாகவேசொல்லி மடியாதேபோடா(பித்தா)

வேடன்சொல்-தரு.

மடிந்தாலுமுன்னாசையெந்தன்மனதைவிட்டுப்போமோ-பெண்ணே
பிடிவாதம்பண்ணாதேயிடீ பேதையேநான்தாளேன் (சித்தம)

தமயந்திசொல்-தரு.

தாளாமலென்னடாநீயும் சங்கராபரணக்-கூறி
கேவடாவுன்மதத்தாலே கிட்டநெருங்காதேடாவி (பித்தா)

வேடன்சொல்-கலித்துறை.

நாயுண்டு ஆயிரம்நரியுண்டுகோலுண்டுநற்றனைக்குப்
பேயுண்டுஎன்னிடமந்திரமோவெகுபெலத்தனுண்டு
காயுண்டுகொட்டிக்கிழங்குண்டுதேனுண்டுகப்பளியுண்
டேயிந்தசம்பத்தெவர்க்குண்டுபோடியேந்திழையே.

இதுவுமது.

கட்டளைக்கலிப்பா.

பாவியென்றுமொழியுந்தமயந்திப்
பாவியெந்தன்பரிதாபம்பாடி
கூவுமாங்குயில்தென்றனுந்திக்களுங்
கொடுமைசெய்யக்கொடியமதனுமென்
ஆவிசோரவடிக்கஙாதாக்கவும்
ஆர்ப்பரித்துவில்லேக்கையிலேந்தியே
காவிமாமாரனம்புதொடுக்கனன்
காதல்தீரடிகாமசஞ்சீவியே.

வேடன்சொல்லும்-லாவணி-இ-ம்-கிரோ-ஆதிதாளம்.

கயல்விழியழகும் மதிமுகவொளியுங்
கண்ணிற்கண்ட போதே நான்
காதல்கொண்டேன் மாதே-என்
கருத்தையுமயக்கி யுருக்குதுமாரன்
கணைகள்பாயுதிப்போதே (கயல்விழி)

தமயந்திசொல்லும்-லாவணி.

பாயுதென்றேபகர்ந் தேனயம்பாடிய
பேயனேநீ போடா-உந்தன்
வாய்புழுக்கா தோடா-நீ



தாயினுங்கடையாய் தீயிலேவீழ்ந்து
நலியாதேபோடா (பாயுதே)

வேடன்சொல்லும்-லாவணி.

பிழையல்லமதனன் கணைமலர்தனைக்குது
பெண்ணே வந்திடுவாய்-ஒருமுத்தந்
கண்ணே தந்திடுவாய்-என்னைப்
பிரியாவிடையாய் ரதிமாரனைப்போல்
பிரியமாய்வாழ்ந்திடுவாய் (பிழையல்)

தமயந்திசொல்லும்-லாவணி.

பெண்ணேயெனவசை பேடும்பாவியென்
கண்ணின்முன் நில்லாதே-உன்
எண்ணமுஞ்செல்லாதே-தாய்ப்
காரிகையார்கற் பெனுமக்கினியால்
கட்டலதுபொல்லாதே (பெண்ணே)

வேடன்சொல்லும்-லாவணி.

தாவியதென்றனு மேவிடவேயனல்
தாவுதேமட மானே-நாணினி
சகிப்பேனோ தேனே-இப்போ
தாமிஷஞ்செய்தி டாமலேயென்னை
தானணைபுவீடீதே (தாவிய)

வேடன்சொல்-வெண்பா.

பெண்ணரசேகாமனம்புபேசிக்குதென்மனதை
யெண்ணமெல்லாம்வேறாயேகினதே-கின்னமுடை
பந்துகண்டேனென்றுசுமதுபாகதிநாமென்னசெய்வேன்
சிந்தைமகிழ்ந்தெந்தனைநீசேர்.

வேடன்சொல்-கலித்துறை.

காட்டில்திரியுந்தமயந்தியேயென்றன்கண்மணியே
வீட்டினில்வாடியிருவருங்கூடியேவீற்றிருப்போம்
கேட்டதளிப்பன்தடுத்தனாயாதேகிளிமொழியே
மாட்டேனென்றாலுமினிப்பொறுக்கேனடிவஞ்சியரே.

வேடன்சொல்லும்-லாவணி.

கயல்விழியழகும் திகழ்மதிமுகமும்
கண்ணிற்கண்ட போதே-எந்தன்

கருத்தைமயக்கி யுருக்குதுமாரன்
கணைகள்பாயுதுமாதே

தமயந்திசொல்லும்-லாவணி.

மயக்கநீவேண்டாம் பயங்கரமான
வனத்தினில்வந்தேனென்று-இந்த
வார்த்தைகள்சொன்னு லேற்குமோவெனக்கு
வளர்தந்தைநீதானே

வேடன்சொல்லும்-லாவணி.

தந்தையென்றுரைத்து சிந்தையினாசை
தவிர்க்காதேதேனே-இப்போ
சரசங்கள்செய்திடும் புருஷர்போலென்னைத்
தழுவிச்சேரடிமானே

தமயந்திசொல்லும்-லாவணி.

சேருமென்றென்னைக் கூறிடுமுந்தன்
சிரமதைத்துணித்திடுவேன்-இப்போ
திரும்பிப்பாராமலே வரும்பாதைகூடி
செல்லும்நல்லதண்ணே

வேடன்சொல்லும்-லாவணி.

செல்லுமென்றுரைத்தால் கொல்லுதென்னாசை
சிந்தைவிட்டொழியாதே-கோபஞ்
செய்திடவேண்டாந் தையலேநாமுஞ்
சேர்ந்திருக்கலாமாதே

தமயந்திசொல்லும்-லாவணி.

இருக்கலாமெனவே நினைக்கிறாயண்ணே
இருக்குதுகாலபாசம்-எந்தன்
எதிரில்நில்லாதே இடும்புசொல்லாதே
இடர்கள்செய்திடவேண்டாம்

தமயந்திசொல்லும்-லாவணி.

வேண்டாமென்றென்னைத் தீண்டாமலிருந்தால்
விட்டுநான்போவேனே-எந்தன்
விரகத்தைத்தீராய் தருமத்தைப்பாராய்
விடம்புசெய்யாதேபெண்ணே



தமயந்திசொல்லும்-லாவணி.

பெண்ணென்றுசொல்லிநீ எண்ணியேவிளக்கில்வீழ்
பூச்சிபோல்மடியாதே-இப்போ
பிடித்ததுநாச காலமுனைப்பாவி
பிரமைகொண்டலையாதே

வேடன்சொல்லும்-லாவணி.

அலைந்திடவேண்டாம் வனந்தனிற்பிரிந்த
அரசனைநீதேடி-பெண்ணே
அருகில்வைத்துனைநான் பிரியமாய்த்தானே
அடவியில்வாழ்வேனே

வேடன்சொல் - வெண்பா.

பொங்குமதியுந்தணலாய்ப்பூங்குயிலுமேசவெனைச்
சங்கையில்லாமாரனம்பு தைக்குதுருக-மங்கையரோ
ஆவிநயமேபொல்லாத ஆசைமீறுதென்னசெய்வேன்
பாவியேயிணங்கவேளைபார்.

தமயந்திசொல்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

இணங்கவாவென்றுசொல்லி யேழைமதியாய்ப்பேசாதே
சுணங்கனைப்போல்நீயுந் துள்ளிவிழுந்தேசாதே

வேடன்சொல்-தரு.

ஏசுவேனென்றெனை யிகழ்ச்சியாயெண்ணாதே
ஆசைதீரவந்து அணைவாய்கருணைப்பெண்ணே

தமயந்திசொல்-தரு.

பெண்ணேயென்றுசும்மா பிதற்றுகிறாய்பாவி
கண்ணின்முன்நில்லாதே காதல்வையாதேநான்கோபி

வேடன்சொல்-தரு.

கோபஞ்செய்தாலுமுன்னைக் கூடியணையாமலே
சோபந்தீரவகை சொல்லடிநீயன்பாக

தமயந்திசொல்-தரு.

அன்பினால்ராவணனு மழிந்தான்சீதைதன்னாலே
தென்பாகநீமாளாதே தெரிவையென்சாபத்தாலே

வேடன்சொல்-தரு.

தெரிவையேயென்றிரோகம்    சித்தசன்கணையினால்
உருகுதென்னசெய்வேன்    உத்தமியேமனம்வை

தமயந்திசொல்-தரு.

மனம்வைக்கச்சொன்னாலே    மான்வாயடாபாவி
தினமுமென்னாசைவிட்டால்    சீர்பெறுவாய்போடா

வேடன்சொல்-விருத்தம்.

நலமிலாவார்த்தைசொன்ன நங்கையேகேளுமிந்தத்
தலந்தனில்வேடரென்னைச் சமர்த்தனென்றிறைஞ்சுவார்கள்
பிலங்கொளுமிருகந்தன்னைப் பிடித்தொருநொடியிற்கொல்வேன்
அலங்கிர்தமயிலேவுந்த னாசையால்வணங்கினேனே.

வசனம்.

கேளும்பெண்ணேதமயந்தி என்னை அற்பனென்றெண்ணாதே இந்தக்காட்டிலுள்ள வேடர்களெல்லாம் என்பெயரைக் கேட்டால் நடுநடுங்கித் துடிப்பார்கள் பிலத்தமிருகங்களையும் பிடித்துக் கொல்லுவேன் அவ்வளவு சவுரியம்படைத்த நான் உன்னுடைய சவுந்தரியமென்னும் வலையிலகப்பட்டு வணங்கித் தவிப்பதைக்கண்டும் நீபராமுகமாயிருந்தால் நானென்னசெய்வேன் பெண்ணே.

வேடன்சொல்-தரு.

இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

பொறுக்கவொண்ணாதென்றால் போவென்றுசொல்வதேன் - அன்ன
வெறுக்கலாமோவிதுவேளையல்லடிபெண்ணே அன்னமே[மே-மனம்

தமயந்திசொல்-தரு.

வேலையென்னடாபாவி    மிருகம்புசித்திடும்வேடனே - நீ
காலைபோலென்னெதிரில்    கலங்குவதடுக்குமோவேடனே

வேடன்சொல்-தரு.

அடுக்காதுன்னைக்கொல்லு மரவத்தைத்துணித்தேனே அன்னமே - காம
இடுக்கந்தவிர்த்துக்கூடி    யிருந்தாற்பயமென்னடி அன்னமே

தமயந்திசொல்-தரு.

இருந்திடென்றுசொன்ன    யிவ்வனந்தன்னிலேவேடனே - பாவி
பொருந்துமோவுனக்கிது    புத்தியோதன்மார்க்கவேடனே



வேடன்சொல்-தரு.

புத்திசொல்லுவதென்ன பூவையேயினிகேளும்அன்னமே- உன்னைப்
பற்றியிழுத்துமான    பங்கஞ்செய்வேனடி அன்னமே

தமயந்திசொல்-தரு.

பங்கஞ்செய்திடச்சனி-பகவானும்பொறுப்பாரோவேடனே-உந்தன்
அங்கந்தணலாம்    அனுகாமலோடிப்போவேடனே

வேடன்சொல்-விருத்தம்.

ஓடிநீபோடாவென்று உரைத்தமாமயிலேயானும்
தேடியபொருளுக்கேற்ற சித்திரப்பதுமைபெண்ணே
நாடினேனுந்தனாசை நல்லதார்த்தைக்கோதிக்
கூடியேயணையக்கண்பார் கும்பிட்டேன்கும்பிட்டேனே.

வேடன்சொல்-சிந்து.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பாதம்பணிந்துநான்    பணிவிடைசெய்வேன்டிபெண்ணே
பட்சம்வைத்தெந்தனை    ரட்சித்தருளடியென்கண்ணே
சீதமலர்வதன    மாதேஅடிமைகொள்ளும்பெண்ணே
சிந்தைகலங்காமல்    வந்தெனைச்சேரடிகண்ணே
காமன்கணையாலெந்தன்    னாவிதுடிக்குதடிபெண்ணே
கட்டியணைத்தொரு    முத்தந்தருவாயடிகண்ணே
சோமனுந்தணலாகக்    காமன்சரந்தைக்குதுபெண்ணே
சோபம்வருதேயென்மேல்    கோபமேதடிசும்மாகண்ணே
பாவிமாரன்குயில்    கூவிசதிசெய்யுதேபெண்ணே
பாராமலெனதாசை    தீராமல்விடுவேனோகண்ணே

இதுவுமது.

தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பூசைசெய்வேனடிபெண்ணே-ஒரு
புத்திசொல்லடியென்கண்ணே

தமயந்திசொல்-தரு.

நாசகாலமோடா    வேடா-நீ
நாகத்துக்காளாகாதே    போடா

வேடன்சொல்-தரு.

பாதம்பிடிப்பேனடி பெண்ணே-நான்
பணிவிடைசெய்வேனடி கண்ணே

தமயந்திசொல்-தரு.

வம்புந்தும்புமாக வேடா-நீ
வாய்புழுத்துப்பேசாதேபோடா

வேடன்சொல்-தரு.

எட்டிப்பிடிப்பேனடி பெண்ணே-நான்
இனிமேல்கேளேனடி கண்ணே

தமயந்திசொல்-தரு.

கிட்டிக்கிட்டிவாராதே பாவி-இப்போ
கிட்டினால்நானுனக்கு நாவி

வேடன்சொல்-தரு.

சகிக்கமாட்டேனடி பெண்ணே-கைச்
சரசஞ்செய்வேனடி கண்ணே

தமயந்திசொல்-தரு.

நகைத்துப்புரமெரித்தார் வேடா-உன்னை
நாசஞ்செய்வாரடா போடா

வேடன்சொல்-தரு.

மருக்குபாரேனடி பெண்ணே-கை
வலுச்செய்வேனடி கண்ணே

தமயந்திசொல்-தரு.

நெருங்கிவராதேநீ வேடா-உன்னை
நெருப்பாயெரிப்பேனுன் போடா

பொது-கலித்துறை.

முக்கண்சிவனுதற்கண்ணதனால்மதன்முன்பெரிந்த
பக்கலனுமனிலங்கையெரித்த பழைமையைப்போல்
மைக்குழலாள்தமயந்தியுந்தன்னிடம்வைத்தகற்பு
அக்கினியாலுமவ்வேடனெரிந்ததிசயமே.

வசனம்.

இந்தப்பிரகாரம் மோகலாகிரிகொண்டு தமயந்தியை வருத்தியவேடனானவன் பரமசிவனெதிரில்நின்ற மன்மதனைப்போலும், அனுமானெதிரிலிருந்த இலங்கையைப்போலும், தமயந்தியின் கற்பென்னுமக்கினியின்முன்னின்றவேடன் எரிந்து சாம்பலானான்.



இதுவுமது விருத்தம்.

கோபத்தாலெதிர்த்தவேடன் கோதையாள்தனக்குவந்த
ஆபத்தைத்தீர்த்தும்பொல்லா வகத்தினாலெரிந்தபின்பு
சோபமதாகிமாது துணையொருவருமில்லாமல்
பாபமென்செய்தேனென்று பைந்தொடிபுலம்புவாளே.

வசனம்.

இப்படி தமயந்தியைப்பிடித்தவேடனானவன் எரிந்து சாம்பலானபின் தமயந்தியானவள் அந்தக்காட்டில் வழிதெரியாமல் திகைத்துப் புலம்புவதுகாண்க.

தமயந்தி-புலம்பல்.

திபதை-இ-ம்-நவரோசு-அடதாளம்.

கண்ணிகள்.

மனிதரில்லாப்பாவியுலகுதன்னில் உயிரா
வைத்திருக்கலாமோயிறவாமல்
தனிவழியேநல்லமங்கையர்கள் கணவன்
தன்னைவிட்டுக்காட்டில்வரலாமோ
கொண்டதொருகணவனில்லையென்று வேடன்
கோலாகலஞ்செய்திடவேகுறித்தான்
அண்டிவந்தெனைத்தொடவேவேடன் இப்போ
அனியாயமாயழுக்கினாயானான்
ஆலயங்கள்சத்திரசாலைதன்னை நான்
அழித்துநஞ்சைசோற்றிற்கலந்தேனோ
காலினாற்பசுவையுதைத்தேனோ அதன்
கன்றுக்குப்பால்விடாமற்கறந்தேனோ
நம்பினோரைக்கூட்டிவந்துநானும் நீக்காய்
நட்டாற்றினிற்கைவிட்டகன்றேனோ
வம்புசெய்துபிறருடைமைதன்னை கையில்
வாங்கியேநானில்லையென்றுரைத்தேனோ

வாழ்மனையைப்பிறர்தமக்குவிற்று நானும்
மன்னில்வழக்குரைத்தபகரித்தேனோ
தாழ்வில்லாமற்செய்தபாவமேதோ கொண்ட
சக்ரவர்த்திதனைப்பிரிந்தேனையோ
திங்கள்கங்கையணிந்தகயிலைவாசா தொண்டன்
சுந்தரர்க்காய்த்தூதுசென்றயீசா
மங்கைபான்படுங் கண்கலக்கந்திர எந்தன்
மன்னவனைக்காணவெனக்கருள்தா
பொங்குதும்பைகொன்றையலர்சூடும் முக்கண்
புனிதாவெனைக்காப்பதுன்றன்கடனே

காலம்.

திருவாரும்விதர்ப்பநகராளும்வீம
சேனனருள்புதல்வியெனச்செழிக்குங்காலம்
தருவளருங்கற்பகநாட்டாருமெச்சுஞ்
சக்ரவர்த்திநளன்புகழைச்சாற்றுங்காலம்
கருவளருமெனதுதந்தைநளேந்திரனுக்குக்
கன்னியெனமணஞ்சூட்டிக்களிக்குங்காலம்
இருள்வளருங்கலிராஜனிடுக்கஞ்செய்ய
வெஞ்ஞ்னியெந்தன்மனநடுக்கமெய்துங்காலம்.
எய்திடேபுஷ்கரனுமுலகையாள
இராஜனுடன்வனத்தில்வந்திருந்தகாலம்
செய்திடவேநித்திரையிலென்னைவிட்டுச்
சென்றமன்னன்றனைத்தேடித்தியங்குங்காலம்
வந்திடவேயெனைச்சுற்றும்பாம்புதன்னை
நறுக்கிவனவேடனென்னைநாடுங்காலம்
உய்திடவேபொறுக்காமலெரித்தயெந்த
னுத்தமனைத்தேடியேயுருகுங்காலம்

பொதுவிருத்தம்.

வனத்தில்விட்டரசன்றானுமனந்துணிந்தேகமங்கை
தனித்துநின்றழுகவேடன்றன்மதத்தாலிச்சித்து
ஸ்தனத்தினில்வெந்துநீறாய்த்தணிந்திடவனிதையாளின்
மனத்துயரகற்றஅந்த வனத்தில்வாழ்ரிஷிகள்வாரார்.



வசனம்.

அஃதெப்படியென்றால் நளமகாராஜன் தமயந்தியை காட்டில் விட்டகன்றபின்பு தமயந்தியின்காலிற்சுற்றியபாம்பைத் துணிக்கவந்த மோகங்கொண்ட பாவியான வேடன் எரிந்து சாம்பலானதை அதைக்கண்டதமயந்தி இது தெய்வச்செயலென்றுதீர்மானித்து கணவனைத்தேடித் திகைத்து புலம்பும்போது அந்தவனத்தில்வாசஞ்செய்யும் ரிஷிகள் வருகிறவிதங்காண்க.

ரிஷிகள்வருதல்-விருத்தம்.

அத்துவிதநிலையதனைமெத்தவுணர்பவராகியமலராகி
நித்தசுத்தராகியெங்குந்தானுகியத்துவிதநிலையோராகிச்
சத்தசித்தானந்தமதைத்தானுகநினைப்பவராய்சாக்ஷாத்கார
வஸ்துதனையடையவனந்தனில்வாழும்ரிஷிகளிதோவருகின்றூரே;

தரு-இ-ட-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

தவத்தில்யிருந்து அத் விதத்தையறியமகா
வனத்துரிஷிகள்வந்தாரே

அனுபல்லவி.

அவத்தைபகற்றியிந்த ஜகத்தாசைவிட்டுமுத்தப்
பவத்தைநினைத்துவந்த மனத்தாசையும்வெறுத்து(தவத்)

சரணங்கள்.

சிரசிற்சடைதரித்து பிரணவமுச்சரித்து
கரத்தில்தண்டுபிடித்து காஷாயமுமுடுத்து
அரியபூதியணிந்து பாதுரர்பதம்பணிந்து
ஆகமமாதி யறிந்தவராகி
யோகசமாதி யிருந்திடவேகி (தவத்தி)
காமமதைவிடுத்து நேமமதையடுத்து
சாமவேதம்படித்து நாமதந்தனைக்கெடுத்து
நேமரூபங்களில்லா சாமியையறிந்துநல்ல
நேமமாகவே நினைவதுமிகக்கொண்டு
சாமசமதை தனையுரிமையாயுண்டு (தவத்தி)
காலனைவெல்லமுன்னு மாலியையமர்ந்தோன்சொன்ன
மூலமந்திரம்பன்னி சிலம்வேண்டுமென்ன

நீலவிழியாராசை மேலுந்தொடராமலே
நித்தியமாய்ப்பரி சுத்தனைத்தேடி
நேசமாகத்தேடி ராகத்தைப்பாடி (தவத்தில்)

தமயந்தி-ரிஷிகளைத்துதித்தல்.

விருத்தம்.

ஜகத்தாசையதனைவிட்டுத் தவநிலையனுசரித்து
மகத்தான்விருக்ஷத்தோடு வனத்தினில்யோகஞ்செய்து
அகத்தினைக்கடிந்துநின்ற ஐயரேபோற்றிபோற்றி
பகவரேபோற்றியென்னைப் பாலிப்பீர்போற்றிபோற்றி.

ரிஷிகள்சொல்-விருத்தம்.

ஆரம்மாயிந்தக்காட்டில் ஆண்துணையில்லாமல்நீ
பேர்துஞ்சாயமல்ல புலியானைசிங்கமெத்த
ஊருனக்கேதுவுன்றனுறவேதுபேர்தானேது
நேரதாயறியச்சொல்வாய் நின்னதுசெய்திமாதே.

வசனம்.

ஆரம்மா தாயே நீ இந்தக்காட்டில் தனித்துப்போகிறாய் இவ்விடத்தில் சிங்கம் யானை புலி முதலிய துஷ்டமிருகங்களிருக்கின்றதே நீ தனித்துவந்தசங்கதியென்ன உன்னூரேது உனதுதாய்தந்தைகள் பெயரென்ன உன்பெயரென்ன உன்புருஷனெங்கே நாங்களறியச் சொல்லுமம்மா தாயே.

தமயந்தி-ரிஷிகளுக்குச்சொல்.

அகவல்.

ஐயரேகேளும் அருமையாயிந்த
வையகமாளும் மகாராஜராஜ
வீமனார்பெற்ற மெல்லிதமயந்தி
பூமனார்படைத்த பூவுலகெல்லாம்
ஆண்டரசாட்சி அறநெறிசெலுத்தும்
மன்றல்சேர்மன்னர் மன்னர்க்குமேலோன்
நளச்சக்கிரவர்த்தி நாயகியாள்நான்
பழுதிலாதிருந்து பாருலகாண்டு
புத்திரன்புத்திரி பிறந்தபினாசன்
அத்தனார்செயலோ அறிகிலேனையா



புஷ்கரன்வந்து பொல்லாதசூதை
யிஷ்டமாயாடென் றியம்பவுமெந்தன்
நாயகனுடி நாரகனாலே
மாயமாய்த்தோற்று வையகமிழந்தோம்
செம்பொன்னுமாடை சிறந்தநாடெல்லாம்
அன்பென்பதில்லா வரசனுக்கீந்து
காட்டினில்வந்து காய்கனியுண்டு
வாட்டமுற்றேயோர் மண்டபந்தன்னில்
அரசனுடியானு மலண்டுநித்திரைசெயுந்
தருணத்திற்பொல்லாச் சநிபனார்செயலால்
மன்னனெழுந்து வழிகூடிப்போனார்
பின்னைநான்விழித்துப் பேதைமையாலே
அழுதுகொண்டெந்த னரசனைத்தேடி
வழிதனில்மூர்ச்சையாய் மயங்கியேகிடக்க
மலைப்பாம்புவந்து மங்கையெனைச்சுற்றப்
புலம்பியானழுதிடப் புகழ்வனவேடன்
வந்தந்தப்பாம்பை வகுத்திருபிளவுசெய்
தெந்தனைக்கண்டு இழிவானவேடன்
மோகித்தணைய முயலும்போது
ஏகனைநினைக்க வெரிந்தவன்போனான்
விதிவசமிதுவென மெத்தவுமழுது
பதிகுலைந்துங்கள் பக்கல்நான்வந்தேன்
அடியவள்மீது அருள்திருநோக்கந்
திடமனதாகச் செலுத்துங்களையா.

ரிஷிகள்சொல்-விருத்தம்.

மதிநுதலாளேயுந்தன் மன்னனுக்கொருதீங்கில்லை
சதியதாயுமைக்கெடுக்கச் சனியனும்பிரித்துவிட்டான்
விதிதனையனுபவிக்க வேறுநீகலங்கவேண்டாம்
பதிதனிற்சேர்ந்திருப்பாய் பகருவோம்வழியுனக்கே.

வசனம்.

கேளுமம்மா தமயந்தி உன்னையும் உன்புருஷனையும் பிரித்துத் தீங்குசெய்தவன் சநிபகவான் நீ விசனப்படாதே படவேண்டிய

கருமத்தைப் பட்டேதொலைக்கவேண்டும் உன்புருஷன் யாதொருகு
றைவுமில்லாமல்இன்னங்கொஞ்சநாளையில்வந்து சேருவான் அதுவ
ரைக்கும் நீ ஒருபட்டணத்திற்குப்போயிரு வழிகாட்டுகிறோமம்மா
தாயே.

இதுவும்-ரிஷிகள்சொல்விருத்தம்.

மாதவிருக்குமிந்த வனம்விட்டிவ்வழியேசென்று
நீநிலாசரக்குகொண்டு செல்லும்வர்த்தகரோடேநீ
சேதியம்பதியைச்சேர்வாய் நீக்கொன்றும்வாராதம்மா
பாதியாமதியைச்சூடும் பரன்துணையாவார்தானே.

வசனம்.

கேளுமம்மா தமயந்தி நீ இந்தவழியேசென்றால் பெரியசாலை
யில்கொண்டுபோய்விடும் அந்தசாலையில் வர்த்தகர்கள் பொதிமாட்
டையோட்டிக்கொண்டு சுவாகுநகரத்திற்குப் போவார்கள் அவர்க
ளைத் துணைக்கொண்டு நீயும் அந்த சுவாகுநகரத்தையடைந்திரு ப
ரமேஸ்வரனுடைய கிருபையால் இன்னங்கொஞ்சநாளில் உன்புரு
ஷன்வந்து சேர்ந்து எப்போதும்போல உங்களதுஇட்டநாட்டையா
ளுவீரம்மா தாயே.

தமயந்திபுலம்பல்.

திபதை-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சிவசிவாயாவொருபெண்பிறந்தேனேயிந்தச்
சிறுமைபடவுமாச்சே — தலைவிதியே
தமயிருந்தேவீமன் பெற்றபலனிதுவோ
தனித்துவனத்தில்வாத் — தலைவிதியே
கணவன்றனைப்பிரிந்து கலங்கிமனம்பதறி
காட்டிலலையலாச்சே — தலைவிதியே
இனம்பிரிந்தமான்போல இருக்கலாமோநானும்
இதுதகுமோஐயோ — தலைவிதியே
கள்ளங்கபடறியேன் கர்மநான்செய்தறியேன்
கணவனைப்பிரிந்தேனே — தலைவிதியே
பிள்ளைகளைப்பிரிந்து பெருங்கானிலேதவித்து
பேதைபுலம்பலுற்றேன் — தலைவிதியே



1,7

மன்னவனைநான்கண்டு மகிழ்ச்சியாய்விளையாடி
வாழ்ந்திருப்பதெப்போ — தலைவிதியே
நன்மையமாகவே நீலாம்புரிராகம்
நான்பாடலாச்சே — தலைவிதியே

பொதுவிருத்தம்.

தமயந்திவிதியைநொந்து தனித்தவள்வனத்திலேதான்
சுமையெருகோட்டிச்செல்லுஞ் சுருணவர்த்தகர்களோடு
கமலநற்சுனையின்பாற்போய்க் களைத்தவள்தூங்கும்போது
யமனைப்போல்யானைக்கூட்ட மிவ்விடம்வந்ததன்றே.

வசனம்.

அதெப்படியென்றால் தமயந்தியானவள் ரிஷிகள்சொல்லிய
படியே சுவாகுநகரத்திற்குப் பொதிமாட்டுடனேசெல்லும் வர்த்தக
ரோடுசேர்ந்து தனதுவிதியையறிந்தைப் புலம்பிக்கொண்டுபோகும்
போது சூரியனானவன் தமயந்தியின்துயரைப்பார்க்கச் சகிக்காதவன்
போல் மேற்குச்சமுத்திரத்திற்குளித்தான் அக்கருணத்தில்வர்த்தகர்
கள் அங்கிருந்தமடுவினருகில் பொதிகளையிறக்கி எருதுகளுக்கு
கொள்ளு புல்லுவைத்து மரத்திற்கட்டிவிட்டு படுத்துக்கொண்டு நித்தி
ரைசெய்தார்கள் தமயந்தியும் வெய்யலில்நடந்துவந்த வருத்தத்தினு
ல் களைத்து அவ்விடத்தில் நித்திரைசெய்யும்போது சநிபகவான்செ
யலால் வர்த்தகரைக்கொல்லயானைக்கூட்டங்கள்வருகிறவிதங்காண்க.

யானைகள் வருதல்.

தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

பெரியயானைக்கூட்டங்கள்வருதே-மதம்
பெருகிக்கண்களிலனல்கக்கிறுதே

அநுபல்லவி.

காடுசெடிக — ளெல்லாமொடியே-மெத்த
களையாகிச்சுதே — தங்களைத்தேடியே (பெரிய)

சரணங்கள்.

சநிபகவான் — செய்தவசதனால்-நல்ல
தமயந்திதனி — யாகத்துடிறல் (பெரிய)

தனியாய்த்தம — யந்திநோகவும்-கூட்
டினமானவர்த் — தகர்கள்சாகவும் (பெரிய)
ஒயிலாகச்சுனை — தன்னைநாடியே-நன்றாய்ப்
பயிராவிரா — சுத்தைப்பாடியே (பெரிய)

பொதுவிருத்தம்.

மதத்தொடுவந்தயானை மங்கைமாள்தன்னைவிட்டு
குதித்தவர்த்தகர்களோடு கூடவந்தவருமாள
மிதித்துக்கொன்றேகமின்னாள் விழித்திந்தக்கோலம்பார்த்து
சதிசெய்ததாரையென்று தவித்துநின்றழுதிட்டாளே.

வசனம்.

இப்படி மதத்துவந்தயானைகள் தமயந்திதவிர மற்ற வர்த்தகர்களையும் வழிப்போக்கர்களையும் மிதித்துக் கொன்றுவிட்டு காட்டிற்கேக பொழுதுவிடிந்தவுடன் தமயந்தியானவள் விழித்து தன்னுடன் வந்த வர்த்தகர்களும் வழிப்போக்கர்களும் இறந்துகிடத்தலைக்கண்டு புலம்புவதுகாண்க.

தமயந்தி புலம்பல்.

தரு-இ-ம்-ஙயால்-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயோ நானென்னசெய்வேன்-கயிலைவாசா
ஐயோ நானென்னசெய்வேன்

அநுபல்லவி.

மெய்யென்றிருந்த — வாழ்வை நான்துறந்து
வையகத்திலலைய — வைத்தாயோயீசா (ஐயோ)

சரணங்கள்.

கூடவந்தவர்த்தக — ரிறக்கவுந்தகுமோ
கோதையென்னுயிர் — பிறக்கவுந்தகுமோ
நாடிமுந்தேனே — வாடிவந்தேனே
மோடிசெய்தெனைக்கொல்லா — தேன்போச்சுதானை (ஐயோ)

வர்த்தகரிறந்திடச் — செய்தேனோபாவி
வையகத்தி — லிருக்குமோயென்றாவி
இத்தனைவாதோ — கர்த்தன்செய்குதோ
சித்தங்கலக்கிடவுஞ் — செய்தாயோசிவனே (ஐயோ)



நாயகன்றனைப்பிரிந் — திடலாச்சே
தந்தனையாரோருயிர் — கருக்போச்சே
ஞாயமோசதிசெய் — மாயமோஅறியேன்
செயிருவர்களைநான் — போய்காண்பதெப்போ (ஐயோ)

தமயந்திசொல்-கலித்துறை.

மங்கையுமணிந்துமைபாகத்திலவைத்தயெந்தன்
கர்த்தனேயெந்தனுக்குத்துணையாயிந்தக்காட்டில்வந்த
வர்த்தகர்தம்மைவனம்வாழும்யானைவருத்திக்கொல்ல
சித்தந்துணிந்ததோயோ சிவனேயுன்செயலிதுவோ.

வசனம்.

அரகரா மான்மழுதரித்த காளகண்டா நாடுநகரங்களையும் புருஷனையும்பிரிந்து நெருங்கியகாட்டில் அலையவிட்டதுமல்லாமல் எனக்குத்துணையாகவந்த வர்த்தகரையும் யானையால் மிதிப்பித்துக்கொல்ல மனந்துணிந்ததோ சர்வேஸ்வரா.

தமயந்தி இறந்த வர்த்தகரைக்கண்டு புலம்பல்.

இடைத-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

ஐயோஐயமாரோதீங்கள் — அநியாயமாயிறக்க
லாச்சேயெற்சனுவேவுக்க — ளரியவுயிர்பறக்க
செய்யாவினைசெய்தேனோநான் — சிறியவயதினிலே
செல்வமிழந்திடவேயிவன் — செயலதனாலே

ஆநேற்றுநாவேமனம் — வாடிவனஞ்சேர்ந்தேன்
அதுவுமல்லாமற்கணவன்றனை-அநியாயமாய்ப்பிரிந்தேன்
வேட்டொருபாவிவந்து — மெய்நடுக்கப்பேசி
விருகாவின்னுயிரிழந்து — போனான்பெருந்தோஷி

ரிஷிகள்சொல்லைக்கேட்டுயுங்கள் — தேசமாகவந்தேன்
நீங்களிந்தவனத்தானையால்மாண்டீமனம்நொந்தேன்
வசமோவிதிவசமோயிந்த — வனத்திலகனியாக
மனம்நொந்திடஅழுதேகனாறே — மன்னன்பதிபோக

நீயவந்தகருணைசதி — மாயமதனாலே
நாயகன்றனைப்பிரிந்தநானி — யாரேநேருந்தபாலே

தாயுந்தமர்தந்தையை யனைவோரையும்பிரிந்தேன்
தமயந்திநாம்புண்ணுகவ ராணியாடிவந்தேன்

பொதுவிருத்தம்.

ஆனைகொன்றவனைவிட்டு அரியநற்றமயந்திப்பெண்
கானகஞ்சுவாகுராஜன் றன்பதிதெருவிற்போக
நானிலம்புகழுங்கோகிலாதேவிதோழியோடு
தானுமச்சபையைநாடிச் சம்பிரமாய்வருகின்றளே.

வசனம்.

இவ்விதமாக தமயந்தியானவள் புலம்பி யானையாலிறந்த வர்த்தகரைவிட்டு நடந்து சதுரங்கபலம்நிறைந்த சுவாகுமகாராஜனுடையநகரத்தையடைந்து இராஜவீதியில் வரும்போது அவ்வரசன் தாயாராகிய கோகிலாதேவி தனதுதோழியருடன் கொலுவுக்குவருகிறவிதங்காண்க.

கோகிலாதேவிவருதல்.

இதுவுமது.

தோகையர்தனக்குமேலாந் துரைப்பெண்ணுன்மதிமுகத்தாள்
மேலாபரணத்தோடு வெகுவிதபணிகள்பூண்டு
வாகுள அரிவைமார்கள் வலமிடப்புறமுஞ்சூழ
கோகிலாதேவிராஜன் கொலுவிற்குவருகின்றளே.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

பாருமெழிபகில நாயகிபோற்காண
கோகிலாதேவிவந்தாள்

அநுபல்லவி.

வாகாயிருபுறமுந் தோகையர்சூழவே
வந்துநன்மாதர்கள் மலரடிதாழவே
ஏகமானவை போகமநுபவிக்கும்
எழில்மிகுசுவாகு ராஜனையீன்றவள்
ஏழில்நிறைசுந்தரமயிலொயில்போன்றவள் (பாரு)

சரணங்கள்.

கொண்டைமுடியழகும் கெண்டைவிழியழகும்
மண்டலமெல்லாம்புகழ் கொண்டவர்சேர்ந்திடும்



வண்டார்குழலிவரும் எண்டிசைக்கதிபருக்
கண்டவர்தடுப்பரும்பிர சண்டன்சபைதனில்
குண்டலமணியணி தண்டைச்சதங்கையணி
கோவையர்களுக்கிய சேப்பரிகாரி
நீதிலாதஅமுர் தந்திறைவாரி (பாரு)

மார்பிற்பதக்கமின்ன வச்ரக்கடகந்தன்ன
ஆரமல்லிகைமின்னம் பேரழகுமயிலனம்
நாரியிருபுறம் கோதிகொழுவவர
பாரிவேவளையதி காரியென்றமைதர
சூரியஜெருவிமெனக் கார்கைமயில்மனந்
சோருமவ னெவரிலுமிஞ்சப்
பாவையானஇவள் கையிற்கிளிகொஞ்சப்(பாரு)

மாலைநிலத்திற்கெருக்க சேலைசரிகைக்கீக
வேலைதன்னிலேழையில் மாலைநிலைக்கஅதி
சிலமுடனேமதி போலமுகமுமாதி
யாகுழியவொன்றென்னத் தோகையர்களுந்தன்ன
நாகரிகமாய்ப்பேசி வேகமாய்க்கைகளிமினி
அழகுநிறைந்த சபைதனைத்தேடி
பழுதில்லாதகாம் போகியைப்பாடி.(பாரு)

கோகிலாதேவிசொல்-விருத்தம்.

அயில்நிகர்விழியிருளே அரிவையேதோழிப்பெண்ணே
மயில்போலுமொருபெண்யாரோவருகிறாள்வீதிதன்னில்
நயமதாய்சொல்லிநீயும் தானழைப்பித்தேனென்று :
குயில்மொழியாளாயிக்கு கூப்பிட்டுவருகுவாயே

வசனம்.

சேரும் வேல்போன்ற விழியையுடைய தோழிப்பெண்ணே யாரோ ஒருபெண் மகாசவுந்தரியத்துடனே நமதுதெருவில் பரிதாபமாய் வருகிறாள் அவளிடத்திற்குநீபோய் வரியப்படுத்தி நானழைத்துவரச்சொன்னதாகச்சொல்லி சீக்கிரத்தில் அழைத்துவாடி பார்க்கி.

தாதி-கோகிலாதேவிக்குச்சொல்-வசனம்.

அப்படியே அழைத்துவருகிறேனம்மாதாயே.

தாதி-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

செங்கையால்தங்கைபோலும் ஸ்ரீமகாலட்சுமிபோலும்
தங்கமாமேனியாளே தயங்கியேதுன்பமுற்று
எங்கிருந்திவிடம்வந்தா யெங்கள்கோமாட்டியுன்னை
பொங்கமாயழைத்தாளங்கே பூவையேவருகுவாயே.

வசனம்.

வாருமம்மாதாயே நீ தயாத்துடனே எங்கிருந்து எங்கேபோறாய் உன்னை எங்களாசியாகிய கோகிலாதேவி அழைத்துவரச்சொன்னார் வாருமம்மாதாயே.

தமயந்தி-தாதிகளுக்குச்சொல்

கொச்சகம்.

அல்லல்படுமென்னையுங்க ளாசியழைத்தாளென்று
சொல்லவந்ததாதியரே துணையிழந்தபாதகிநான்
நல்லகுணம்பெற்றவுங்கள் நாயகியாள்சன்னிதியில்
மெல்லநடந்து விருப்பமுடனேவருவேன்.

வசனம்.

கேளுமம்மாதாதி துணையிழந்து தயாத்துடனேவரும் பாவியாகிய வென்னை உன்னுடைய நாயகியாகிய கோகிலாதேவி அழைத்துவரச்சொன்னாளென்று சொல்லுகிறாயல்லவா அப்படியே வருகிறேனம்மாதாதி.

தமயந்தி-கோகிலாதேவிக்குச்சொல்

போற்றிவிருத்தம்.

அன்னையேபோற்றியென்னை யாதரித்திடவழைக்கச்
சொன்னவுன்பாதம்போற்றி சுகிர்தமுள்ளாளேபோற்றி
இந்நிலத்தவர்கள்போற்றும் இறைவனேயின்றும்போற்றி
என்னையிக்கழைத்தசேதி யியம்புவாயியம்புவாயே.

வசனம்.

சரணஞ் சரணமம்மா தாயே என்னை இவ்விடத்திற்கழைத்த சங்கதி இன்னதென்று தெரியப்படுத்துமம்மா தாயே.



கோகிலாதேவிசொல்-விருத்தம்.

அன்னம்போல்நடந்தபேதை யழகெலாங்குன்றிப்போக
யின்னகாரியமதாக யிவ்விடம்வந்தாயுந்தன்
அன்னையார்தந்தையாரு அறியவுன்கணவனாரு
இன்னதென்றதைநான்கேட்க வியம்புவாயியம்புவாயே.

வசனம்.

கேளும் மாதசிரோமணி நீ அழுதகண்ணுங் கலங்கியசிந்தையும் அழுக்குப்படிந்தபுடவையும் ஜாசடைத்தசிரசமும் வாடியமுகமும் விரித்தகலையுமாய் தனித்துவரவேண்டிய காரணமென்ன உன்பேர்யாது உனதுதாய்தந்தையர்யார் உன்கணவனெங்கே அதையின்னதென்று தெரியப்படுத்துமம்மா.

தமயந்திசொல்-விருத்தம்.

நிடதசேசத்தையாண்ட நிபுணனும்நளராஜேந்திரன்
தடமுலைபுயத்தைச்சேர்ந்த தமயந்தியாளிவளை
விடச்செயுந்தாதிப்பெண்யா னிறைவன்சூதாடித்தோற்று
படித்தசீபுஷ்கரனுக்கீந்து பார்விட்டுக்காடுற்றானே.

வசனம்.

கேளுமம்மாதாயே நிடததேசத்தையாண்ட நளமகாராஜன்பத்தினியாகிய தமயந்திக்குத் தோழிப்பெண்ணாயிருந்தேன் அந்தநளமகாராஜன் தனதுசிறியதந்தையாகிய புஷ்கரனோடு சூதாடி நாடுநகரங்களைத்தோற்று தமயந்தியுடன் வனவாசஞ்செய்யப்போனார் அவர்களைத்தேடி காடுமலைகளெல்லாந்திரிந்துங் காணாமல் பரதவித்துவந்தேனம்மா தாயே.

கோகிலாதேவிசொல்- கொச்சகம்.

அன்னநடைபயிலும் ஆரணங்கேநீயெனக்குச்
சொன்னமொழியறிந்தேன் கோதைதமயந்தியைக்
கண்ணினில்நீகண்டு களித்திடவாகும்மளவும்
என்னிடத்திலேமகிழ்ந்து இருப்பாயிளங்கொடியே.

வசனம்.

கேளும் அன்னத்தைப்பழித்தநடையையுடையவளே நீ அந்த தமயந்தியைக்காணும்வரைக்கும் சந்தோஷமாய் என்னிடத்திலிருமம்மா.

பொதுவிருத்தம்.

தையல்தமயந்திமுதற்றூய்வீட்டில்வந்திருக்கச்சக்கிரோன்
வெய்யவினைதனைநினைத்து ருதுபர்னன்சாரதியாய்விற்றிருக்கத்
தொய்யலிலாமக்களிருவருங்குண்டினபுரத்திற்சேர்ந்திருக்க
வையகத்தையாள்வீமராஜன்மனவருத்தமுடன்வருகின்றனே.

வசனம்.

அஃதெப்படியென்றால் தமயந்தியானவள் சுவாஹுமகாராஜன் தாயாராகிய கோகிலாதேவி தனக்கு சிறியதாயாரென்றறியாமல்மா தமாடாகப்பேசி அந்தகோகிலாதேவி சவரட்சணையிலிருந்தாள் நளமகாராஜன் உருவமாறி தக்காக்கிரந்தனும் இருதுபன்ன மகாராஜனிடத்தில் சாரதியாயிருந்தான். பின்னையும் பெண்ணும் விதற்பதேசத்திலிருந்தார்கள் இவர்களிப்படி யிருக்க விதற்பதேசத்தையாளும் வீமராஜன் தனது மகளும் மருமகனும் நாடிழந்து காடடைந்தார்களென்றுகேள்விப்பட்டுவிசனத்துடன்சபைக்குவருகிறவிதங்காண்க.

வீமராஜன்வருதல்.

தரு-இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

வீமராஜேந்திரன்வந்தான்-வெகு
விதாணமாகியமதிவதனமதனென (வீமரா)

அனுபல்லவி.

காமனெனவுயர் பூமணிவனென்ன
தாமமார்பன்மிகு கருணைவிலாசன்
நேமமாயரசு செய்யுமுல்லாசன் (வீமரா)

சரணங்கள்.

சிரசில்மணிமகுடம் கிரணம்போலொளிவீச
இருபுஜத்திலம்புஜ கிருதிகட்பிரகாச
வரிசையாயிருபுறம் கவரிபெண்களும்வீச
கிளைகொண்டராஜர்வந்து எதிர்நின்றுநயம்பேச
தித்திமத்தளம் பேரிகைமுழங்க
சத்தத்தாளேயிச் சபையிலவிளங்க(வீமராஜே)



முத்தைக்குடைபிடிக்க தத்தப்பட்டிதடிக்க
வித்தைப்புலவர்நின்று மெத்தக்கவிபடிக்க
எத்திசைதனிலுள்ள சத்தருவுந்தடிக்க
சித்தமிதக்குமென்று நத்திப்பெண்கள்நடிக்க
நீராஜமதி குரன்மெல்மேலே
பாவையாண்டவா வேவொருக்காலே (வீமரா)

அண்டர்மனமகிழ கண்டோர்மிகப்புகழ
மண்டலிகர்கள்வந்து தெண்டனிட்டேயிகழ
மிண்டர்நடுநடுங்கி கொண்டேபலமொடுங்கி
அண்டஞ்செய்வாவென்று சண்டனிவனென்று
தொழுதிடவுஞ்சபை தனக்கெதிர்நாடி
விழுதிக்லாதகாம் போகிலைப்பாடி (வீமரா)

வீமராஜன் விஷ்ணுவைத்துதித்தல்.

விருத்தம்.

அத்தனேபோற்றியென்னை யடிமையாய்க்காப்பாய்போற்றி
நித்தனேபோற்றிவேத நின்மலாபோற்றிபோற்றி
கர்த்தனேபோற்றியெங்கள் கார்வண்ணாபோற்றிபோற்றி
சித்தம்வைத்தென்னையாளும் ஸ்ரீலட்சுமிநாதாபோற்றி.

வீமராஜன்-கட்டியக்காரனுக்குச்சொல்.

விருத்தம்.

மாகிலாச்சபையில்நின்று வலிசெயும்வீராநீயும்
நேசமாயெனதுபக்கம் நீக்காமலிருக்குந்தாரு
காசனியாளையித்தக் கணத்திலனழைத்தேயென்று
ஆசையாய்சபைதனக்கு அழைத்துக்கொண்டோடிவாடா.

வசனம்.

கேளும் ஆசாரவாசல்காக்கும் கட்டியக்காரா நீபோய் எனது தேவியாகிய தாருகாசனியை அதிசீக்கிரத்தில் நமது சபைக்கு அழைத்துவாருமென்றாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அப்படியே அழைத்துவருகிறேனையா சுவாமி.

பொதுவிருத்தம்.

காமனைப்பழிக்குந்திரன் கருணையாயுலகையாள்வோன்
வீமராசேந்திரன்றன் மெல்லியாளனமாது
தாமரைகண்டிகர்த்த தாருகாசனிப்பெண்ணிந்தப்
பூமியோர்மெச்சநல்ல புகழ்சபைநோக்கிவாரான்.

வசனம்.

அஃதெப்படியென்றால் இராஜாதிராஜனுன வீமராஜன் தேவியாகிய தாருகாசனி கொலுவுக்குவருகிறவிதக்காண்க.

இதுவுமது.

வடிவினிலுயர்ந்தமங்கை மாமலராமலர்ப்பூங்கோதை
கொடியிடைமயிலின்சாயல் கோதையாபரணம்பூண்டு
படியினிலிவள்போல்மாது பார்த்திலமென்றுசொல்ல
ஏழிழியாய்ச்சபையைநோக்கித் தாருகாசனிவந்தாளே.

தாருகாசனிவருதல்.

தரு-இ-ம-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாளேதாருகாசனியாள்-மிக
வடிவினிலுயிர்த்தருள் படிகவொளியெனவே
வந்தாளேதாருகாசனியாள்

அநுபல்லவி.

செந்தாமரைப்பதத்திற் சிலம்புகலகலென
சிந்தையதாகவே வேல்விழிமாதர்சூழ(வந்தாளே)

சரணங்கள்.

சென்னியில்மல்லிகைப்பூச் சூடி-அத்தாத்தயின்
திருவேதெய்வமென்றுகொண் டாடி
புன்னீர்சந்தனக்கலைத் தேடி-கைலாகுதந்து
பாங்கிசத்திரிப்பெண்கள் கூடி
தன்னயுமர்கப்பேடி நாரியருக்கரசி
நாயகனாமைழதி காரென்றுங்ஙி
ஓாவல்பராயழி லாவிமனமென்னி(வந்தாளே)



கையிற்கடகங்களு மின்னப்பிரகாசமாய்க்
காதில்ரத்தினவோலை கன்ன
மெய்யிலாபரணங்கள் சொர்ண-மயமதாக
மேகலாபரணமுந் மின்ன
கைபாற்பிடியிடையும் ஒப்பாரமாய்நடையும்
காயமுக்கண்டிவன் ரதியெனவேதினைந்
தாமென்னப்புலவர்கள் கவிசொலவேவுமிலா(வந்தா)
முத்தமாலைமார்பினி லாட-இவள்நடைக்குப்
பத்தாதெனவேயன மோட
சித்திரப்பதுமையிவள் நிடமத்தியமாவதி
யொத்தவாதிகாளமாய்ப் பாட
பெற்றமகளைக்கண்டு மெத்தநாயாச்சுதெக்கு
வெற்றிவேலுடை. வீமனுக்குரைக்க
சித்தம்நொந்திவள் சபைதனையநேக்க (வந்தா)

தாருகாசனி-வீமராஜனுக்குச்சொல்

விருத்தம்.

மாற்றலாருஞ்சுய்விர மகிபனேவென்றான்போற்றி
போற்றிசெய்யடியார்தக்கோப் புரவலர்சபையக்கு
ஏற்றமாய்மழைத்தசெழி யின்னதெய்வதற்கறுக்கும்
சாற்றவீர்முறைமையதாகச் சரணடிபோற்றிபோற்றி.

வசனம்.

சாஞ்சரணம் எனது பிராணநாயகாஎன்னைதேசரிமழைத்தகாரணம் இன்னதென்று தெரியப்படுத்தும் சுவாமி.

வீமராஜன்-தாருகாசனிக்குச்சொல்

கலித்துறை.

பெண்ணேநமதுதமயந்தியாளொட்டிகிந்திருக்கும்
கண்ணேமனது பொறுக்கலேயடிகாரிகையே
மண்ணுறுநீவந்த மன்னராஜன்போலவரியதியோ
எல்லாசெய்வேம்மனமேற்றுமையோயெத்தனையிழையே.

வசனம்.

கேளும்பெண்ணே தாருகாசனி தமயகாரராஜன் புத்திரசை ஸ்டேசருத்தாயு நாடுதேசதேசத்து தேசதின நாசருயாசத்தியடியும

மயந்தியோடு காட்டிற்குப்போனாராம் அவர்கள்போனவழி இன்ன தென்று தெரியவில்லை நானென்னசெய்வேன்பெண்ணே.

வீமராஜன்புலம்பல்.

தரு-இ-ஆகிரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயையோமகளே-உந்தன் விதியோ
ஐயையோமகளே

அநுபல்லவி.

வையகமெல்லாம்வணங்கச் செய்யும்நளராஜருக்குத்
தையலாகநீயிருந்து உய்குவாயென் றிருந்தேனே (ஐயை)

சரணங்கள்.

ஒப்பமற்றதாயிருக்கும் ஐம்பத்தாறரசருக்கும்
மன்னவன்மனைவியான கன்னிநீதயருறவோ (ஐயை)

செல்வமுங்குறைவில்லாத கல்வியுநிறைந்தவளா
புல்லிழுவைக்கிப்படி அல்லல்வந்துநேர்ந்ததோ (ஐயை)

சத்தியந்தவறாத சுத்தன் நளராஜருக்குப்
பத்தினியாய்நீயிருந்தும் சத்துருவால்வாடினையோ (ஐயை)

மன்மதனிலும்சிறந்த மன்னனளராஜனுக்கு
என்னவிதியோவிப்படி இன்னமாய்நாடிழக்கவும் (ஐயை)

சக்கரவர்த்தியாயிருந்து பொக்கிஷமெல்லாமிழந்து
மக்களையுநீக்கவிட்டு தொக்கவனம்போய்பிழைக்க (ஐயை)

மேட்டிமையாயரசுசெய் நீட்டியதனங்கள்முதல்
கோட்டையும்நகரமுங்கள் நாட்டையும்விட்டுப்போனீரோ (ஐயை)

யோகனைமுனந்தவை போகவாகிரியாடும்
ராகனைப்பிரியஅந்த ஏகபரன்செய்தானோ (ஐயை)

பொதுவிருத்தம்.

கையில்வேலுடையவியன் நளனுக்கின்றமுறும்போது
தையலர்க்கரசியான தாருகாசனிப்பெண்வாடி
மெய்யெலாதவிக்கமுற்று விழியில்நீரொழுகியோட
மைகுழல்தமயந்திக்காய் வாடி நின்றழுதிட்டாளே.



வசனம்.

இந்தப்பிரகாரம்வீமராஜன்புலம்ப தாருகாசனியானவள் தவா ய்பெருகி கண்ணீர் மார்பில்வழியே புரண்டோட தமயந்தியைநினை த்துப் புலம்புவதானது.

தாருகாசனிபுலம்பல்.

இசை-இ-கம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேன்சிவனே-தம யந்திமயக்காவேனே
மன்னனுக்கிந்தவிதி-வா என்னமாச்சுதோசதி
நவகண்டமாண்டாரோ-அவர் அவத்தொழில்பூண்டாரே
சிவனேயிந்தசேசம்-வாராமலவர் சென்றகாரியமோசம்
ஆகாதினவரில்லையோ-இந்த வேதையெவர்க்குமில்லையோ
பாதிமதிதரித்த-சிவனே ஆகதியென்றுநினைத்த
நாட்டிலிருந்தாரோ-இப்போ காட்டிலிருப்பாரோ
மூட்டிவிட்டான்சதியல்-பல சேட்டைசெய்தான்கலியன்
சட்சுவைபுண்டாரோ-பச்சிலை பகூஷணஞ்செய்வாரோ
மெச்சினாயோசிவனே-மலை யைச்சிலைகொண்டோனே
பிள்ளைகளைப்பிரிந்து-மனம் தள்ளிவழிதெரிந்து
கொள்ளைகொடுத்தாரோ-சல் மெல்லாம்விடுத்தாரே
புல்லுகல்லுமுறைக்க-இந்த மெல்லாமிகவருந்த
அல்லல்படுவாரோ-மிக தொல்லையெய்தென்றுவாரோ
பண்டைவினையிதுவோ-கால கண்டம்செயலிதுவோ
பெண்பெருமையாய்-ராகம் கண்டாபாடுவாரோ

தாருகாசனிசொல்-விருத்தம்.

அரியனற்றவத்தைச்செய்து அனந்ததீர்த்தங்களாடி
தருமமுப்பத்திரண்டுந் தப்பாமல்செய்தேயின்ற
பிரியமாமகளுமெந்தப் புனத்தினிலிருக்கின்றாளோ
அரிகலவைத்தேதெற்கு ஆள்களையனுப்புவீரே.

வசனம்.

கேளும் எனதுபிராணநாயகா நாம் தவஞ்செய்து புண்ணியதீர் த்தங்களாடிமுப்பத்திரண்டுதருமமும் வழுவாதுநடத்தி ஈன்றெடுத்

தபுத்திரிபாவே தமயந்தியும் மருமகனாகிய நளமகாராஜனும் எந்தக்காட்டிலிருக்கிறார்களோ தெரியவில்லை அவர்களை தேடி அழைத்துவரும்படியாய் தூதவர்களையனுப்பும் பிராணநாயகா.

விமராஜன்-தாருகாசனிக்குச்சொல்-விருத்தம்.

அப்படி தானேசெய்வேன் அரிவையேகலங்கவேண்டாம்
இப்படி பிரமதேவ னெழுதினதுகையாலே
செப்பினுமழுதென்செய்ய சீக்கிரமாளனுப்பி
ஒப்பில்தம்பிள்ளைபெண்ணை ஒருக்ஷணமழைப்பிப்பேனே.

வசனம்.

கேளாய்பெண்ணே தாருகாசனி பிரமதேவன் அவர்கள்தலையில் அப்படியெழுதியிருந்தால் நாமழுதால் பிரயோசனமென்ன விசனப்படாதே இதோ ஒருக்ஷணத்தில் தூதவர்களையனுப்பி அவர்கள் எவ்விடத்தி லிருந்தாலும் அழைத்துவரச் சொல்லுகிறேன் பெண்ணே.

பொதுவிருத்தம்.

அர்ச்சனத்தேசியாரு மழுதுகொண்டிருக்கும்போது
புரிநூலுமணிந்ததேகம் பூரிப்பாய்விபூதிபூசி
வரிசையாயங்கவஸ்திரம் வாகுடனுடுத்திக்கொண்டு
மறையவன்சபையைநாடி வருகின்றான்வருகின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் விமராஜனும் தாருகாசனியும் புலம்பி சைரியப்பட்டு நளமகாராஜனையும் தமயந்தியையும் தேடி அழைத்துவரத் தூதவர்களையனுப்ப யோசித்திருக்கையில் அர்ச்சகார்பிராமணன்வருகிறதின்காக்ஷி.

இசைமடை.

ஓதியமறையோர்மெச்ச பூசையுமறிந்தோன் ஞானஞ்
செப்புவேதமுமுணர்ந்தோன் சிறக்கவெண்ணீறணிந்து
மெய்ப்புடன்பூணூலே விளைவாகவிழுக்கவிட்டு
இப்புவியெல்லாஞ்சுற்று மெதில்பார்ப்பான்வருகின்றானே.

அர்ச்சகர்-பார்ப்பான்வருதல்.

தரு-௰-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வேதியனார்வந்துதோற்றினார்-விமன்சபையில்
வேதியனார்வந்துதோற்றினார்.



அநுபல்லவி.

பாதிமதிகொன்றைசூடும் பரமபதத்தனைத்தேடும்
கோதிலாதவேதக்கொண்டு குவலயந்திரிவேனென்று (வேதி)

சரணங்கள்.

மார்பில்முப்புரிநூல் விலங்க-கையிற்பிரம்பு
மாவிலைகையுங்காணத் துலக்க
நேர்மையாய் சரிகைவேட்டி
நிலந்தனிற் படவேநீட்டி
காரியந்தெரிந் தெவர்க்குந்
தாலபல முனாக்கும் (வேதி)

சத்திரமெங்குமெட்டுற தேடி-யிடைத்தாலுண்டு
சந்தோஷமாகவிலை யாடி
மெத்தவு முடிச்சாயோடி
மிகவே சபையைநாடி
நம்பிராஜனை யெங்கேயென்று
நாடுநிக்கும் பார்த்துநின்று (வேதி)
பார்த்தவுடன் வாஞ்சிக்கவே-பரபரப்பாய்
பச்சரிசிச் சோர்செரிக்கவே
சேர்த்துவிட குறிகுறித்து
வேதமந்திர மூர்ச்சரித்து
நேத்திரமென்று சபைநாடி
நீதமுஞ் சுருட்டிபாடி (வேதியனார்)

விமராஜன்சொல்-விருத்தம்.

வேதியர்குலத்துதித்து விமலனைப்போற்றிசெய்து
மாதவப்புரியுமெங்கள் மறையோரேயொருவிண்ணப்பம்
காதலனளனும்பெண்ணுங் காணாததாலேதேடி
சோதித்துச்சொல்லுவீராகிற் சொர்ணதானிறைத்துவைப்பேன்.

வசனம்.

சரணஞ்சரணம்சுவாமி வேதியரே என் மருமகனாகிய நளமகாராஜன் புஷ்கரராஜனுடனே சூதாடி நாடுநகரத்தையிழந்து என்னுடைய செல்வகுமாரத்தியான தமயந்தியோடு காட்டுக்குப்போனாராம் அவர்கள் எவ்விடத்தி லிருக்கிறார்களென்று தெரியவில்லை அவர்களிருக்குமிடத்தை யறிந்துவந்து யாராவதுசொன்னால் அவர்களுடைய தகுதிக்குத்தக்கதாக திரவியங்கொடுக்கிறேன் வேதியரே.

வேதியர்சொல்-விருத்தம்.

தேசதேசங்கடோறுந் திரிந்துநான்வருவதாலே
மாசில்லாத்தமயந்திப்பெண் மன்னனுஞ்சென்றநாட்டை
தேசமாய்த்திரிந்தாயாகிலும் நிமிஷத்திற்காண்பேன்கண்டால்
மோசம்வாராமற்காத்து முன்கொண்டுவாரேன்மன்னா.

வசனம்.

கேளும் மகாராஜனே நான் தேசதேசமாகத்திரிந்து பழகியிருக்கிறேன் உத்தரவுகொடுத்தால் உன்குமாரத்தியும் மருமகனும். எவ்விடத்திலிருந்தாலுங் கண்டுபிடித்து அவர்களுக்கு யாதொருவருத்தமுமில்லாமற் கொண்டுவந்து சேர்ப்பேன் மகாராஜனே.

வீமராஜன்சொல்-விருத்தம்.

அப்பணிசடையோன்பாத மனுதினம்போற்றிசெய்யுஞ்
செப்பருமறைவல்லோரே செல்வியைக்காணாதாலே
ஒப்பர்தென்மனமுநீசென் றவர்களையழைத்துக்கொண்டிங்கே
இப்பவேவருவதற்கு ஏகுவாயேகுவாயே.

வசனம்.

கேளும் சுவாமி வேதியரே என்மகளையும் மருமகனையுங்காணாமல் எனது துக்கந்தணியாது ஆகையால் நீர் இப்போதேபோய் அவர்களெவ்விடத்திலிருந்தாலும் தேடிப்பிடித்து அழைத்துக்கொண்டு வாரும் சுவாமி.

வேதியர்சொல்-வசனம்.

இதோ போகிறேன் மகாராஜனே.

பொதுவிருத்தம்.

மறையவன்றேசமெங்கும் வாடியேதிரிந்துதேடி
பரிவுறுநகராஞ்சேதி யப்பதிதன்னில்வந்து
இறையவன்றாயார்கோயி லாகவியிடத்தில்வாழுங்
கருங்குழல்மாதைக்கண்டு கலங்கினின்றழுதிட்டானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வீமராஜனுத்தரவுபெற்றுவந்த வேதியரானவர் வனம் வனாந்தரங்களெல்லாந்திரிந்து எங்குங்காணாமல் வருத்தமுற்று சேதியம்பதியையடைந்து அந்தநகரத்தையாளும் சுவாகுமாகாராஜனைக்காணவேணுமென்று இராசசபைக்குப்போய் அவ்விடத்தில் கோ



விலாதேவியின் பக்கத்தில் அழுக்குப்புடவையை யுடுத்திக்கொண்டு விரித்தகுழலும் வாடியமுகமுமாயிருந்த தமயந்தியைக்கண்டு மனத்தாபமாயல் கோவென்றழுதான்.

இதுவும்-பொதுவிருத்தம்.

ஆர்க்காருபார்ப்பான்கண்டு அழுவதைத்தமயந்திப்பெண்
பரிவுடன்கேட்டுவாடிப் பண்டுவாழ்ந்ததையெண்ணி
தரைதனில்வீழ்ந்தெழுந்து தயங்கியேமறையோனோடு
குறைபெலாஞ்சொல்லித்துக்கங் குன்றிநின்றழுதிட்டாளே.

வசனம்.

இப்படி விசனமுற்றழுத வேதியனைக்கண்ட தமயந்தி தமது தகப்பனிடத்திலிருக்கும் பிராமணனென்றறிந்து தான்பட்ட வருத்தங்களை அந்தவேதியரோடுசொல்லி புலம்புவதாவது.

தமயந்திபுலம்பல்.

இராகம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

ஐயாவேதியரே-அரசன் மெய்யாகச்சுகாடினாரோ
மையாயிழந்தாரோ-அதனால் மெய்யுதளர்ந்தாரோ

சூதுசெய்தேசநியன்-மனை பேதகஞ்செய்தான்கலியன்
வாதைகொண்டேபுகல்வர்-தம்மை சோதகஞ்செய்தான்கலகன்

காட்டில்தனித்துவந்து-மிக வாட்டமாய்மனதுநொந்து
கேட்டினையுமறந்து-தனது நாட்டையுமிழந்து

மனதுமிகக்கலங்கி-என்னை தனியேவிட்டுநீக்கி
நினைவுவேறாயேங்கிப்-போனா ரினமுமறியேன்தியங்கி

பண்டையவினையினாலே-நாங்கள் முண்டியாயினதாலே
அண்டர்கோச்செயலாலே-இப்பேதை கொண்டோமதனாலே

எப்போதாய்காண்பேனோ-என்னரசனை டெப்போதிருப்பேனோ
இப்படிகாணுவாயோ-பிராமணா எழுதியிருந்தாரோ

கண்டவர்களுக்கிடவே-சுவர் கொண்டுமெலிந்திடவே
என்றுகைதிரிந்திடவே-எவ்வழி மண்டிவெரிந்திடவே

ஏவற்பணிசெய்யவும்-எந்தன் காவலன்சென்றிடவும்
ஆவலுடனாக-முராரி மேவிநான்பாடிடவும்

கோகிலாதேவிசொல்-விருத்தம்.

மறையோனே நீயாரிந்த மங்கையாரிவளைக்கண்டு
உருகிநின்றழுவதேது உங்களூர்பேர்தான்யாது
இருவருமெங்கிருந்தீ ரிவ்விடம்வந்ததென்ன
தெரியவேயெனக்குநன்றாய்ச் செப்புவீர்செப்புவீரே.

வசனம்.

கேளும் சுவாமி வேதியரே நீரார் இந்தப்பெண்யார் இவளைக்கண்டு நீர்புலம்பவேண்டியதென்ன உம்மைக்கண்டு இந்தப்பெண் புலம்பவேண்டியதென்ன நீங்களிருவரும் எந்தவூரிலிருந்தீர்கள் உங்கள்பெயரென்ன அதை இன்னதென்றுதெரியப்படுத்தும்வேதியரே.

வேதியர்-கோகிலாதேவிக்குச்சொல்-விருத்தம்.

கோகிலாதேவியாரே குறைவிலாஆசிர்வாதம்
தோகையிப்பெண்ணுளெங்கள் தரைவீமன்புதல்வியாகும்
ஏகமாயுலகையாண்ட எழில்நளச்சக்ரவர்த்தி
பாகமுற்றச்சூதாலே பார்விட்டுக்காடுற்றாரே.

வசனம்.

கேளுமம்மா கோகிலாதேவி இந்தப்பெண் எங்களரசனாகிய வீமராஜன்புதல்வி இவள்பெயர் தமயந்தி இவளை நிடததேசத்தையாண்ட நளமகாராஜனுக்கு விவாகஞ்செய்துகொடுத்தோம் அந்தநளமகாராஜன் பாவியான புஷ்கரராஜனுடனே சூதாடி நாடுநகரத்தையிழந்து இந்தப்பெண்ணோடு வனவாசஞ்செய்யவந்தார் இதுதானம்மா நானறிந்த சமாச்சாரம்.

கோகிலாதேவி-வேதியருக்குச்சொல்-விருத்தம்.

எப்படியிந்தப்பெண்ணை யின்னவளென்றறிந்தாய்
தமைப்படுக்கண்ணுளிங்கே வருவாளோ தப்பில்லை
தப்பிதஞ்சொல்லவேண்டாம் தமயந்தியானவெந்தன்
செப்பருந்தங்கைபெற்ற செல்வியுமவளாவாளே.

வசனம்.

கேளுமையா வேதியரே நீர் இந்தப்பெண்ணை தமயந்தியென்றெப்படியறிந்தீர் அந்ததமயந்தி என்தங்கையாகிய தாருகாசனியின்பெண்ணாச்சுதே அவளிங்கு தனித்துவருவாளா நான் நம்பவில்லை பொய்சொல்லாமற்சொல்லும் வேதியரே.



வேதியர்-கோகிலாதேவிக்குச்சொல்-விருத்தம்.

அம்மாகேளிவளையெங்களரசனாம்வீமன்முன்பு
பிரம்மாதிதேவர்மற்றப் பெரியோர்கள்வரத்தாற்பெற்றான்
இம்மாதுநளராஜற்கு ஏந்திழையாளுமெய்யே
செம்மையாய்முகத்தைநோக்கித் தெரிந்தனன்மறுவினாலே.

வசனம்.

கேளுமம்மா கோகிலாதேவி எங்களரசனாகிய வீமராஜன் பெற்றபுதல்வியென்பது மெய்யே ஆனால் இந்தம்மாளிருக்கிற ஏழைக்கோலத்தினால் உனக்குச் சந்தேகமாயிற்று நானும் சுபந்தெரியாமல் இந்தமறுவினால் தமயந்தியென்று நிச்சயித்தேனம்மா.

பொதுவிருத்தம்.

மறுவென்றுசொன்னபோதே மைகுழலாளுநோக்கித்
தெரிவையென்றறிந்துகொண்டு சேயிழைமுகமுந்தோய்ந்து
அறியாமற்போனேனென்று அரிவையின்கைப்பிடித்து
பரிவுடனழுதேமாது பதறுவாள்கதறுவாளே.

வசனம்.

இப்படி வேதியர்சொன்னதைக்கேட்ட கோகிலாதேவியானவள் தமயந்தியின்முகத்தை உற்றுப்பார்த்து மறுவையுங்கண்டு தமயந்தியென்று நிச்சயித்து ஐயோமகளே நீ என்னிடத்திலுண்மையைச்சொல்லாமல் மாறுபாடாயிருந்தாய் நானும் உன்னை இன்னாளென்றறியாமற்போனேனேயென்று தமயந்தியின்கையைப் பிடித்துக்கொண்டு புலம்புகிறாள்.

கோகிலாதேவிபுலம்பல்.

தரு-இ-ம்-கயாக-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபெரியோன்மகளோ - நான் - என்செய்வேனையோ.

அநுபல்லவி.

புன்னைமொழியும் மின்பெற்றதோர்
மங்கையே தங்கையே நிகரொவ்வியாளே (என்ன)

சரணங்கள்.

தங்கமக ளல்லவோ-அறியாம
லிங்கிருந்தா யல்லவோ-ஐயையோ
அங்கங்கருகித் தங்கியிருந்திட
துங்கதிறக்கண்ணே யெங்கள்குலப்பெண்ணே (என்ன)

மாயமாச்சு தோ-உன்வாழ்வு
பொய்யாய்ப்போச்சு தோ-ஐயையோ
ஞாயமோயிச் சுபாயமறியேனுன்
தாயென்றெண்ணிச்சற்று மேனறியவில்லை (என்ன)

நல்லமலரணை யில்-துயிலுமுன்
மெல்லியதேக முதா-இப்போ
கல்லுகளும்பெரு முள்ளுகளுங்குத்த
புல்லணையிற்றுயில் கொள்ளவுமாச்சுதோ (என்ன)

சொர்ணப்பணிக ளிட்டு-நல்ல
வர்ணப்பட்டாடை தொட்டு-ஐயையோ
கன்னியிருந்ததை மறந்தவாடி
இன்னந்தமாச ராகம்பாடி (என்ன)

கோகிலாதேவிசொல்-பத்தியம்.

மங்கையேயென துதற் றங்கையின் றந்தனை
மலர்மெத்தைதன்னிலே றுயிலவைத்து
எங்கையோபோகவும் அங்கமதுபுழுதியால்
மண்டிடச்செய்தல பெண்களரசே
தங்கநிறமானமுக மங்குல்போலவிருண்டு
நங்கையேயுந்தனிற் றுங்கையாலே
எங்கள்பழிசெய்ததை உங்கள்தாய்கேட்டிடில்
பங்கமிலருமேயிற எங்ஙன்விதியோ

சங்கையேயுன் முன்புத்சொல்லொணாதோ
தங்கையாய்த்தாருகாசனியும்யானும்
பெய்துகளலவோ அந்தகர்மனுக்கு
இத்தித்துயிதிபிரயனெழுதினதே.



51

இரவுங்-கோகிலாதேவிபுலம்பல்.

இராகம்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

கண்ணிகள்.

மங்கையே-தமயந்தி-நங்கையே — எந்தன்
தங்கைபயின்றெடுத்த செங்கமலப்பெண்ணே

வந்ததோ-பொல்லாத்திங்கு-வந்ததோ — உந்தன்
சிந்தைகலங்கியே நொந்து அலைந்திட

வாய்க்குதோ-பொல்லாக்கால-மாச்சுதோ — இந்த
தேவாசிவா அதி ருசுதிசெய்தார்வென்

என்னமோ-உன்மேல்வர்ம-மென்னமோ — ஐயோ
இன்னவயதினி லுன்னைப்பிரிந்திடச்

செய்ததே-பாவிதெய்வஞ்-செய்ததே — இந்த
நிலைபொறுத்திட லாமோதய்மாலே

ஈசனே-காசிவிசு-வேசனே — எந்தன்
வந்திழையாள்தம யந்திதயருற

விட்டதோ-கலைந்தெசய்-இட்டதோ — இந்த
மெல்லியடுத்துயர் நல்லதோஐயையோ

சாபமோ-பெரியோர்-கோபமோ — நல்ல
சங்கராபரணம்பாட சோபமெல்லாமோட — (மங்கையே)

தமயந்தி-கோகிலாதேவிக்குச்சொல்

விருத்தம்.

தாயேநீயழுதாலென்ன தலைவிதிப்படிபோலாகும்
மாயமாய்சதியன்செய்த வகையோசவியனாணம்மா
சேயிருவரையுங்காணச் சித்தமுமலைபுதிப்போ
போயவர்களைநால்கண்டு புலம்பிறல்துயரம்போமே.

வசனம்.

கேளுமம்மா எனது பெரியதாயே சுரிபகலாள்செய்த வஞ்ச
னையினால் இப்படியாச்சுது நீ அழுதால் பயனென்ன ஒருநாளில்லே
எனக்கு உத்திரவுகொடுத்தனுப்பினால் நான் என் தாய்வீட்டிற்குப்

போய் என்று பின்னையும் பெண்ணையுங்கண்டு விசனந் தணிவே னம்மா தாயே.

கோகிலாதேவி-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

மகளேநீபெற்றசெல்வ மற்றெவர்க்குண்டுயிந்த
ஜகமெலாம்போற்றுமுன்னை சரியுறுவா ரிந்தாரே
தகைமையாய்வருவிதிக்குத் தப்பவொண்ணாது நீபோய்
சுகமதாய்த்தாயார்பக்கல் சுருசுகினில்சேருவாயே.

வசனம்.

சேறுமம்மா தமயந்தி நீபெற்ற செல்வம் மற்றெவர்க்குண்டு ஒருவரும் அடையத்தக்கதல்லவே அவ்விதசெல்வத்தை யிழந்தது தீசதிபதிவான்செயலால் இப்படி பாதகிக்கலாச்சுதல்லவா பட்டவேண்டியகருமத்தைப் பட்டேதாலிக்கவேண்டும் இனிமேலாவது நீ உன் தாய்விடுசேர்ந்து சந்தோஷமாய் சுகித்திருமம்மா மகளே.

தமயந்தி-கோகிலாதேவிக்குச்சொல்-விருத்தம்.

இன்னிலமதிக்கவென்னை யீன்றவள்தனக்குமூத்த
அன்னையேபோற்றிவந்த னநுக்கிரகத்தினாலே.
பின்னமில்லாதிருந்தேன் பிரியமாய் நீயெனக்குச்
சொன்னவுத்தரவைக்கொண்டுசுருக்காகச்செல்லுவேனே.

வசனம்.

சரணஞ்சரணமம்மா எனது பெரியதாயே நீ என்னை இன்றுளென்றறியாததற்கு முன்னமே பெற்றபெண்ணைப் பார்க்கிலுஞ் சிரேஷ்டமாகப் பாதுகாத்தாய் உன்னுடைய அநுக்கிரகத்தினாலே இத்தனை நான் பிராணபயமில்லாமலிருந்தேன் இப்போது உன்னுத்தரவின்படி என்தாய்தந்தைகளிடத்திற்குப் போய்வருகிறேனம்மா பெரியதாயே.

பொதுவிருத்தம்.

மறையவன்தேடிக்கண்டு மங்கையோடுசொலிப்பின்னும்
திருவிலாவிதர்ப்பதேசந் திரும்பியேவந்துசெங்கோல்
அரசனார்வாசல்தன்னி லரிவையைவிட்டுத்தானும்
வரவையுரைப்பதற்கு வந்தனன்சபையிற்றானே.



வசனம்.

இந்தப்பிரகாரம் வேதியரானவர் தமயந்தியைக்கண்டு விசனப்பட்ட காருகாசனியும் தமதுதங்கையின் புத்திரியாகிய தமயந்தியைத் தெரிந்து துக்கமடைந்து தமயந்தியினுத்தரவின்படி பல்லக்கின் மேலேற்றி வேதியரோடு விதர்ப்பதேசத்திற்கனுப்ப வேதியர்விதர்ப்பதேசத்திற்குவந்து வீமராஜன் மாளிகையில் தமயந்தியைவிட்டு வீமராஜனைக்கண்டு சொல்லுவதாவது.

வேதியர்-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னர்மன்னவனே ஆசீர் வாதம்நான்காடுமற்ற
இந்நிலமெல்லாந்தேடி யெழில்சுவாகுராஜனுக்கு
அன்னையாங்கோகிலாவ்பா லரிவையுமிருக்கக்கண்டு
சொன்னவுன்மொழிப்படிக்கு தூரிதத்திலழைத்துவந்தேன்.

வசனம்.

ஆசீர்வாதம் மகாராஜனே உன்னுத்தரவின்படி நான் காடு மலை வனம் வனாந்திரங்களெல்லாந்தேடியுங்காணாமல் சேதியப்பதியையடைந்து சுவாகுராஜன் சபைக்குப்போனேன் அவ்விடத்தில் அந்த சுவாகுராஜன்தாயாராகிய கோகிலாதேவியின் பக்கத்தில் உமது குமாரத்தியாகிய தமயந்தியிருக்கக்கண்டு உடனே பல்லக்கின்மேலேற்றி அழைத்துக்கொண்டுவந்தேன் மகாராஜனே.

வீமராஜன்-வேதியருக்குச்சொல்-வசனம்.

சந்தோஷம்-சந்தோஷம்-வேதியரே.

வீமராஜன்-கட்டியக்காரனுக்குச்சொல்-விருத்தம்.

சல்லெனத்திரண்டதோளா கட்டியக்காரகேளாய்
சொல்லுமென்வார்த்தைபாலே துலங்குராஞ்சுற்றியெத்தும்
அல்லலைத்தீர்த்தயிந்த அந்தணனொடுக்குமட்டும்
நல்லசெம்பொன்னைவாரி நலமுடன்கொடுப்பாய்நீயே.

வசனம்.

கேளும்பேர்வாய் கட்டியக்காரா எனதுசொற்பிரகாரங் காடு மலைகளெல்லாந்திரிந்து அலைச்சற்பட்டு என்குமாரத்தியை அழைத்துவந்த இந்தப்பெரிய வேதியருக்கு திரவியங்கொடுப்பீராய் கட்டியக்காரா.

கட்டியக்காரன்-வசனம்.

இதோகொடுக்கிறேன் மகாராஜனே.

வீமராஜன்-தமயந்திக்குச்சொல்-கொச்சகம்.

தத்தைமொழிமகளே நம்பியுந்தனைநான்
பெற்றுஅருமையுடன் பேரிட்டுசீராட்டி
கைத்தலத்திலேந்தியுமே காதலாய்வளர்த்ததுபோய்
நித்தமழுதிடவோ நீவனத்திற்சென்றனையே.

வசனம்.

கேளுமம்மா மகளே நான் உன்னை அரியதவஞ்செய்து ம
று செல்வப்பெயரிட்டு மார்பின்பேரில்வைத்து வளர்த்ததுபோய் உ
ன்பாதங்கள் கொப்புளித்து புலம்பித் தவிக்கவோ காட்டிற்குச்சென்
றாய் மகளே.

வீமராஜன்-புலம்பல்.

மெட்டு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அருமையாய்த்தவஞ்செய்து அரனைப்பணிந்து
அன்னமேயுனைப்பெற்றே னென்மகளே-மகளே
பெருமையுடன்வளர்த்து பேரிட்டுமகிழ்வாகிப்
பிரியமாயிருந்தேனே யென்மகளே-மகளே

ஏகசக்ரேஸ்வரனு மிருந்தாசாட்சிசெய்த
இறைவனைநீகலந்தே னென்மகளே-மகளே
போகமெல்லாமுனக்குப் பொருந்தியிருந்துமித்த
பொல்லாவினைவந்ததோ யென்மகளே-மகளே

பஞ்சினுமெல்லியதாமுன்சிறுபாதமிரத்தப்
பாணமிகக்கலாச்சோ யென்மகளே-மகளே
செஞ்சொற்பயிலுமுந்தன் சிறவர்களைப்பிரிந்து
சிமையடையலாச்சோ யென்மகளே-மகளே

காட்டிலலைந்துவிரோகம் கருதிமாச்சுதையோ
காரணமறியேனே யென்மகளே-மகளே
பாட்டிலெதுகுலகாம் போதிபாடிடவுந்தன்
மேட்டிமையெங்கேபோச்சு தென்மகளே



வீமராஜன்சொல்-கலித்துறை.

மகளேயெந்நாளும்பிரியாதிருந்துமனமகிழ
ஜகமெங்கும்போற்றும்நளச்சக்ரவர்த்திக்குநீதந்துமிந்த
வகைமோசமாமென்றறியாமலிங்குமயங்குகிறேன்
பகவான்விதித்தபடி போலவாகுமிப்பார்தனிலே.

பொதுவிருத்தம்.

மன்னவனனைவீமன் மகள்தனைநோக்கியெந்தன்
கன்னியேயென்றுவாடி கலங்கிநின்றழுதும்போது
தன்னிலம்புழுந்தாருகாசனிமாதுமப்போ
தம்மகள்துயரங்கண்டு தயங்கியேபுலம்புவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வீமராஜன் புலம்பும்போது தாருகாசனியான
ள் தன்குமாரத்தியின்முகம் வாடி கறுத்திருப்பதைக்கண்டு புலம்
புகாள்.

தாருகாசனிபுலம்பல்.

மெட்டு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பெற்றமகளேயுன்றனைப் பித்தரைப்போலேமனது மகளே
மெத்ததுயருற்றேனையோ
இந்நிலத்திலேயொருவ ரித்தனைபாடுபட்டாரோ மகளே
கர்த்தனருள்வைத்ததிதோ

தந்தைகலங்கியிகவுந் தொந்தமையிழந்திட மகளே
வந்ததேதாவுந்தனுக்கிப்போ
எந்தன்வயிற்றிற்பிறந்து இந்தவிதிகாணபிரம்மன் மகளே
என்றலையிலெழுதினானோ

ஆனாயடிநீதானேபெரி யோனவதேனோநான்பாவி மகளே
கூறிேனனோபிழைகளை
திருடனுனையணைந்தய பாருமோர்பணியவைத்தாஞ் மகளே
சிறொன்றுமில்லாமற்போச்சே

அலைவாய்த்துரும்புபோலும் உலைவாய்மெழுகுபோலும் மகளே
நிலைகலைந்திடலாச்சே

கொடுமையாயுன்கணவன் யலைபோலிருக்கையில்நீ
இவ்வுருமாறிசொல்ல மகளே

தாருகாசனிசொல்-கொச்சகம்.

பத்துமாதஞ்சுமந்து பாவையுனைப்பெற்றெடுத்து
மெத்தவன்புடன்வளர்த்து மேன்மையுள்ளராஜருக்குப்
பத்தினியாய்நீயிருந்து பாராண்டுமெவ்விதமாய்
சத்தியகானகத்தில் துன்பமுற்றாய்நீமகளே.

வசனம்.

கேளும்மா எனது கண்மணியே நான் உன்னைப் பத்துமாத ஞ்சுமந்து பெற்று அருமையாய்வளர்த்து ராஜாதிராஜரான நளமகா ராஜருக்குக் கொடுக்க நீ சகலருந் துதிக்கும்படி வாழ்ந்திருந்தது போய் எவ்விதமாய் வனத்தில்திரிந்து துன்பப்பட்டாய் மகளே.

தமயந்தி-தாய்-தகப்பனுக்குச்சொல்-தரு.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தன்விதியைக்கேட்டிடீர்-அன்னைதந்தையே
எந்தன்விதியைக்கேட்டிடீர்

அநுபல்லவி.

எந்தன்விதியைக்கேளும் நிந்தையாய்சநியனும்
விந்தையாய்புஷ்கரனை வந்துசூதாடச்சொன்னார் (எந்த)

சரணங்கள்.

மன்னன்சூதாட விசைந்து-தோற்றதனாலே
வையகமெல்லா மிழந்து
சின்னபுத்திரர்களை முன்னேயும்பால்விடுத்து
அன்னையேவும்மிடத்தி லென்னையும்போகச்சொன்னார் (எந்)

நாயகன்றனை யகலத்தகாதென்று
ஞாயமவர்க்குப் புகல
மாயச்சதியனாலே நேயமாயிருவரும்
பொய்கானகத்திலு பாயமாய்க்கலையிழந்தோம் (எந்தன்)

புத்திமயக்கிய தாலே-பிரிந்தாராஜர்
எத்தலம்போனாரோ மேலே



சத்தியபாம்பைவென்றன் மத்தன்வேடனெரிய
சித்தக்கலக்கமுழு தெத்திசையிருநான்தேட (எந்தன்)

மாதவர்பதம் பணிந்து-அவருரைத்த
போதப்படியே நடந்து
காதல்துணைவர்களை மாதங்கச்சொல்லத்தனை
வழியில்லாமற்கோதி லாதேயிப்பால்வரவும் (எந்தன்)

அந்தணர்தமைக்கண்டுநான்-அழுதநாயார்
எந்தன்கூடப் புலம்பவே
சிந்தைகலக்கிவாடி நொந்துவுங்களைத்தேட
இந்தப்புன்னாகவராளி தைந்துநிதமுய்பாடி (எந்தன்)

தமயந்திசொல்-கலித்துறை.

தாயேயுனதுவயிற்றிற்பிறந்துசலித்திடவும்
மாயமிதார்செய்ததோவறியேனென்மனமழும்
நாயகன்றன்னைப்பிரிந்துவலதினில்நானிருக்க
ஞாயமிதாகுமோ அடியாள்சகியன்னதற்கே.

வசனம்.

கேளும்மாதாயே நான் உன்வயிற்றிற்பிறந்து நளமகாராஜ ருக்கு மனைவியாய் அவரைப்பிரிந்து உங்களிடத்தில் சந்தோஷமா யிசௌக்கியத்துடனிருப்பது ஞாயமோ சொல்லுமம்மாதாயே.

தாருகாசனி-தமயந்திக்குச்சொல்-வசனம்.

கேளும் எனது கண்மணியே நீ விசனப்படாதே நான் தூது வர்களையனுப்பி உன்புருஷன் எங்கிருந்தாலும் கண்டுபிடித்து அ ழைத்துவரச்சொல்லுகிறேன் மகளே.

பொதுவசனம்.

இப்படி தாயார்சொல்லக்கேட்ட தமயந்தி புத்திரனையுங் குமா ரத்தியையுங்கண்டு துயரம்பெருகி புலம்புவதாவன.

திபதை-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சுந்தரவுமைப்பிரியவுஞ்சதி தொட்டேனேதெய்வமாய்மகவே
எந்தன்வயிற்றினிற்பிறந்த மித்தமிதுவையோ

தந்தைதாயைப்பிரிந்தீர்கள் தனித்திருந்தீரோ-மக்களே
சிந்தைதளர்ந்தெங்களைத்தேடி திகைமுழுந்நொந்தீரோ
மகனேமகனேயென்றன்றந்தை மனமும்வாடினுர்-அந்த
பகைசதியனுலேயும்மை வனத்திற்றேடினுர்
மன்னர்பணியும்தனாராஜேந்திரன் மடியிலேவளர்ந்தீர்-எந்தன்
மக்களேநீங்களெம்மைவிட்டு வருந்தித்தளர்ந்தீர்
இன்னமென்னதுன்பம்நமக்கு இருக்குதோமகனே - ராகம்
புன்னகவராளிபாடி புலம்பிடச்சுதனே

தமயந்திசொல்-வெண்பா.

மக்களேநீங்களிப்போ மன்னர்தனைப்பிரிந்து
துக்கப்பட்டிவருர்சோதிதார்-மிக்கவினை
வந்ததையோமேன்மையெல்லாமாறிமனங்கலங்க
தந்திரமாய்ச்செய்தான்சநி.

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் தமயந்தியானவள் புத்திரனையும் பெண்ணை யுங் கட்டிக்கொண்டு புலம்புவதை தாருகாசனிகண்டு தமயந்தியை நீ நற்றி தைரியவார்த்தைகள் சொல்லி சந்தோஷித் திருக்கும்போ து குறிசொல்ல நல்லவளானகுறத்திவருகிறவிதங்காண்க.

பொகவிருத்தம்.

பொன்னிலகுமதனைமீறுட்செந்தரோசாருள்புகழுநாட்டில்
மின்னிலகுமருந்திறதமுட்மின்தனங்கள்விம்மிமேவக்காதில்
அன்னிலகுகொந்தலநல்லோலைபளிசிரணக்காதிதில்வளைகள்துன்ன
வன்னமயில்குறவஞ்சிமொழிநிரைக்கோல்கூடையுடன் வருகின்றாளே.

குறத்திவருதல்.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சுந்தரமாய்சாதுறவஞ்சிவந்தாள்-வந்தாளிதோ
சுந்தரமாய்சாதுறவஞ்சிவந்தாள்

அனுபல்லவி.

செந்தாமரைமுகத்தில் திலதம்பளபளென
தந்தக்ஸ்தாளிபூசி தன்னிமொழிவாய்ப்பேசி (சுந்தர)



சரணங்கள்.

சரிகைச்சேலையிடையாள் சார்ந்தஅன்னநடையாள்
மருவுமலருடையாள் வந்தாள்பின்னற்சடையாள் (சுந்தர)
செவியில்தூங்குஜிமிக்கி சிங்காரமாய்குலுக்கி
அவனியுள்ளோரைமயக்கி அம்பாய்குறிபகருவி (சுந்தர)
தெய்வலோகத்திற்சென்றோர்க்குறிசொற்கொண்டு
வையகந்தனிலின்று வந்தாள்குறப்பெண்ணொன்று (சுந்தர)

குறத்தி-வாசல்வளப்பஞ்சொல்-தரு.

இ-ம்-சாரங்கா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வாசலிதுவாசலிது அம்மே மகாராசன்வாசலிது
நேசர்சுதந்தரோஸ்தியான் அம்மே நிறைந்திருக்கும்வாசலிது
ஐங்கரனும்வல்லபையும் அம்மே அருள்செய்திருக்கும்வாசலிது
திக்கனைவிசங்கரனூர் அம்மே சிறந்தவாழும்வாசலிது
சிலைப்புனத்தில்வள்ளிகந்தன் அம்மே சேர்ந்திருக்கும்வாசலிது
கனத்தஅயிராணியிந்திரன் அம்மே களித்திருக்கும்வாசலிது

கோகிலாதேவி-குறத்திக்குச்சொல்-விருத்தம்.

மாளிகைமணிபுரக்கு மாணிக்கதிகல்மெத்த
யோசனையாகவெக்க ஞானிவாசலின்வளப்பம்
நேரித்துந்நீயுரைத்தாய் தேன்மொழியாளேயுக்கு
தேவர்புகழுஞ்சாதித் திறத்தினைப்புகலுவாயே.

வசனம்.

அகோவாரும் என்வாசல்வளப்பஞ்சொல்லியந்த பெண்ணே நீ ஆதியோசனையோடு எங்குறிதமான வாசலிலும்வந்தசொல் லிவந்ததைக்கேட்டு மகாசந்தோஷ மடைந்தேன். ஆகையால் உன்னு டைய ஜாதிவளப்பத்தைச்சொல்லியாரும் பெண்ணே.

குறத்தி-தன் சாதிவளப்பஞ்சொல்-தரு.

இ-ம்-சௌராஷ்டிகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கள்சாதிகுறச் சாதியம்மே-சாதி
செல்லாமுயர்குல மென்குலமம்மே

அநுபல்லவி.

கங்கைபாலர்வேளூர் செங்கைவேலவர்வாழும்
மங்களம்பெருகியே தங்கும்பாண்டிநன்னாட்டில் (எங்கள்)

சரணங்கள்.

நாட்டுத்தலைவரைப்போல் காட்டிலேகுறிக்கமாட்டோம்-வண்டு
நக்கிப்பார்த்துப்பூவையெச்சிலென்றுகூந்தலிற் சூட்டோம்
பூட்டமரெங்கள்குலவித்தையொருவர்க்குங் காட்டோம்-வெள்ளி
பொன்னையொருபொருட்டாயெண்ணிக்கொண்டெட்டிநின்றுகூட் [டோம்-கலைக்
காட்டச்சொல்லிரோகை டார்த்தெதவர்க்குக்குறி
கருத்திலிநினைத்தபடி யுரைத்துமிக்கியடித்து
சந்தவோம் வேர் சந்தவோம் தொம்பை
தைத்தவோம் பழஞ் சுஞ்சிக்குச் சந்தவோம்-அம்மே (எங்க)

காருலாவும்பாணேநிகர்ப்போத்திறைக் கொல்லே-அம்மே
கையில்தாலியென்று கட்டிக்கொள்வோம்புலிப் பல்லே
மாருமுலையெட்டிப் பிடித்தபோதிலுங்குற்ற மில்லே-சங்கு
மாலையமாமன்மச்சான் நீண்டுமேடேறவருங் கல்லே-அம்மே
ஒவ்வொருகுறவனை எட்டுக்குறத்தியாய்
உனக்கெனக்கென்றுசொல்லி யணைத்து
ஓடுவோம் கிட்டி நாடுவோம் பட்டு
மூடுவோம் காம்பூனை போடுவோம்-அம்மே (எங்)

குறத்திருகிருனித்தால் குறவன்காயத்தில்லண்டு-மச்சான்
கொழுந்தனுடன்படுப்போம் புருஷன்போல்நினைத்துக்கொண்டு
மற்றொருசாதிக்குப்பெண்கொடோமென்பதைக் கண்டு-எங்கள்
வளப்புப்பெண்ணைசப்பிர மணியர்திருடிக்கொண்டார்பண்டு-அம் [மே
ஆனைக்கறியிருக்கப் பூனைக்கறிக்கிச்சிப்போம்
அருங்காலைக்கிழிச்சென்று பெருங்கிழங்குவகைகள்
கெல்லுவோம்-சுட்டு மெல்லுவோம்-எங்குஞ்
செல்லுவோம்-பஞ்சபாட்டுசொல்லுவோம்-அம்மே (எங்)



குறத்தி-நாருகாசனிக்குச்சொல்-விருத்தம்.

பார்புகழ்வீமராஜன்புத்திரியானமேனாய்
நேர்புகழ்மன்னர்சூழுஞ் சபைதனிலென்னையிங்கே
வீருடனழைத்ததேது சிந்தையில்நினைத்ததென்ன
கூறுவாய்சுதனைத்திலேதான் குறிப்பறிந்தைப்பேனம்மே.

வசனம்.

கேளுமம்மா தாயே நீ என்ன யாதுகாரணமாக இந்தசபைக் கழைத்தாய் சொல்லுமம்மா.

நாருகாசனி-குறத்திக்குச்சொல்-விருத்தம்.

பலவகைக்குறிகள்தன்னைப் பகுத்தவர்களுக்குஞ்சொல்லு
பவளவாய்க்குறக்குலத்து மங்கையேசொல்லக்கேளாய்
நிலையதாய்மனதிலொன்று நினைத்தனை அதனையாய்ந்து
நலமுடனெந்தனுக்கு நங்கையேநவிலுவாயே.

வசனம்.

அடிவாடியம்மே குறத்தி நீ குறிசொல்லவல்லவளென்பதுமெய்யே ஆனால் நானொருநினைவுகொண்டிருக்கிறேன் அதையின்னதென்று ஆராய்ந்துசொல்வாய் குறப்பெண்ணே.

குறத்திசொல்-வசனம்.

அப்படியேசொல்லுகிறேன்கேளும்மாதாயே.

குறத்தி தெய்வம்பரவும்-அகவல்.

திங்கள்மாமுடியில் திகழவேதரித்த
சங்கரன்மகனே தந்திமாமுகனே
உங்கள்தன்பாத முகத்தனன்யாரும்
மங்கையாள்குறிக்கு வந்திடுக்கணப்பா
லாடசந்நியாசியே லாடமுனிஐயனே
தேடியேவந்திடுஞ் செகமுனிஐயனே
ஐயநாரப்பனே அகஸ்தியனே
பையப்பேசிகொஞ்சும் பாவாடைராயனே
அஷ்டதிக்கினில்வாழ் அஷ்டமாகாளியே
காஷ்டக்காட்டேறியே குறுவாளியே
வல்லிநாயகியே மண்டகத்தாயே
மோ

பில்லிசூனியங்களை பிரட்டுங்காமாக்ஷியே
சத்தியமாதரியே சல்லியநங்கையே
பத்தியாயுந்தனைப் பணிந்தநான்போற்றினேன்
மாமுண்டிகையனே மலையாளபகவதி
சாமுண்டிநீயே சப்டாணிக்கறுப்பா
காத்தவராயா கருநீயேவந்திடும்
தொந்திரஞ்செய்திட்டதனையேவந்திடும்
ஓட்டிவஞ்சல்லியம் ஒன்பதுகம்பளம்
தொட்டியகீலயாளம் இட்டமாகாளியே
சத்திவீரையனே சங்கிலிகறுப்பா
முத்திவேலந்திடும் மூத்தால்ராவுத்தனே
கட்டைமுனியே கறுப்பண்ணசாமியே
இட்டமாய்வணங்கினே னென்குலதெய்வமே
மங்கைதாருகாசனி மனதில்நினைந்தது
தங்கமோபொன்னோ தையலாபரணமோ
வட்டிலோசெம்போ வயிரமோபொன்னோ
கட்டிலோமெத்தையோ கைதப்பிப்போனதோ
பச்சைமாணிக்கமோ பகுஞ்சந்திராரமோ
வச்சிரப்பொன்னூலோ மணிமுத்தாரமோ
அங்கையிற்கனிபோல் லக்ஷமிந்தனைக்க
சங்கராஅறியத் தயவுசெய்வாயே.

குறத்திசொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அட தாளம்.

பல்லவி.

அறிந்துகொண்டேனே-குறி
தெரிந்துகொண்டேனே

அநுபல்லவி.

பெருந்தவம்புரிபவர்க் கருள்தருநிலையுடன்
புனல்வளிசொக்க நாதர்திருவையால் (அறிந்)

சரணங்கள்.

உங்கள்குலமங்கிலிய தெய்வமந்தக்கதிற்குள
ராசகுடமுனியனும் காவுகொண்டாரெத்துள



ஒலிக்கிற ஓஅம்மே மூலிக்கிற மூலியிலே
எச்சிலைப்பார்த்த செரிக்கிற என்னுடைப்புகுழுக்குரு(அறி)
சங்கிலிகறுப்பன்வந்தா சாடையிக்காட்டுறா
சப்பாணிமுனியனும் தொண்டிதொண்டியாடுறா
சாடுறா ஓஅம்மே நாடுறா ஓவாத்தா
கூடுறா கூடிக்கொண் டாடிக்கொண்டிருக்குறா (அறிந்)
பேச்சிகாட்டேறிதெய்வம் பெட்டைகோழிகேக்குறா
பூமாலைராவுத்தனும் பெருப்பூசைகேக்குறா
கனக்குறு ஓஅம்மே பலுக்குறு மூலியிலே
குலுக்குறு குலுக்கிக்கொண் டிருக்குறு அருமைதீர (அறி)

குறத்தி தாருகாசனியின் கையைப்பார்க்கும்-தரு.

இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

கங்கணக்கடையிட்ட கையைக்காட்டாய்-அம்மே
மங்கையரோதக்கரோகை கையைக்காட்டாய்
அலங்கடகம்புனைந்த கையைக்காட்டாய்-அம்மே
அலங்காரதொனிமிட்ட கையைக்காட்டாய்
சித்திரக்குடகமிட்ட கையைக்காட்டாய்-அம்மே
செங்கமலர்தந்தரேகை கையைக்காட்டாய்

குறிசொல்லும்-தரு.

நிஸதெந்நி ஸநிஸதந்நிஸ நிஸதந்நிஸ நிஸ
தெந்தரி ஸரிஸநி நிஸதந்நிஸ நிஸ.

முத்திமுத்திநாயகியைப் பணிவோமடியம்மே
முருகருக்கு முந்தியவனைப் பணிவோமடியம்மே
செந்திலவடிவேலவனைப் பணிவோமடியம்மே
தெய்வானைநாயகனைப் பணிவோமடியம்மே
சத்திகறுப்பன்றனே சாமுண்டியேவாராய்
சித்தைதயில்நினைந்தகுறி தேவையருள்புரிவாய்
அச்சமில்லாதாக்குறிகைய றிந்தவளைசொல்வேன்
அரசர்கருக்காசு வாசல்டைனாராசனே

| | |
|---|---|
| நிடதாபுரியையெல்லாம் | நியஷத்திலேதோற்று |
| நீண்டதொருகானகத்தில் | சேர்ந்தாரடியம்மே |
| நாட்டைவிட்டுகாடுதனில் | நலிந்தரசன்செல்ல |
| நங்கைதமயந்தியுஞ் | செங்கைதொட்டுப்போக |
| பாடுபட்டுஇருவர்களும் | பட்சிகொடுமையாலே |
| பற்றுடையிழந்துயிலதனை | பார்மன்னனுமிழக்க |
| துயிலிழந்தநளராஜன் | துன்பமிகப்படவே |
| தோகைதமயந்தியர்க்கு | துக்கமிந்திரைவரவே |
| அவிலமதில்துயிலவைத்து | அரசனொண்டியாக |
| அழுதுகொண்டுபோகையிலே | அரவமதுகடிக்க |
| கடித்ததுடன்நளராஜன் | கரியனுமாகி |
| காவலனும்மோர்நகரில் | ஏவல்பணிசெய்ய |

அடித்தாதிதீமைசெய்தமக்கைவிழித்துக்கொண்டுபுலம்ப

| | |
|---|---|
| குதஞ்சரிமாய்கையினுல் | பாதகமாய்சர்ப்பம் |
| காலைச்சுற்றிக்கடிக்கவர | குலங்கொண்டுவேடன் |
| கண்டித்துதமயந்தியைப் | பெண்டுக்கழைக்க |
| சூலமுண்டோன்தனைநினைக்க | கோலஞ்செய்தவேடன் |
| அக்கினியாயெரிந்தவனும் | திக்கெனவேபறக்க |
| நங்கைதமயந்தியும் | பக்கமொன்றில்லாமல் |
| நாதர்முனிவோரிடத்தில் | சீருடனேபோக |
| அங்கவர்கள்தமயந்திக்கு | ஆசீர்வாதஞ்செய்ய |
| அவடம்விட்டுஓர்நகரில் | சபடமதாயிருக்க |
| மக்கள்குறியிப்படியா | யிருந்ததம்மாசொல்வேன், |
| எப்படியுமவிருவர் | ஒப்புடனேவருவர் |
| மாங்கயிருநளராஜன் | தன்மைதமயந்தி |
| சுகமுடனேயிருவர்களும் | இருக்கிறாரடியம்மே |
| வந்தவெகுதேமாச்ச | மலைக்குநாம்போறேன் |
| மங்கையுடனேயிருவர்களும் | வந்துசேருவார்கள் |

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் குறத்திசொன்னதைக்கேட்ட தாருகாசனி அன்புறுதானுடைய வீமராஜனுக்குச்சொல்லுமெவிருத்தமாவது.



தாருகாசனி வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னவர்மன்னனுன மகிபனேயொருவிண்ணப்பங்
கன்னிதம்மகளைக்கண்டு கலக்கங்கள்தீர்ந்தோமேனும்
இந்நிலம்புகழுஞ்சக்கிரேஸ்பரன்தன்னையிங்கே
உன்னிநீர்செய்யுமையா வுமதுபொற்பாதம்போற்றி.

வசனம்.

சாணுஞ்சாணம் என்பிராணனுபகா நமது செல்வகுமாரத்தியாகிய தமயந்தியைக்கண்டு விசனந்தணிந்தோமே, ஆனாலும் நமது மருமகனாகிய நளமகாராஜனைத்தேடி அழைத்துவந்து நமது குமாரத்தியின்விசனத்தைத் தீர்க்கும்படியான முயற்சிசெய்யவேணும்.

வீமராஜன்-வேதியருக்குச்சொல்-விருத்தம்.

தேசங்களெல்லாஞ்சுற்றி தேடினையிந்தசொல்லும்
நேசமாயெனக்குதந்த நிபுணனேயொருவிண்ணப்பம்
மாநிலாதனதுபேரன் மருகனாயிருந்த
தேசத்திலிருக்கிறானோ தெரிந்துநீர்வருகுவீரே.

வசனம்.

சொனும் சுவாமி வேதியரே நீர்தேசதேசமாகத்திரிந்து பழக்கப்பட்டிருக்கிறீர் ஆதலால் எனதுமருமகனாகிய நளமகாராஜன் எந்தேசத்திலிருக்கிறானோ தெரியவில்லை நீர்போய் அவனிருக்குமிடத்தை அறிந்துவாரும் சுவாமி.

வேதியர்-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னர்மன்னனுன மகிபனே ஆசீர்வாதம்
இந்நிலமுதலாயுள்ள வெத்தனைதேசமாகினும்
சொன்னவுன்மொழிப்படிக்கு சுற்றியேயவருக்குள்ள
இன்னல்தீர்த்திடுவதற்கு பிரயாசப்பட்டுவருவேனே.

வசனம்.

ஆசீர்வாதம் மகாராஜனே உமது உத்தரவின்படியே இந்தபூமியிலுள்ள காடுமலை பட்டணங்களெல்லாந்திரிந்து அந்த நளமகாராஜன் எவ்விடத்திலிருக்கிறானென்று கண்டுபிடித்து அவருக்குள்ள வருத்தத்தையும் உமக்குள்ள விசனத்தையுந் தீர்ப்பேனென்று போய்வருகிறேன் மகாராஜனே.

வீமராஜன்-வேதியருக்குச்சொல்-வசனம்.

அப்படியே போய்வாரும் சுவாமி.

வெண்டுறைவிருத்தம்.

அருமாருந்தேசதேச அடவிகளெல்லாஞ்சுற்றி
பரிவுடன்காணுதேகிப் பான்மையாயயோத்திதன்னில்
இருக்கலா நளமகாராஜேந்திரன் சேவகஞ்செய்யக்கண்டு
உருகியேவீமராஜற் குரைத்திடவருகின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வீமராஜனிடத்தில் விடைபெற்றுவந்த வேதியரானவர் தேசதேசமாகத்திரிந்து எங்குங்காணாமல் வருத்தப்பட்டு அயோத்திநகரிலேநளனைக்கண்டு அந்நகரத்தையாளும் இருதுபன்ன மகாராஜனிடத்தில் நளமகாராஜன் மாறுவேஷமாய் சேவகஞ்செய்வதைக்கண்டு இவரே நளமகாராஜனென்று நிச்சயித்து அந்தாக்ஷிரத்தைப் விதர்ப்பதேசத்திற்கு வந்து வீமராஜனைக்கண்டு சொல்லுவது காண்க.

வேதியர்-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மானிலந்தோர்துதிக்கு மன்னனே ஆசீர்வாதம்
நானிந்தத்தேசமெல்லாம் நாடியேஅயோத்திசேர்ந்தேன்
தானதுழாசெய்த சக்கிரவர்த்திருதுபன்னற்கு
ஏனசேவகஞ்செய்துக்கொண்டிருக்கிறானிந்நளவந்தேசு.

வசனம்.

ஆசீர்வாதம் மகாராஜனே நான் தேசதேசமாகத்திரிந்து எங்குங்காணாமல் அயோத்திநகரத்திற்குப்போனேன் அந்த நகரத்தையாளும் இருதுபன்ன மகாராஜனிடத்தில் நவகண்டத்தையு மொருகுடையிலாண்ட சக்கிரவர்த்தியான நளமகாராஜன் நளனுருமாறி பரிசாரகனைப்போல் சேவகஞ்செய்துக்கொண்டிருப்பதைக்கண்டுவிடைப்பெற்றுவந்தேன் மகாராஜனே.

வீமராஜன்வேதியருக்குச்சொல்-கலித்துறை.

ஐயோ அவனியையோர்குடைநிழலாக்குநில
செய்யுமரசர்க்குஇந்தவினைவரச்செயலோ
தையுநெஞ்சுடைமிந்தமொழிகேள்நான்பயிந்த
தைபறிந்திட்டீர்சென்றுசொல்லுந்தயாபரரே.



வசனம்.

ஐயையோதெய்வமே நவகண்டத்தையும் அரசுசெய்த நளமகாராஜன் நமக்குப் பலதிக்கட்டிவந்த அரசனிடத்தில் ஏவல்செய்வது உன்னுடையசெயலோ நானேதுமறியேன், இந்தசங்கதியை என்குமாரத்தியாகிய தமயந்திக்குச்சொல்லும் வேதியரே.

வேதியர்-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

பூவையர்களுக்குமேலாம் புனற்கொடியானவுந்தன்
காவலனயோத்திதன்னி லிருதுபன்னனுக்கு
நாவுதரும்பரியையோட்டுஞ் சாரதியாய்ச்சமைந்து
மேவியேயிருக்கிறார்நான் விவரமாய்த்தெரிந்தேனம்மா.

வசனம்.

கேளுமம்மா மாதர்க்கரசியே உன்புருஷன் சதியன்கொடுமையால் உருமாறி அயோத்திநகரத்தையாளும் இருதுபன்ன மகாராஜனிடத்தில் சாரதியாயிருக்கிறாரம்மா தாயே.

தமயந்திசொல்கொச்சகம்.

எட்டுதிக்கிலுள்ளதெல்லாம் வகையாய்க்கண்டவர்நான்
பட்டதுயர்போதாமல் பாவிதெய்வமேயிப்படி
விட்டையோசாரதியாய் மேவிசுயம்பாகியென
கெட்டிதோகாலமெங்கள் கெதியிப்படியாச்சோ.

வசனம்.

ஐயையோதெய்வமே நவகண்டத்தையுமாண்ட மகாராஜனை காட்டிற்பிரிந்திய அன்பையோதறென்றோ நமக்குப்பலதிக்கட்டிவந்த அரசனிடத்தில் சாரதியாகவும் சுயம்பாகியாகவுமனைந்தாய் என்கண்மணி இப்படியாச்சோ நானென்னசெய்வேன் தெய்வமே.

தமயந்திபுலம்பல்.

தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

ஏகொடுமிதியே-எங்கட்-கொப்பார்கொடுமிதியே

அநுபல்லவி.

எங்கள்மன்னா
இங்குவாமிது
நட்பிசெய்ய
வேறுபலர்க்குச்செய்து
மன்னவுமிப்படி
எங்கள்கதிசதி
வேலர்க்குவந்ததோ-நாங்க
ளிக்காலதொந்தமே (ஏகொ)

சரணங்கள்.

காலமெங்களுக்கனு கூலம்செய்யுமவர்கள்
சீலம்கெடுவதென்ன கோலம் ஐயையோயிந்த
ஜாலம் ஆகுதோ ஆல காலம் விஷமுண்டவர்
போலும் நான்செய்கின்ற ஓலம் கேட்டுமிப்படி (ஏகோ)

ஏதோ சரியன்செய்த தூதோ பிர்ம்மனுக்கிந்த
வாதோ நாங்கள்செய்தது தீதோ தெய்வமும்பொறாக்
காதோ யெங்கட்குவினை யீதோ சுவாமிக்குத்தெரி
யாதோ வயிறெரிந்தி டாதோ யிப்படிசெய்தால் (ஏகோ)

ஏனோ பொல்லாங்குகள்செய் தேனோ பெரியோரைவை
தேனோ யேழைநோகச்செய் தேனோ யிந்தப்படிக்கு
தானோ அனுபவிக்க நானோ பாவிபடைத்திட்
டானோ பிரமன்கண்கெட் டானோ தயவுறமே (ஏகோ)

தைய சதியனிது செய்ய இதைக்குறிக்கப்பி
வெய்ய பணிவிடைகள் செய்ய வந்துதோகாலம்
தைய வந்மையெங்கட் கெய்ய மிகவருந்தி
நொய்ய பயிரானியா யுய்ய ஐயோவந்த (ஏகோ)

தமயந்தி வேதியருக்குச்சொல்-விருத்தம்.

வேதியர்குலத்ததித்த வித்தகாயெனதுபிரானை
ஓதனர்ருதுபன்னற்கு நாடியேயேவல்செய்ய
பாதிமாமதியைச்சூடும் பானருளதுவேயாகும்
ஓதுமென்வார்த்தைதன்னை யுவந்துரைசெய்வீரக்கே.

வசனம்.

கேளும் சுவாமி வேதியரே எனதுபிராணநாயகர் இருதுபன்ன ராஜனிடத்தில் ஏவல்செய்திருப்பது சிவன்செயலாகும் அதற்கு நாம் என்னசெய்யலாம். ஆகிலும் நானொருவார்த்தைசொல்லுகிறேன் அதை அயோத்திநகரத்திற்குப்போய் சொல்லும் வேதியரே.

இதுவும்-தமயந்திசொல்-விருத்தம்.

ஐயனேருதுபன்னற்கு அருளுவதொன்றுகேளாய்
தையலாள்தமயந்திப்பெண் தயங்கியேமறுவிவாகஞ்
செய்யவேயத்தனித்தாள் தீரனேநாளைவந்தால்
பையவேமாலைசூட்ட லாமெனப்புகர்ந்திடாயே.



வசனம்.

கேளுமையா சுவாமி நீர் அந்த அயோத்திநகரத்தையாளும் இருதுபன்னமகாராஜ னிடத்திற்குப்போய் சொல்லவேண்டியதெனில் நிடததேசத்தையாண்ட நளமகாராஜன் விதிவசத்தினால் சூதாடிபோ குந்திய சொக்கட்டானாடி நாடுநகரத்தைத்தோற்று தனது பத்தினி யாகிய தமயந்தியுடன் காட்டிற்குப்போய் அந்தமயந்தி நித்திரை செய்யும்போது தனியேவிட்டுவிட்டு எவ்விடத்திற்கோபோய்விட்டா ர் அந்தப்பெண்விழித்துப் புருஷனைக்காணாமல் பரிதவித்து விதர்ப்ப தேசத்தையடைந்து தனதுநாயகன் காட்டில்விட்டுப்போன சங்கதி யை தாய்தகப்பனுடன்சொன்னாள் அவர்கள்கேட்டு வருத்தப்பட்டு தனதுகுமாரத்தியி னுத்தரவின்படி மறுமணஞ்செய்யத் தீர்மானித் தார்கள் நாளையதினம் சுயம்வரம் நேர்போகிறதாயிருந்தால் சீக்கிரத் திற்படமென்று சொல்லிவிட்டுவாரும் வேதியரே.

வேதியர்சொல்-விருத்தம்.

வீமனார்பெற்றமயிலன்ன மெல்லியுன்மொழிப்படிக்கு
நாமமார்ருதுபன்னன்பால் நானிதோசென்றவர்க்கு
நேமமாச்சுதவிவாகம் நிச்சயமாகநாளை
ஆமிதோவென்றுசொல்லி அரைக்ஷணம்வருவேனே.

வசனம்.

கேளுமம்மா மாதுசிரோமணி உனதுசொற்படியே இதோபோ ய் அந்த அயோத்திநகரத்தையாளும்புஷ்கரனுக்குச் சொல்லிவருகி றேனம்மா தாயே.

வேதியர்-இருதுபன்னமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

அரிகுலத்துதித்த அயோத்திநாடாளும்வேந்தே
பரிவுடன்வீமன்பெற்ற பாவையாள்மனஞ்சலித்து
மறுவிவாகத்தின்பேரில் மனமதாயிருக்கிறாள்நீ
திருக்கொண்டிலாமுற்சென்றால் செய்யலாம்விவாகந்தானே.

வசனம்.

கேளும் இருதுபன்னமகாராஜனே விதர்ப்பதேசத்தையாளும் வீமராஜன் புதல்வியான தமயந்தியானவள் தன்புருஷனாகிய நளம காராஜன் தன்னை காட்டில்விட்டுப் போனானென்கிற வருத்தத்தால்

தாய்வீடுசேர்ந்து தனது தகப்பனுன வீமராஜனிடத்தில் மறுமணஞ் செய்விக்கவேண்டுமென்று சொன்னுள் அதற்கு வீமராஜன் சம்மதித்து செய்விக்கப்போகிருர். நாளையதினம் சுயம்வரம் ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் வந்திருக்கிருர்கள் நீரும்வந்தால் அந்ததமயந்தியை மணஞ்செய்து வருவீர் மகாராஜனே.

இருதுபன்னமகாராஜன்-கட்டியக்காரனுக்குச்சொல்

விருத்தம்.

வாசலில்காத்துநின்றேன் வாக்கியப்படி நடக்கும்
மாமிக்கட்டியனேநம்பால் மகிழ்வுடன்சமயல்செய்து
வாசியின்குணமறிந்து வகையுடனடத்தவல்ல
வசிலான்றன்னையிக்கே யிட்சணமழைத்துவாராய்.

வசனம்.

கேளும்பிள்ளாய் கட்டியக்காரா நம்மிடத்தில் நெருப்பில்லாமல்சமயல்செய்யவும், குதிரையின் இருதயத்தையறிந்து தேரிற்பூட்டி நடத்தவும் வல்லமையுடையவனு யிருக்கின்றவாகுவனை அதிசீக்கிரத்தில் அழைத்துவாரும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன்-நளமகாராஜனுக்குச்சொல்

விருத்தம்.

நெருப்பிலாச்சமயல்செய்து திருபனுக்களித்தேவாசி
யருத்தையுமறிந்துணைக்கும் காரியக்காரனேளாய்
தெரிவையாள்தமயந்திப்பெண் செய்கிறுன்மறுவிவாகம்
அரசனுர்கேட்டுவும்மை யழைப்பித்தார்வருகுவீரே.

வசனம்.

கேளும் நெருப்பில்லாமற் சமயல்செய்தும் குதிரையி னிருதயத்தையறிந்தும் புகழ்பெற்றவாகுவா நமதுஅரசன், வீமராஜன்குமாரத்தியும், நிடததேசத்தையாண்ட நளமகாராஜன் பத்தினியுமாகிய தமயந்திக்கு மறுமணமென்று கேள்விப்பட்டு உன்னை அழைத்துவரச்சொன்னுரப்பா வாகுவா.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

குண்டினபுரத்துமன்னன் குமாரத்திவிவாகஞ்செய்ய
நன்றியோதகுமோவிந்த ஞாயமெவ்வுலகிலுண்டு



இன்றிந்தசொல்லைக்கேட்க வென்மனந்துடிக்குதையோ
குன்றைவில்லாய்வளைத்தோய் கூடுமோதிருபனுக்கே.

வசனம்.

ஐயையோ தெய்வமே வீமராஜன்குமாரத்தியாகிய தமயந்தி மறுமணத்திற்கிசைந்தது நீதியோ, பெண்கள்கற்பிறுக்கழகோ, தருமமோ, இது எவருக்குத்தகும், இந்தஞாயம் எவ்வுலகிலுண்டு இம்மொழியைக்கேட்டவுடன் என்மனங்கலங்குதே நானென்னசெய்வேன் மேருவைவில்லாகவளைத்து திரிபுரதகனஞ்செய்த காலகாலா.

நளமகாராஜன்-புலம்பல்.

தரு-இ-ம்-சஹாநா-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயோநானென்னசெய்வேன்-சதாசிவன்
செய்யுஞ்செயல்தனக்கே

அநுபல்லவி.

மையல்தருமெந்தன்      தையல்தமயந்தி
செய்யும்விவாகத்தா      லுய்யதினைத்தாளே(ஐயோ)

சரணங்கள்.

கொண்டபுருஷ      னிருக்க-மறுமணங்
கொண்டாளேமிக      வருக்க
முண்டகவதனமும்      கொண்டையழகையும்
அண்டர்புகழும்பெண்ணைக்      கண்டுவெகுநாளாச்சே(ஐயோ)

இப்படிசெய்வா      ளென்றே-நான்
அப்போதறிகி      லேனே
தப்பிநாளோஅவள்      கற்புநிலைகெடத்
தப்பிதமென்றவ      ளுக்குத்தெரியாதோ(ஐயோ)

முன்னமிருந்      ததனை-தமயந்தி
என்னவிதமறந்      தாள்
கன்னியிவள்செய்த      நன்னயத்தைத்தினம்
உன்னிசஹாநாவை      பன்னிப்பாடுவேனே(ஐயோ)

நளமகாராஜன்சொல்-கலித்துறை.

மானேர்விழிபணங்காள்செய்தவஞ்சகமானதனை
ஏனென்றுநினைந்துவருகிடவேபிர்மனமுநினைத்தான்

போனானென்றெண்ணிவேறுவிவாகத்தைப்பூவையைய்யுந்
தானேமயனக்குவிதிவந்தகோசதி செய்ததுவே.

வசனம்.

ஐயையோ பிரமதேவா அந்ததமயந்தியானவள் நமதுகணவன் நம்மை காட்டில் விட்டுவிட்டு எவ்விடத்திற்கோ போய்விட்டார் இனி இந்ததிசையைத்திரும்பாரென்று நினைத்து மறுவிவாகத்திற்குச்சம்மதித்தாளோ அல்லது என்னைவருத்தும் சநியன்கொடுமையால் புத்திமயங்கி கற்பென்பதைமறந்து இன்னொருவிவாகஞ் செய்துகொண்டால் சவுக்கியப்படலாமென்று நினைத்தாளோ நான் யாதுமறியேன் இந்தசமாச்சாரத்தையுங்கேட்டு துயரப்பட எனக்கு விதித்தாயோ பிரமதேவா.

நளமகாராஜன்-இருதுபன்னமகாராஜனுக்குச்சொல்

விருத்தம்.

மன்னனேரிதுபன்னேந்திர மகிபனேகிருபைசெய்து
என்னைநீரழைத்ததாக வியம்பினன் வாசற்காப்போன்
நன்னயமாகவந்தேன் நாதனேயெனக்குநீரும்
சொன்னசொற்படிநடப்பேன் சுருக்கிலுரைத்திடீரே.

வசனம்.

சரணஞ்சரணமையாசுவாமி என்னை தாங்களழைத்ததாக கட்டியக்காரன்சொன்னான் அதைக்கேட்டு ஓடிவந்தேன் அடியேனை யழைப்பித்தசங்கதியைத் தெரியப்படுத்தும் மகாராஜனே.

இருதுபன்னன் - நளமகாராஜனுக்குச்சொல்

விருத்தம்.

எனக்குறுசுவையதான வெழிலமுதளிக்கவல்ல
மனத்தனே நளராஜேந்திரன் மனைவியாள்மனஞ்சலித்து
தனதாகமறுவிவாகஞ் சாதித்தாளதுவுநாளைத்
தினத்திலென்றுரைத்தார்தேரை சீக்கிரம்நடத்துவாயோ.

வசனம்,

கேளும் எனக்கு அமுதிலான அறுசுவையோடு பொருந்திய அமுது சமைத்துக்கொடுக்கும் வாகுவா நளமகாராஜன் மனைவியாகிய தமயந்தியானவள் நளனாகிய நாயகன் தன்னைகாட்டில்விட்டுப்போய்விட்டானென்று மனஞ்சலித்து மறுமணஞ்செய்துகொள்ளப்போகிறாளாம் அதுவும் நாளையாம் நீ நமதுதேரை இன்றைய ராத்திரிக்குள் அந்த விதர்ப்பதேசத்திற்கு நடத்துவையா சொல்லுமப்பா வாகுவா.



நளமகாராஜன்-இருதுபன்னனுக்குச்சொல்

விருத்தம்.

அதிநயகுணத்தனுதி யயோத்திநாட்டதனையாளும்
ருதுபன்னராஜனேநீர் நட்டமாயென்சொற்கேளுஞ்
சதிசெயாதும்மையின்று சாயங்காலமவிடஞ்சேர்ப்பேன்
மதிமுகப்பெண்ணாள் தன்னை மணமாலைசூட்டுவீரே.

வசனம்,

கேளும் மகாராஜனே நீர் ஒன்றுக்குமஞ்சவேண்டாம் உம்மை இன்றுசாயுங்காலத்திற்குள் அந்தவிதர்ப்பதேசத்திற்சேர்க்கிறேன் நாளையதினம் சந்திரனையொத்த முகத்தையுடையதமயந்தியைவிவாகஞ்செய்துகொள்ளும் மகாராஜனே.

இருதுபன்னன் நளமகாராஜனுக்குச்சொல்

வசனம்.

சந்தோஷம் சந்தோஷம் வாகுவா இன்றைய சாயுங்காலம் அந்தவிதர்ப்பதேசத்தையடைந்தால் அதிக உத்தமந்தாய் நீ சீக்கிரமாய் ரதத்தையலங்கரித்து திவ்வியபுரவிகளைப்பூட்டி கொண்டுவாரும்பிள்ளாய் வாகுவா.

நளமகாராஜன்சொல்-வசனம்,

இதோகொண்டுவருகிறேன் மகாராஜனே.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

வெகுசிவாராஜன்சொன்ன செய்தியைக்கேட்கநெஞ்சம்
கவலமுற்றேக்கமாகி கலங்குதேயென்னசெய்வேன்
அவமதிப்பென்செய்வாளோ ஐயையோபாவம்பாவம்
மவுனமாயெனையழைக்க வகைசெய்தாளோநான்காணேன்,

வசனம்

வெகுவிவாசபுரிவாசா இந்தஇருதுபன்னன்சொன்ன வசனத்தைக்கேட்டு என்மனம்புகைக்குதே அந்த தமயந்தி என்ன அவமா

னஞ்செய்வாளோ அல்லது என்னைக்காணும்பொருட்டு இந்ததந்திரஞ்செய்தாளோ நான் யாதுமறியேன் கைலிவாசா.

நளமகாராஜன்-இருதுபன்னனுக்குச்சொல்

விருத்தம்.

அரசர்களெல்லாம்போற்று மரசனே அயோத்திநாட்டை
வரிசையாயாளவல்ல மன்னவருரைப்படிக்கு
திருவளரசுவக்கட்டித் தேரையுமலங்கரித்து
திருபனேதாம்களிக்க நியிஷத்திற்கொண்டுவந்தேன்.

வசனம்.

கேளும் மகாராஜனே தமது உத்தரவின்படியே தேரை அலங்கரித்து திவ்வியபுரவிகளைப்பூட்டி கொண்டுவந்து நிறுத்தினேனையா சுவாமி,

இருதுபன்னன்-நளமகாராஜனுக்குச்சொல்

விருத்தம்,

அக்கினியில்லாமற்சோறுக்கிடுஞ்சமர்த்தேயீகேளாய்
திக்கெட்டும்புகழும்பெண்ணாள் செய்திடுஞ்சுயம்வரத்திற்
கிக்கணம்போகவேண்டு மேறினேன்றேரிற்றானே
தக்கவுன்சமர்த்தைக்காட்டிச் சடுதியிற்சேர்ப்பாயே.

வசனம்.

கேளும் வாகுவா எட்டுத்திக்கிலும் இவளழகுக்கிணையானபெண்கள் இல்லையென்றுசொல்லும் சௌந்தரியத்தைப்பெற்ற அந்ததமயந்திசெய்யும் மறுமணத்திற்குப்போக எனக்கு அபேக்ஷை விருப்பதால் நீமுன்சொன்னதுபோல இன்றையசாயுங்காலமே அந்தவிதர்ப்பதேசத்திற்கு என்னைக்கொண்டுபோய்விட்டால் மிகவும் நல்லது இதோ தேரின்மீதேறினேன் உனதுசாமர்த்தியத்தைக்காட்டுவாய் மிகுந்த புத்தியையுடைய வாகுவா.

நளமகாராஜன்சொல்-வசனம்,

இதோ தேரைநடத்தினேன்பாரும் மகாராஜனே.



நளமகாராஜனுக்கும் - இருதுபன்னனுக்கும் - தர்க்கம்.

தரு-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்.

நளமகாராஜன்சொல்-தரு.

வாரும்ருது பன்னனே-தேரைநடத்திச்
சேருவோமின்றதானே
பாரும்பதிகடந்தோம்    தேசோதூரம்நடந்தோம்
நீரதிசயித்திட    கோறிக்கைமுடித்திட(வாரும்)

இருதுபன்னன்சொல்-தரு.

வேகமாய்வந்    தோமே-எனக்குவாய்த்த
வாகுவாயினி    நாமே
வாகம்பரிகளிரண்டும்    நாகமோகனைகொண்டு
போகச்சலித்ததென்ன    தேகம்வேர்வைகொள்ள (வேக)

நளமகாராஜன்சொல்-தரு.

கந்தகங்களைத்தா    லென்ன-பெரியோர்கள்
தந்தாரிதற்கு    முன்னம்
மந்திரம்நானுரைத்து    எந்தவிதமுஞ்சேர்ப்பேன்
சிந்தைகலங்கிடாமல்    முந்தைதளருமல் (கந்த)

இருதுபன்னன்சொல்-தரு.

மெத்தமனம்    மகிழ்ந்தேன்-நீர்
கற்றவித்தையைப் புகழ்ந்தேன்
தத்தாரிநடக்கும்    சத்துவாலென்மேற்கிடக்கும்
சுத்தஅங்கவஸ்திரம்    இத்தரையினில்வீழ(மெத்த)

நளமகாராஜன்சொல்-தரு.

வஸ்திரம்விழுந்    தகற்கும்-நீருரைத்த
வாக்கியமுடிந்    தகற்கும்
பத்துயோசனைதூரம்    மெய்க்களுக்காய்ப்போச்சும்
சித்தமகிழ்ச்சியாக    வித்தையால்நடந்தேக(வஸ்திர)

இருதுபன்னன்சொல்-தரு.

மாநிலம்புகழ்    வாகுவா-தெரியுதுபார்
கானகந்தனி    லேகமா
வானமளாவிநிற்குந்    தான்றியடிநிறுத்தம்
யானுவால்வெசாடி    தானேசூழ்பிபாடி(மாநிலம்)

இருதுபன்னன்-நளமகாராஜனுக்குச்சொல்

விருத்தம்.

விண்டலங்கிடுகிடென்ன மேதினிநடுநடுக்க
மண்டலம்பொடியதாக வரும்ரதபாகனேகேள்
எண்டிசையோருமெச்ச மெழில்தான்றிமாமரத்தைக்
கண்டுடனிலையுங்காயுங் கணக்கிதோசொல்வேன்பாராய்.

வசனம்.

கேளுமப்பா அண்டகடாகமும் பூமியும் கிடுகிடென்று நடுங்கவும், செடி-மலை-புதறுகளெல்லாம் பொடிப்பொடியாய்ப்போகவும் இரதத்தைநடத்திய வாகுவா நீ மெச்சும்படியாக அதோ எதிரிலிருக்கப்பட்ட தான்றிமரத்தின் இலை-பூ-காய்-பழம்-உட்பட ஆக உருவு இத்தனையென்று தொகைசொல்லுகிறேன்பாரும் வாகுவா.

இதுவும்-இருதுபன்னன்சொல்-விருத்தம்.

இந்திரர்பேர்விளங்க யிலகுவாகுவனேகேளாய்
தோன்றியவுலகோர்தம்மாற் சொல்லவுமரிதாமிந்த
தான்றியினிலையுங்காயுங் கருங்கனியெண்ணிப்பார்த்தால்
மூன்றுகோடியுமெமுப்பத் திரண்டுமாமறிந்திடாயே.

வசனம்.

கேளும் இந்திரர்பெயர் விளக்கத்தக்க சவுரியம்படைத்த வாகுவா அதோ எதிரிலே தோற்றும் தான்றிமரத்தின் இலைபூ-காய்-பழம் உட்படதொகை மூன்றுகோடியும் முப்பத்திரண்டும் அது சந்தேகமாயிருந்தால் அந்தமரத்தி னருகிற்போய் எண்ணிப்பார்த்துக்கொள்ளும் வாகுவா.

நளமகாராஜன்-இருதுபன்னனுக்குச்சொல்-கவி.

அலைகடலுலகுமெச்ச-வல்லமையாய்த்தான்றிமாவின்
இலைகளுங்கனியுஞ்சொன்னீர்-நலமுடனறிந்துவாரேன்.

பொதுவிருத்தம்.

மதிமுகநளராஜேந்திரன் மன்னவன்சொற்படிக்கு
அதிவிசாலமதாயுள்ள அண்டோறுந்தான்றிபக்கல்
கதிப்புடன்வந்துநின்று கணக்கதாயெண்ணும்போது
சதிசெயுஞ்சநியுந்து தயங்கியேதானசெய்வானே.



70

வசனம்.

இந்தப்பிரகாரம் இருதுபன்னன் சொன்னதைக்கேட்ட நளமகாராஜன் ஆனால் இதோபோய்ப் பார்த்துவருகிறேனென்றுசொல்லி அந்த தான்றிமரத்தினருகில்வந்து அதனிலைகளை எண்ணிக்கொண்டிருக்கும்போது சநிபகவான் நளமகாராஜனுடைய தேகத்தைக்கண்டு பயந்து தரிசனந்தந்து சொல்லுவதுகாண்க.

சநிபகவான்-நளமகாராஜனுக்குச்சொல்-திபதை.

இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஐயோநானென்னசெய்வே னரசர்க்கரசாவுன்னை
அடுத்துத்துயருற்றேன் நானே
தையலாள்தமயந்தியாளையிச்சித்ததால்
தயங்கிடவுமானேன் நானே
மாசிலாத்தமயந்திசாபத்தாலேநொந்து
வாடிடலாச்சுதே நானே
கூசுதேவும்மோடு பேசவாய்வாராது
கோபம்வேண்டாம்சநி நானே
பெண்டுபிள்ளையைவிட்டு கொண்டவுன்துயரத்தை
கண்டவரும்வசை பேச
எண்டிசைதனிலுள்ள மண்டலீகருமற்ற
அண்டருமெனைக்கண்டு ஏச
தையல்தமயந்தியை ஐயோபிரிந்திடச்
செய்தபொல்லாதவன் நானே
மெய்யாயுன்பேர்சொல்வோர் பாலனுகாமலே
உய்யச்செய்வேனவனா நானே
இந்தவிதமாயெந்தன்மதியாற்செய்தேன்
உந்தன்பதியைநான் தேடி
சிந்தைதளர்ந்துநீர்நொந்துருகயிந்த
பந்துவராளியைப் பாடி.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

சநிபகவானேநீர்தான் சஞ்சலப்படவேசெய்தீர்
இனியொருகுறைவுமில்லை யின்னமும்தீங்கவேண்டாம்

கனிவுடன்மனமிரங்கிக் கருணையாயுரைத்தபோதே
மனமிகமகிழ்ச்சியானேன் வாதனையின்றுஞ்செய்வீர்.

வசனம்.

சரணஞ்சரணம் சுவாமி சநிபகவானே நீர் என்னைப்பட்டாதபா டுபடுத்திவைத்தீர் ஆகிலும் உம்மைக்கண்டபோதே என்துயரமெல்லாம் நீங்கிற்று தாங்கள் எப்போதும் என்னைவிட்டு நீங்கவேண்டியதே யில்லை இன்னம் வருத்தப்படுத்தாவீர் சுவாமி.

நளமகாராஜன்-சநிபகவானைத்துதித்தல்.

தரு-இம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

கடைக்கண்ணாலேயாகிலும்பாரையா-சநிபகவனருள்கலிதேவே
காகவாகநாதுயர் தீரையா

அனுபல்லவி.

விடமுண்டருளிய விமலன்றனைச்சுள்ளி
விநகோவிநமென் றவர்விற்றிட
ஸ்திரமாக விடுத்தநீரல்லோ(கடைக்)

சரணங்கள்.

அகில்புவனம்பரவு ரூபா-உலகில்
யாவரும்பணியும்பிர தாபா
மகிபனுனதசாதன் மகனைவருத்தியபூபா
மாபாதக ஞுகினேனையனே
நீபார்த்தருட் க்ருபைகருமெய்யனே(கடைக்கண்)
திசைமுகன்சிரசிலொன்றை யிழந்தான்-முன்பு
திருமுகன்வேங்கைமரமாய்ப் பிறந்தான்
வசிகரமாய்ப்புரந்தான் வளர்கண்ணாயிரமானான்
மாதாகிய சீதாதேவியை
காதகனால் சிறைவைத்தாயே(கடைக்கண்)
பதியுங்குறைந்ததத்தன் மாயம்-பொல்லா
வல்லரக்கன்மாண்டதுன்னு பாயம்
சதிசெய்விஸ்வாமித்திரனும் சத்தியரிச்சந்திரன்மிக
தானுண்டிடும் புவியைப்பறித்தாய்
வரினும்புக பூதகர்சிரித்தாய்(கடைக்க)



சநிபகவான்சொல்-விருத்தம்.

பச்சைமால்முகுந்தனைப்போல் பார்முழுதாண்டநேயா
அச்சுதனுழியேநதி யம்புவியாளுங்கோவே
கச்சணிதமயந்திப்பெண் கருத்தாமுன்கருத்தறிந்து
மெச்சினேன் நளவேந்தனே நீ வேண்டியவரத்தைக்கேளாய்.

வசனம்.

கேளும்நளமகாராஜனே உன்னை புஷ்கரனோடு சூதாடச்செய்வித்து நிடதநாட்டைப் பறித்ததும், உன் பெண்சாதியின் சேலைகளைப் பிரித்ததும், காட்டிலே உன்னை அரவங்கடிக்க உனக்கு வேறுருபமமைத்ததும், நீ இருதுபன்னனுக்குச் சாரதியாயிருக்கச் செய்ததும் நானல்லாமல் மற்றொருவரல்ல இப்போ உன்னுடைய தைரியத்தையும் உன்பெண்சாதியாகிய தமயந்தியின் கற்பையுங்கண்டு சந்தோஷித்தேன் இனி யாதொருகுறைவுமில்லை உனக்கு வேண்டியவரத்தைக்கேளும் நளமகாராஜனே.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

மந்திரமுனிவர்மிக்க வானுலகினிலேவாழ்வோர்
சந்திரசூரியருமிந்தத் தாரணிமனிதரெல்லாம்
சிந்தையில்நினைக்கப்பெற்ற நிஷகாலசுதனேகேளும்
எந்தனைநினைத்தபேரை யான்தொடர்வனைச்சொல்வீரே.

வசனம்.

கேளும் சந்திரசூரியர்முதல் தேவாதிதேவர்களுந் தங்கிருந்த ர்த்தனே இன்றுமுதல் அடியேன் நாமதேயத்தை யார் நினைக்கின்றார்களோ அவர்களைத் தொடர்வதில்லையென்று அடியேனுக்கு வரமளிக்கவேணும் சுவாமி.

சநிபகவான்சொல்-விருத்தம்.

அந்தமாய்மெய்யிருக்க அரவமும்விஷத்தைக்கக்க
இந்தநாழிகையிற்செய்தேனெழில்மிகுநிடதநாடா
சந்தானனேயுன்பேர் சொன்னவர்தம்மையெல்லாம்
சந்திரசூரியர்முன்பாக சத்தியமாயான்தொடேனே.

வசனம்.

கேளும் நளமகாராஜனே உன்னுடைய தேகம் பழையபடி யேயிருக்கக் கார்க்கோடகனைக்கொண்டு விஷத்தைக் கக்கச்செய்தேன்

இனி உன்னுடைய நாமதேயத்தை நினைப்பவர்களை சந்திரசூரியர்
களறிய சத்தியமாய்த்தொடேன் மகாராஜனே.

நளமகாராஜன்சொல்-விருத்தம்.

புல்லறிவினைவிலக்கிப் பூரணதத்தைச்சார்ந்த
வல்லவர்பணிந்துபோற்று மலரடிக்கன்பனாகி
நல்லவனெனும்பேர்பெற்றே னுன்முகன்செயலேயிந்த
எல்லையிலிருந்தோரென்போ லெவர்வரம்பெற்றாரையா.

வசனம்.

கேளும் சுவாமி சநிபகவானே சகலசாஸ்திரங்களையுமறிந்த நீ
வதில்லையைச்சார்ந்த பெரியோர்கள் துதிக்கும் தேவரீரது பாதாரவிந்
தத்திற்கு அடிமையாகிய யான்பெற்ற வரத்தைப்போல யார்பெற்று
ர் யார்பெறுவாரையா சுவாமி.

சநிபகவான்சொல்-விருத்தம்.

வெற்பெனும்புஜம்படைத்த வீரனேவிசித்திரமான
அற்புதவிதர்ப்பநாட்டுக் கதிபதிபுதல்வியந்த
சற்பினியுயர்ந்தமாது காதல்புத்திரர்களோடு
சொற்பெறுமுலகில்வாழ்வாய் சூரனேசெல்வேனப்பா.

வசனம்.

கேளும் நளமகாராஜனே நீ எப்போதும்போல பெண்சாதிபி
ள்ளைகளுடனேசேர்ந்து உனது நிடதநாட்டிற்குப்போய் அந்தபுஷ்
கரனிடத்தில் சூதாடி நவகண்டத்தையும் செயித்துக்கொண்டு சுக
மாகவாழ்ந்திரு நான்போய்வருகிறேன் மகாராஜனே.

நளமகாராஜன்சொல்-வசனம்.

அப்படியே போய்வாரும் சுவாமி.

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் சநிபகவானனவர் நளமகாராஜனுக்கு வர
கொடுத்து அங்கிருந்த தான்றிமரத்திலேறினவுடன் நளமகாராஜன்
இருதுபன்னனிடத்திற்குவந்து சொல்லுவதுகாண்க.

நளமகாராஜன்-இருதுபன்னனுக்குச்சொல்
விருத்தம்.

பாராருமகிபர்மெச்சப் பார்த்ததைநிமைக்குள்ளாக
ஆராய்ந்துசொல்லுமிந்த அருமையாமந்திரத்தை



நேராகவெனக்குரைத்தால் நிருபனேயசுவமந்திரம்
சீராகவுமக்குரைப்பேன் சீக்கிரமாயதைச்சொல்வீரே.

வசனம்.

கேளும் மகாராஜனே நீர் அந்ததான்றிமரத்தைப் பார்த்தவுட
னே அதன் இலை பூ காய் பழமுட்பட இத்தனையென்றுசொல்லிய ஆ
ச்சரியமான வித்தையை எனக்குரைப்பீராகில் நான் குதிரையினிரு
தயத்தையறியும்மந்திரத்தைஉமக்குத்தெரிவிக்கிறேன்மகாராஜனே.

இருதுபன்னன்-நளமகாராஜனுக்குச்சொல்
விருத்தம்.

அப்படிநானேநீசொல் அசுவமந்திரமுங்கற்றேன்
இப்புவிதனிலாராயு மெழில்மந்திரமுனக்களித்தேன்
செப்பருமுலகோர்மெச்சுந் தீரனேவிதர்ப்பதேசங்
கொப்பெனக்காணவேனுங் குதிரையைநடத்துவாயே.

வசனம்.

கேளும்வாகுவா நீசொல்லிய அஸ்வமந்திரத்தை நான்கற்றுக்
கொண்டேன் மரத்தைப்பார்த்தவுடனே இலைகள் இத்தனையென்று
சொல்லுகிறமந்திரத்தை உனக்குக் கற்றுக்கொடுத்தேன் இனி விதர்
ப்பதேசத்திற்குப்போக தேரைநடத்தும் வாகுவா.

நளமகாராஜன்-இருதுபன்னனுக்குச்சொல்
விருத்தம்.

தண்டுகளுலாவுதங்கத் தாமரைதடாகமிக்கு
வண்டுகளுவந்துமொய்க்கு மருவளர்சோலைதன்னைக்
கண்டவர்மெச்சுவார்கள் காதலாய்விதர்ப்பநாட்டில்
கொண்டுவந்துவிடுத்தேன் கோலுவாசலிதனையா.

வசனம்.

கேளும் மகாராஜனே தாமரைத் தடாகங்களையும் நந்தவனங்க
ளையுங்கடந்துவந்தோம் இதுதான் விதர்ப்பதேசம் இது வீமராஜனு
டைய மாளிகை தேரைநிறுத்தினேன் மகாராஜனே.

பொதுவிருத்தம்.

அரசனுந்தேரையோட்டி யதிர்த்திடவிருட்டிற்
பரிவுடன்சேரும்போது பாலவயான்சப்தங்கேட்டு

வருமிந்தத்தேரிலேநந்தன் மன்னனுரீவாரமற்போனுல்
சரியிதுகாலமென்று தமயந்திபுலம்புவாளே.

வசனம்.

இப்படி நளமகாராஜன் தேரை நடத்திவந்த சப்தத்தைக்கேட்டு தமயந்தியானவள் இந்த ரதத்தைநடத்திவந்தவர் என்கணவனுமி ராமற்போனுல் பிராணனைவிடுவேனென்று புலம்புவதுகாண்க.

தமயந்திபுலம்பல்.

இபதை ௯ம்-புன்னுகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

விதியேகொடும்விதியேயென்னைச் சதிசெய்திடலாமோ
பதியிழந்திவ்விதஞ்செய்திட கதிவரவுமாமோ
இதோவருந்தேரில்மதி வதனன்வாரவிடுமோ
அதிகதுயருறமோயிந்தத் ததியில்வாச்செயுமோ
வருடமொருமூன்றமெந்தன் மன்னர்பிரிந்தாரோ
பிரமனிந்தப்படியெழுதிப் பேதகஞ்செய்தாரோ
கன்மமென்னசெய்தேனே கலைகொள்ளவுமாச்சே
கன்மமில்லையோசதியன் வர்மமிப்படியாச்சே
கண்டமுழுதமாண்ட காவலன்மற்றொருவர்களை
அண்டிப்பணிவிடைகள்செய்து ஆச்சுதெங்கள்காலம்
பண்டுவினைசெய்தோமோயிப் பாடுபடலாமோ
அண்டர்புகழ்ராஜேந்திரன் அலைந்திடவுமாமோ
மன்னர்மன்னன்சாரதியாய் வரவும்நான்காண்பேனே
இன்னமெந்தனிச்சதியன் என்விடமாட்டானே
புன்னுகவராளிபாடி புலம்பிடவுந்தானே
கன்னிநான்பிறக்கவென்ன கருமஞ்செய்திட்டேனே

யொதுவிருத்தம்.

நளராஜன்தேரையோட்டி நகர்வந்துசேரவப்போ
மழமைசொல்லிக்கொண்டேக்கும் பாவையையின்றவீமன்
அறுமெயருதுபன்னன்பால் உடுந்தபேசிடவேவந்து
ஊர்மனதாகிநோந்து ரர்றவான்கூற்றமானே.



வசனம்.

அஃதெப்படியென்றால் தேர்வந்த அதிர்ச்சியைக்கண்ட தமயந்தி புலம்பிக்கொண்டிருக்கும்போது இருதுபன்னமகாராஜன் இர தத்தைவிட்டிறங்கி கொலுச்சபைக்குவந்து வீமராஜனைக்காண வீம ராஜன் புஷ்கரனுக்கு ஆசனங்கொடுத்து உட்காரச்சொல்லி சொல் லுவதுகாண்க.

வீமராஜன்-புஷ்கரனுக்குச்சொல்-விருத்தம்.

ஒருவருமெதிரில்லாம லோங்கிடும்யோத்திநாட்டை
அரசாட்சிசெய்யும்வேந்தே அடவியெல்லாங்கடந்து
விரைவாகநமதுதேசம் வேண்டிநீர்வந்ததேது
இருதுபன்னேந்திரபூபா லியம்பிடீரியம்பிடீரே.

வசனம்.

கேளும் இருதுபன்னமகாராஜனே நீர் அயோத்திநாட்டைவி ட்டு காடு-மலை-வனம்-வனந்திரங்களைக்கடந்து இவ்விடத்திற்குவந்த சங்கதி இன்னதென்று தெரியப்படுத்தும் அரசனே.

இருதுபன்னன்-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

நீதிலாமகிபரெல்லாந் திறையிடச்செங்கோலேந்தி
வேதவேதியரைக்காத்து மேதினிதன்னையாண்டு
ஆதிமூலத்தைப்போற்று மரசனேவிதர்ப்பநாட்டில்
காதலாய்த்தேவரீரைக் காண்பதாய்வந்தேனையா.

வசனம்.

கேளும் ராஜராஜாக்களும்பகுதிகட்ட நீதிதவறுமல் செங்கோ ல்செலுத்திவரும் மகாராஜனே தேவரீரைக்காணுதற்காக இவ்விடத் திற்குவந்தேனையா.

வீமராஜன்சொல்-வசனம்.

அப்படியா சந்தோஷம் சந்தோஷம் இருதுபன்னராஜனே.

வீமராஜன்-தமனுமியென்னுந் தனதுபுத்திரனுக்குச்சொல்

விருத்தம்.

அந்தமுமறிவுமிக்க ஆண்மையும்படைத்தமெந்தன்
மைந்தனேகேளாயிங்கு வந்திடுமிருதுபன்னற்கு

சிந்தையில்மகிழ்வுண்டாகத் திருமணையொன்றளித்து
சுந்தமாயமுதுபஞ்ச கச்சாயத்தோடளிப்பாய்.

வசனம்.

கேளுமப்பா ஜீவனுபி அயோத்தியிலிருந்துவந்த இருதுபன்ன ராஜரும் அவருடன்வந்தவருமிருக்க ஒரு அரண்மனைகொடுத்து போஜனமுதல் சுகந்த சந்தன புட்பதாம்பூலங்களும் குறைவில்லாமல் நடப்பியுமப்பா ஜீவனுபி.

ஜீவனுபி-இருதுபன்னனுக்குச்சொல்

விருத்தம்.

திருவளருலகில்மிக்க ஜெயம்பெறுமயோத்தியாளுந்
கருமனேயாயிருப்பதாகயிவ்விடுதிதந்தேன்
குறையிலாதனைத்துந்தேறிக் கோலமதாகப்பூட்டும்
பரியினைநடத்துகின்ற பாகுவன்கிடமிதையா.

வசனம்.

கேளும் அயோத்தியாபுரியையாளும் இருதுபன்னமகாராஜனே நீர் இந்த அரண்மனையில் வீற்றிரும் உம்முடையபாகனை இந்த அரண்மனையிலிருக்கச்சொல்லும் மகாராஜனே.

இருதுபன்னன்-நளமகாராஜனுக்குச்சொல்

விருத்தம்.

என்னகாண்வாகுவாகேளிவ்விடந்தமயந்திக்குச்
சொன்னரோவிவாகமென்று சுயம்வரம்நாட்டக்காணும்
இன்னதென்றறிவதாக யிவ்விடத்திற்சொல்வாரில்லை
நன்னயவிடுதிதன்னில் நாமும்வீற்றிருப்போம்வாராய்.

வசனம்.

கேளும் வாகுவா தமயந்திக்கு மறுவிவாகமென்று வேதியர் சொன்னாரோ என்ன இவ்விடத்தில் அரசர்கள் ஒருவராவது வரவில்லை சுயம்வரமும்நாட்டக்காணோம் இந்தசங்கதியை விசாரிப்போமென்றாலும் சொல்லுவாரில்லை இது என்னமோ சூதாகத்தோற்றுது நாம் போய் அந்தவிடுதியிலிருப்போம் வாரும் வாகுவா.

பொது-கவி.

காவெலாந்திரிந்துவந்த-கேடரும்நளவேன்தேவி
மேடையின்மீதிருந்து-நாடிகாணுமாசெய்வாளே.



வசனம்.

அஃதெப்படியென்றால் புஷ்கராஜன் ஓரறையிலும் நளமகாராஜன் ஓரறையிலு மிருக்கும்போது தமயந்தியானவள் தாதிக்குச்சொல்லுகிறவிதங்காண்க.

தமயந்தி-தாதிக்குச்சொல்-விருத்தம்.

ஜெகமெலாங்கொடுங்கோடன்னச் சேடனுநடுநடுங்க
இகலரசர்களொடுங்க எழுலகுங்குலுங்க
நகைமையாய்ப்பரிநடத்துஞ் சாரதியவரோவெந்தன்
அகமகிழ்கணவனுகு மறிந்துவந்துரைசெய்வீரோ.

வசனம்.

கேளும் என்னுயிர்க்குயிரான தோழிப்பெண்ணே இந்தபூமியைத் தாங்கும் ஆதிசேடனடுங்கவும், சத்துருக்களொடுங்கவும், அஸ்வத்தை நடத்த வல்லமையுடையவர் தமது நளமகாராஜனல்லாமல் மற்றொருவர் அவ்வளவு சாமர்த்தியமாய் நடத்தமாட்டார்கள் ஆதலால் நீபோய் அவரை இன்னாரென்று அறிந்துவருவாய் உத்தமகுணத்தைப்பெற்றதோழி.

தாதிசொல் வசனம்.

அப்படியேபோய் பார்த்துவருகிறேனம்மாதாயே.

தாதி-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

வீரியத்துடனேநங்க மேனாளுந்தேர்நடத்துஞ்
சாரதியும்மைப்பார்த்து சகலருங்களிக்கலுற்றார்
பாரினிற்புகழுமுந்தன் பராக்கிரமத்தொழிலிதானோ
சீருடனிதல்லால்வேறே செய்தொழிலுண்டோசொல்வாய்.

வசனம்.

கேளுமையாசுவாமி நீர் தேர்நடத்திய சாமர்த்தியத்தைக்கண்டு சகலரும் புகழலுற்றார். தேவரீருடைய இராச்சியமெது தாங்கள் செய்யுந்தொழில் இதுதானோவேறே ஏதாவதுண்டோ சொல்லுமையா சுவாமி.

நளமகாராஜன்-தாதிக்குச்சொல்-விருத்தம்.

விருப்பமதாகச்செய்யும் விவாகத்தைக்குறித்துவந்தின்
இருந்திடும்ருதுபன்னற்கு எழில்ரதபாகன்மேதும்

மன

நெருப்பிலாச்சமைப்பேன்பாலை நிலத்தினிற்புனலளிப்பேன்
உரைப்பர்வாகுவனென்றென்னை யுலகினுள்ளவர்கள்பெண்ணே.

வசனம்.

கேளும் தாதிப்பெண்ணே தமயந்திக்கு மறுவிவாகமென்று கேள்விப்பட்டுவந்திருக்கும் இருதுபன்னமகாராஜனுக்குச் சாரதியாயிருக்கிறேன், அதல்லாமலும் நெருப்பில்லாமல் அமுதுசமைப்பேன், பாலைநிலத்தில் தண்ணீர்கொடுப்பேன் இப்படிப்பட்ட அதிசயமான தொழில் இன்னம் அனேகஞ்செய்வேன் என்பெயர் வாகுவனென்று சொல்லுவார்கள் பெண்ணே.

தாதி-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

நிருபரில்வலுமைபெற்ற நிடதநாட்டரசன்றன்னால்
ஒருவருமறியவொண்ணா வுயர்ந்தமந்திரத்தைக்கற்றீர்
தருமனேஅவர்தானெந்தத் தலத்தினிலிருக்கிறார்நீர்
அறிவீரோதெரிந்திருந்தா லகத்தியஞ்சொல்லுமையா.

வசனம்.

கேளுமையா சுவாமி தாங்கள்சொல்லிய தொழிலெல்லாம் நிடதநாட்டையாளும் நளமகாராஜரல்லாமல் மற்றொருவரால்செய்ய முடியாது தேவரீர் நெருப்பில்லாமற் சமைப்பேனென்றும், பாலைநிலத்தில் மதுரமான ஜலங் கொடுப்பேனென்றுஞ் சொல்வதால் இந்த வித்தைகளை நீர், அந்த நளமகாராஜரிடத்தில் கற்றுக்கொண்டிருப்பீர் அவர் எவ்விடத்திலிருக்கிறார் சொல்லுமையா சுவாமி.

நளமகாராஜன்-தாதிக்குச்சொல்-விருத்தம்.

நளமகாராஜனொன்றாய் நமக்கவருறாக்கலில்லை
உளங்களித்தவரிருக்கு முறைநான்கண்டதில்லை
வளங்கெழுமுலகிற்கற்பா மாதர்நாயகனைநீங்கி
இளமைமதனால்வேறே இராஜனைத்தேடலாமோ.

வசனம்.

கேளும்பெண்ணே தாதி நான் நளமகாராஜனையு மறியமாட்டேன் அவரிடத்தில் மந்திரமுங் கற்றுக்கொள்ளவில்லை, அவரிருப்பிடமும் எனக்குத்தெரியாது உலகத்திலே கற்புள்ளபெண்கள் விதிவசத்தினால் தனது நாயகனைப்பிரிந்தால் மற்றொருவனைச் சேரநினைத்து மறுவிவாகத்திற் இச்சிப்பார்களோ, சொல்லும்பெண்ணே.



75

தாதி-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

பருதிகுழுலகிற்பாலைநிலத்தினிற்புனலளிப்பேன்
நெருப்பிலாச்சமைப்பேன்திவ்யநிருபர்களெல்லாமெச்சும்
இருவளர்ருதுபன்னற்குத் தேர்விடும்பாகனுமென்
றுரைத்தனரவருரைத்த துண்மையாயுரைப்பேனம்மா.

வசனம்.

கேளுமம்மா தமயந்திதாயே இரதசாரதியாய்வந்தவரிடத்திற்குப்போய் நீர்யார் உம்முடையதொழில்யாது உமதுபெயரென்னவென்று கேட்டேன் அதற்கவர்சொன்னது நான் இவ்விடத்தில் கலியாணத்தைக்குறித்துவந்திருக்கும் இருதுபன்ன மகாராஜனுக்குச் சாரதி-என்பேர்-வாகுவன்-அனலில்லாமற்சமைப்பேன்- பாலைநிலத்தில் மதுரமான ஜலங்கொடுப்பேனென்றுஞ் சொன்னதல்லாமல் இன்னம் அவர்சொன்னதை வியாபகமாகக் கேளுமம்மாதாயே.

இதுவும்-தாதிசொல்-விருத்தம்.

நிடதநாட்டரசனல்லால் நிருபர்கள்மெச்சவித்தப்
படியிதைசெய்வாரில்லை பார்த்தவரெங்கேயென்றேன்
உடனவரறியேனென்று உரைத்தனர்கற்புள்ளோர்கள்
திடமுள நாதனீக்கிற் செய்மணமாகாதென்றார்.

வசனம்.

கேளுமம்மா தாயே நான் இப்படிப்பட்டவித்தை நளமகாராஜருக்கல்லாமல் மற்றொருவருக்குத் தெரியாது நீர் அவரிடத்தில் இந்தவித்தைகளைக் கற்றிருப்பீர் அவரெங்கேயென்றுகேட்டேன், உடனே அவர் நான் அந்தநளமகாராஜரிடத்தில் வித்தையுங் கற்கவில்லை அவரையுமறியமாட்டேன் தமயந்தியென்பவள் தெய்வசாட்சியாகக் கலியாணஞ்செய்த தன்னுடைய நாயகன் விதிவசத்தினால் பிரிந்திருக்கும்போது வேறேயொருவனையிச்சித்து மறுவிவாகத்திற்குச்சம்மதிப்பது கற்புள்ளபெண்களுக்கு அழகுதானோவென்று சொன்னாரம்மாதாயே.

தமயந்தி-தாதிக்குச்சொல்-விருத்தம்.

அப்படியானுவின்ன மறிகுவோம்நானுனக்குச்
செப்பியபடியேசெய்நீ செறியபொற்பாத்திரத்தில்

இப்பவே அரிசிகொண்டு ஏவிதீயில்லாமற்சோற்
எப்படிசமைக்கின்றாரோ யிருந்துபார்த்தெனக்குரைப்பாய்.

வசனம்.

கேளாய் தோழி நீ ஒரு சிறியபொற்பாத்திரத்திலே அரிசிபோட்டு அவரிடத்திற்கொண்டுபோய் கொடுத்து பக்கத்திலிருந்து அவர் நெருப்பில்லாமற் சமைப்பதைப் பார்த்துவந்துசொல்லும் - தோழிப்பெண்ணே.

தாதிசொல்-வசனம்.

அப்படியே அரிசிகொண்டுபோய் கொடுத்து அவர்சமைப்பதைப்பார்த்துவருகிறேனம்மா தாயே.

தாதி-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

தாயகுசெய்சதியனாலே மனமிகவருந்துகின்ற
தீயிலாச்சமயல்செய்யுந் திறனும்நலனைப்போல
ஞாயமாயிக்குவந்த நாதனே அரிசிகொண்டு
போய்சமைப்பதிலேநீசெய்தால் புசித்தெந்தன்பசியைத்தீர்ப்பேன்.

வசனம்.

கேளும் ரதபாகரே நீர் சதிபகவானுடையகொடுமையால் சஞ்சலப்பட்டு எவ்விடத்திலேயாயிருக்கும் எங்கள் நளமகாராஜனைப்போல நெருப்பில்லாமற் சமைப்பேனென்றும், பாலைநிலத்தில் ஜலந்தருவேனென்றுஞ் சொன்னீரே இதோ பொற்பாத்திரத்தில் அரிசிகொண்டுவந்தேன் சமைத்துக்கொடுத்தால் சாப்பிட்டுப் பசிதணிவேனையா சுவாமி.

நளமகாராஜன்-தாதிக்குச்சொல்-விருத்தம்.

சமைப்பதுவதுதோழி தாருமப்பாத்திரத்தை
இம்பபொழுதினிலேகாண்பா யெந்தன்கைபட்டபோதே
தமயந்திபுசிப்பதற்குத் தருவாயிச்சணமேகொண்டு
திமரசமாயிருக்கும் சாப்பிட்டுத்திரியலாமே.

வசனம்.

கேளும்பெண்ணே தாதி சமைப்பதென்னவெகுநேரமா அந்தப்பாத்திரத்தை என்கையிற்கொடு இதோபார்த்தைபாத்தன்கை பட்ட



வுடனே இனிப்பான சமையலாச்சுது இதைக்கொண்டுபோய் தமயந்திக்குக் கொடுத்து நீயுஞ்சாப்பிடுவாய்பெண்ணே.

தாதிசொல்-வசனம்.

இதோகொண்டுபோய் கொடுக்கிறேனையா சுவாமி.

தாதி-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

ஏழுதவொண்ணுதசித்திர எத்திறைதீயளித்த
பழுதிலாவரிசிதன்னைப் பாகனிடத்திற்றந்தேன்
மழுவொடுஜலமில்லாமல் மாயமாய்சமைத்தவைத்தார்
அழிவிலாவிசித்திரத்தை யாருடன்சொல்வேனம்மா.

வசனம்.

கேளும்சித்திரப்பதுமையையொத்ததமயந்திதாயே நீசொன்னபடியே நான் பொற்பாத்திரத்திலே அரிசியைப்போட்டுக் கொண்டுபோய் அந்த வாகுவரிடத்திற்கொடுத்தேன் அவர்தொட்டமாத்திரத்திலே நெருப்பும் நீருமில்லாமல் மகாருசியான சாதமாச்சுது அதை உனக்குக் கொடுக்கச்சொல்லி கொடுத்தார் பாருமம்மா தாயே.

தமயந்தி தாதிக்குச்சொல்-விருத்தம்.

அன்னமேதேனேயெந்த னருயிர்தோழிகேளாய்
பின்னையும்நலமேயெந்தன் பிராணனாயகரோயாகும்
மன்னவர்காணவெந்தன் மக்களையழைத்துப்போய்நீ
முன்னில்விட்டவருரைக்கு மொழிதனையறிந்துவாராய்.

வசனம்.

கேளும் என்னுசைக்குகந்ததோழி நீசொல்லும் அதிசயத்தைப்பார்த்தால் அவரே என்பிராணனாயகராகத்தோற்றுது நீ எம்பிள்ளையையும் பெண்ணையும் அழைத்துக்கொண்டுபோய் அவருக்குமுன்னேவிட்டு அவர்சொல்லும் வசனத்தை சீக்கிரமாகவந்துசொல்லும் தோழிப்பெண்ணே.

தாதிசொல்-வசனம்.

இதோகொண்டுபோய் விடுகிறேனம்மாதாயே.

பொதுவிருத்தம்.

ரதிப்பெண்ணுமந்தத் தமயந்திமாதுபெற்ற
காழல்சேர்மக்கள் தம்மைக் கைதனிற்பிடித்துக்கொண்டு

தீவிபாயாசுசெய்த நிபுணன்பால்விடுத்துநிற்க
கோவிலா நளராஜேந்திரன் கூறியேபுலம்புவானே.

வசனம்.

அப்படிப்பட்டியென்றால் தமயந்தியின்சொற்படியே தேடியா ளைன் பிள்ளையையும் பெண்ணையும் அழைத்துக்கொண்டுவந்த வி திவசத்தால் ரூபமாறி நன்னைப்பணியும் இருதுபன்னனிடத்தில் சார தியாயிருக்கும் நளமகாராஜனை பிரிவிட ஐந்துவருஷமாகப்பிரிந்தி ருந்த நளமகாராஜன் புத்திரனையும் குமாரத்தியையுங்கண்டு புலம் புவதுகாண்க.

நளமகாராஜன்-புலம்பல்.

தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

ஐயையோயெந்தனருமைப்புதல்வரே ஆலையவும்விதியோ-நீங்கள்
அலையவும்விதியோ.

அநுபல்லவி.

வையமெல்லாம்திறங்குன்றச் செய்தவைத்துநின்ற
வேதன்செயல்தனை யேதுமறியேன் (ஐயை)

சரணங்கள்.

அன்பத்தாறுதேசமும் ஆண்டிருதாடியே
அத்தியாயமாய்நகர் தேற்க
இன்பம்பொருந்திய மனையாளைமக்களை
யான்வினையால்விட்டு நீக்க
என்தாளிற்பணிகின்ற அரசற்கேவலாகி
என்கவரவமெல்லாம் போக்க
முன்ஜன்மத்தினிற்செய்த கர்மவர்த்திப்படி
முழுதுமவதியுங் டாக்க (ஐயை)
காட்டகியென்று நாடுநகர்விட்டுக்
கலங்கிவருகுமப் போது
தேடியேஅன்னம்வந்தென் னையிறைதன்னை
சேர்த்துக்கொண்டுசென்ற தேது
பேடைமயிலாள்தன் ஆடையிலொருதுண்டை
வெட்டியுடன்கட்டிய தே



77

கோடுசெய்சநியனால் வாடிட்லாச்சுதே
கோலம்வந்ததேதமக் கேது (ஐயை)
மைந்தரிருவரும் தந்தைதாயெங்கேயென்று
மனம்வருந்தித்தேடி வீரோ
எந்தன்வயிற்றினிற் பிறக்கும்போதேவுங்களுக்
கெழுதிவைத்தபிரம னோ
சிந்தைதளர்ந்துமுகாரி அடதாளத்தில்
தினமும்பாடிட்சிவ னோ
இந்தப்படிகற்பனை செய்ததறியேனுன்
இன்னமுமென்னசெய் வாரோ (ஐயை)

இதவம்-நளமகாராஜன்புலம்பல்.

விருத்தம்.

தெய்வமேதவஞ்செய்தின்ற சேயையிவ்வகையதாகச்
செய்வதாய்நினைத்திருந்த செய்கையையறிகிலேனே
ஐயனேயசுரர்தம்மை யழித்ததேவரைப்புரந்த
மெய்யனே திருமாலேயிவ் விதிக்குநானென்னசெய்வேன்.

வசனம்.

ஹரி ஹரி நாராயணா இப்படி என்னையொருவழி என் பெண் சாதியையொருவழி பிள்ளையையொருவழியாகப்பிரிக்க எத்தனை நா ளாய் காத்திருந்தாயோ அடியேன் இதற்கென்னசெய்வேன் பாகவ தர்டனிருந்து துதிக்கும் பரந்தாமா.

திபதை-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அம்புவிமுழுதுமென் சுதனேநீயாள்வாயென்
றகமகிழ்ந்திருந்தேனே மகனே
அம்புவிமுழுதும்புகழ் காளைவிட்டேனே
அதற்கென்னசெய்வேனடா மகனே
மாநிலத்திலப்போரும் மைந்தனைப்பிரியாரென்
மனமுந்துணிந்ததே மகனே

அருமறைதனுர்வித்தை ஆசானுஞ்சொல்லிக்க
ஆசையாயிருந்தேனே மகனே
மதலைச்சொல்நீபேச காதினுற்கேளாத
மடலாகினேனே மகனே
புதல்வனைப்பெறவனம் போய்தவஞ்செய்கின்றார்
பெற்றுநான்பிரிந்தேனே மகனே
செந்தாமரைகமலில் சிறுசதங்கைக்கொஞ்ச
செவியிற்கேளாதிருந்தேன் மகனே
சந்தைவீதிதேடி சாரியுலாவிவந்தே
தகுந்ததைக்கேளாயோ மகனே
தன்வீடிழந்தபெண் தாய்வீடுவந்தபின்
சந்தோஷமானாயோ மகனே
பின்னொருவழிதேடி போகாமலுன்தாயார்
பெற்றார்வீடடைந்தாளே மகனே
அன்பானநங்கையோ உனதின்பாலன்னம்
அருந்தியிருந்தாயோ மகனே
பொன்னாரம்பணி போட்டபாட்டனும்மை
போஷிக்கயிருந்தீரோ மகனே
கந்தமூலாதிபழங் கையிற்கொடுத்தன்பை
காட்டிவளர்த்தாரோ மகனே
சந்திரகுலம்விளங்கத் தக்கதாயரிமனதி
தைரியமளித்தாரோ மகனே
அந்தாத்தமாருமிவ்வந்தன்னைவாழ்த்தவும்
அரசாளக்கண்பேனோ மகனே
சிந்தைதளர்ந்துநான் நிலாம்புரிசொல்வதை
திருமாலறியாரோ மகனே

பொதுவசனம்.

இப்படி நளமகாராஜன் புலம்புவதைக்கண்ட சாதியானவன் ம
ஐம்பலுதத்த தமயந்தியிடத்திற்குவந்து சொல்லுகிறவிதங்காண்க.



7

சாதி-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

நீயிலாச்சமையல்செய்த தேர்ப்பாகர்க்கெதிராயுந்தன்
சேயரைக்கொடுபோய்விட்ட தெப்படியுரைப்பேனெந்தன்
தாயாரேகேளுமம்மா தவித்தவர்புலம்பலுற்றார்
வாயினுலுரைக்கவொண்ணு மழையெனவிழிநீராமே.

வசனம்.

கேளுமம்மா தமயந்தித்தாயே நமது பிள்ளைகளைக் கண்டவுட னே அந்ததேர்ப்பாகர் புலம்பினதை நானென்னென்று சொல்லு வேன் அவர்விழிகளிலிருந்து புறப்பட்டநீர் ஆறுபோடுதம்மாதாயே

தமயந்தி-தனதுதாயாராகிய-தாருகாசனிக்குச்சொல்

விருத்தம்.

எந்தனைப்பெற்றதாயே யெழில்ருதுபர்ணருக்கு
விந்தையாய்த்தேர்நடத்தி மேன்மையாய்வந்தவேந்தன்
சுந்தமாந்தார்புனைந்த கணவனாகுமெந்தன்
தந்தையார்தனக்குரைத்து தருவிக்கவேணுமம்மா.

வசனம்.

கேளுமம்மா என்னைப்பெற்றதாயே அயோத்தியிலிருந்துவந்த இருதுபர்ணமகாராஜனுக்குச் சாரதியாயிருப்பவர் என்புருஷனைத் தேற்றுது ஆகையால் என்தகப்பனாரிடத்திற்சொல்லி அவரை அழை ப்பிக்கவேணுமம்மா தாயே.

தாருகாசனி-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

அரசருக்கரசேயெந்தனுருயிர்த்தேவேகேளீர்
தருமனும்ருதுபர்ணற்குச் சாரதியாகவந்தோர்
மருமகனாகுமுன்றன் மகள்தமயந்திசொன்னாள்
திருவரராசேயிப்போ சீக்கிரமாய்வருவிப்பீரோ.

வசனம்.

கேளும்என்பிராணநாயகரே தேவரீர்மருமகனாகிய நளமகாரா ஜன் இருதுபர்ணனுக்குச் சாரதியாய்வந்திருக்கிறானென்று நமது கு மாரத்திசொன்னாள் ஆகையால் அவனையழைப்பிக்கவேணும்சுவாமி

வீமராஜன்-தாருகாசனிக்குச்சொல்-விருத்தம்.

நன்னடையணிந்துபோற்றும் க்ஷத்திரியனயோத்தியாளும்
மன்னன்சாரதியதாக வந்தவராகையாலே

என்னெதிர்வருவதற்கு இசைந்திராமகட்குச்சொல்லி
தன்னுயிர்தாதியால் தருவிக்கவேணும்பெண்ணே.

வசனம்.

கேளும்பெண்ணே தாருகாசனி தன்னைப்பணிவாளை நான் பவித்திரமாகப்போல இருதுபர்ணராஜனுக்கு நமது மருமகன் சாரதியாகவந்திருந்தால் என்னெதிரில்வருவதற்குவெட்கப்படுவார் ஆதலால் நீ நமதுகுமாரத்தியினருகிலிருக்கும் தாதிகளையனுப்பி வரவழைப்பாய்பெண்ணே.

தாருகாசனி-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

என்னருமகளேநானுன்னையீன்றவருணர்த்தவார்த்தை
தன்னடிபணிவேந்தற்குச் சாரதியாய்வந்த
மன்னவன்றனதுமுன்பு வரவெட்கப்படுவாரென்றார்
உன்னிடதாதிமார்கள் உபாயமாய்வருவிப்பாயே.

வசனம்.

கேளும் என்னருமைமகளே நீ சொல்லியதுபோல உனது தந்தைக்குச்சொன்னேன் அவர் தன்னைப்பணியுமரசனுக்குச் சாரதியாகவந்திருந்தால் என்னெதிரில்வர வெட்கப்படுவார் நீங்கள் தாதிகளையனுப்பி அழைப்பியுங்களென்று சொன்னாரம்மா மகளே.

தமயந்தி தாதிக்குச்சொல்-விருத்தம்.

அன்னமெனுந்தோழிகேளா யரசனாரிடத்திற்சென்று
மனமகிழ்வாகவும்மை யாமழைத்தாரென்று
இனிமையாய்வார்க்குச்சொல்லி யெண்மனக்களிப்பதாக
தனதுடனழைத்துவந்தால் சகலபூஷணமுந்தாரேன்.

வசனம்.

கேளும் அன்னநடைப்பழிக்க நடையையுடைய தாதி நீ அந்தவாகுவரிடத்திற்சென்று உம்மை எங்களரசனழைத்தாரென்றுசொல்லி சீக்கிரமாக அவரை யழைத்துவந்தால் உனக்கு வெகுமதிகொடுப்பேன் பெண்ணே.

தோழிசொல்-வசனம்.

இதோ அழைத்துவருகிறேனம்மாதாயே.



79

தாதி நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

ருதுபன்னராஜனுக்கு நட்பமாய்த்தேரையோட்டி
அதிசீர்த்தியதனைந்த ஐயனேவீமராஜன்
பதிமுகம்போன்றவும்மை வரவழைத்திட்டாரையா
இதுவேளைவிரைவுசெய்து எழுந்துநீர்வருகுவீரே.

வசனம்.

கேளுமையா சுவாமி உம்மையெங்களரசராகியவீமராஜர் அழைத்துவரச்சொன்னார் தயவுசெய்து வாருமையா சுவாமி.

நளமகாராஜன்-தாதிக்குச்சொல்-விருத்தம்.

மன்னனாம்வீமராஜன் மனப்புளகிதமதாய
என்னையேயழைத்தாராயின் மேல்வரவேணுமங்கே
சொன்னவுன்மொழிப்படிக்கு சுறுக்கிலேவருவேன்போய்
இந்திலமதிக்குமுந்தன் னிராஜனுக்குரைசெய்வாயே.

வசனம்.

கேளும் தாதிப்பெண்ணே உங்களரசராகிய வீமராஜர் என்னையேயழைத்தார் நான் அவரிடத்திற்குவருவதென்னத்திற்கு ஆகிலும் நீயழைப்பதால் இதோவருகிறேன் முன்னேநடப்பாய் உத்தமகுணத்தைப்பெற்றதாதி.

தாதி தமயந்திக்குச்சொல்-வசனம்.

கேளுமம்மா தாயே தமயந்தி உன்னுத்தரவின்படியே இதோ அழைத்துவந்தேனம்மா தாயே.

தமயந்தி-நளமகாராஜனுக்குச்சொல்-கொச்சகம்.

மன்னவர்கள்போற்றும் மகாராஜனேயடியாள்
உன்னிருபாதத்தைவிட்டு ஒருகணமேனும்பிரியா
கன்னியெனையத்தக் காட்டிலேதனித்துவிட
யென்னபிழைசெய்தேன் ஏந்திழையாளுமக்கே.

வசனம்.

சரணஞ்சரணம் எம்பிரானேயுபகா நான்தேவரீருடையபாதத்தைவிட்டு ஒருக்ஷணநேரமும் பிரியாதிருக்க என்னை அந்தக்காட்டில் என்னகுற்றஞ்செய்தேனென்று நித்திரையில் தனியேவிட்டுப்பிரிந்துபோனீர் சுவாமி.

தமயந்திசொல்-தரு.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னமோசஞ்செய்தீரையா-என்னைகாட்டினில்
ஏன்விடுத்துப் போனீரையா.

அனுபல்லவி.

மன்னவாவுன் மனமிரங்காதென்ன
வர்மம்விட்டுநீர் கிருபைவையும்
தர்மமல்லவிது தயவுசெய்யும் (என்ன)

சரணங்கள்.

சநியன்கொடுமையென்று தையலைக்காட்டினில்
தனித்துவிடுவாருண்டோ தயங்கியழுதிடவே
இனியிந்தவுலகத்தி லிருப்பாரோவுமைபோல்
என்னமாய்த்துணிந்தீரோ யென்னைவிட்டகலவே
தனித்துவனத்தினி லொருத்தியழுதுகொண்
டினத்தைப்பிரிந்தமான் போலும்
தயங்கியேமன மயங்கலாச்சுதே
சாமிநீர்செய்த தாலும் (என்ன)

பிள்ளைகளைமறந்து பேதையெனைப்பிரிந்து
பெருமானிப்படிபோக லாச்சுதேகாலம்
எள்ளளவுமன மிரங்காமலெங்களை
இதுமட்டுந்தேடாத தென்னகோலம்
தன்னையெனவெண்ணி தள்ளிவிடவும்நீர்
மெள்ளத்தப்பியே போக
சாமிநானுனைத் தேடிவாடியே
தையல்மனமது நோக (என்ன)

நாட்டையிழந்துகாட்டை நாடிவந்தவிடத்தில்
நாதியில்லாமலென்னை நாயகாபிரிந்தீரே
காட்டில்தனித்திருக்க மாட்டாளென்றேயுமக்கு
கனிவுசற்றில்லாதென்ன காரணமறந்தீரே
வாட்டமாய்மன மேவும்புன்னாகவ
ராளிபாடுவ தாக
வுந்தேயென்சிந்தைநொந்து
மகிழ்ச்சியில்லாய் போக (என்ன)



தமயந்தி நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

எப்படிநடுவனத்தி லெந்தனைத்தனியேவிட்டு
எப்படிநடந்தீர்சித்த மெப்படிதுணிந்ததோநான்
எப்படிரூபமாறி யிருப்பதுங்காணலானேன்
எப்படிபிராணநாதா யிவ்விதிபறிகிலேனே.

வசனம்.

கேளும் என் பிராணநாயகா இப்படியும்நடுக்காட்டில்விட்டுப் பிரிவாருண்டோ என்னைவிட்டுப்பிரிய உமக்கு எப்படி மனந்துணிந்தது உமதுரூபமாறி இந்தவேஷமாயிருப்பதையும் என்கண்ணுற்காணலாச்சுதோ பிராணநாயகா.

நளமகாராஜன்-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

கானகந்தனிலேநீங்க கருத்ததுதுணிந்ததந்த
வானவர்புகழ்கலியின் மாய்கையினாலேபெண்ணே
மாநிலந்தன்னிலேசம் வலையழுக்காடைபூண்ட
தேனிந்தவடிவுகண்டே னினியென்னசெய்வேன்பெண்ணே.

வசனம்.

கேளுப்பெண்ணே தமயந்தி அந்தநெருங்கியகாட்டில் உன்னை அர்த்தராத்திரியில் விட்டுப்பிரிய மனந்துணிந்தது சநிபகவான் செய்த கொடுமையினால், இப்போது அந்தபகவான் மனமிரங்கி என்னைவிட்டுநீங்க நானும்வந்துசேர்ந்தேன் நீ இப்படி வடிவுகுலைந்து அழுக்காடையை யுடுத்திக்கொண்டிருப்பானேன் பெண்ணே.

தமயந்திபுலம்பல்.

தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

பாவியிவ்வுருகாணவோமனந்துணிந்தாய்
படிவராப்போய் பணிந்தாய்

அனுபல்லவி.

தேவர்கொடுத்தவர மாவதிலைத்துப்பொய்யோ
ஆவியெழுகதுபோ லனலாயுருகுதையோ(பாவி)

சரணங்கள்.

தங்கப்பிரகாசமுகம் போச்சோ-முடியணிந்த
தலையிற்சுல்லாவு மாச்சோ

சிக்கர் நரிபருகில் சேர்ந்தாற்போலநீத்தீரோ
செங்கோல்பிடிக்குங்கையில் சவுக்கொன்றைப்பிடித்தீரோ (பா)

குண்ணெருபாட்டை கண்டதும்-பிரியயெண்ணம்
கொண்டுன்மனது விண்டதும்
அன்டையில்படுத்திருந்து அசந்தநித்திரையென்று
அடவியிற்பிரிந்தெனைக் கடந்திரல்லவோ அன்று (பாவி)

விதிப்பயெல்லுவ தருமை-சிறுமையெல்லாம்
வேணதல்லவோ பெருமை
நதியவிபான்காண நப்புவிசெந்தன்சொல்லே
நினைந்தபேர்களுக்கொரு நாளுமீரமில்லை (பாவி)

நளமகாராஜன்-தமயந்திக்குச்சொல்-கலித்துறை.

சதியன்பிடித்தன்னைக் காட்டிற்பிரிந்து தயங்கிடவும்
மனைப்பொருத்தவாடி தேசந்திரிந்தனன் வாதையதாய்
கலிபுகுந்ததனுக் கில்லாமல்வேறுகல் யாணஞ்செய்ய
நினைத்துக்கொண்டது நேர்த்தியிதுவெகு நேர்த்தியன்றோ.

வசனம்.

கேளும்பெண்ணே தமயந்தி நான் உன்னை காட்டில்விட்டுப்பிரிந்தபோனது சதியன்செய்தகொடுமையாலல்லாமல் என்னுடைய புத்தியினாலல்ல அப்படியிருக்க நீ வேறுவிவாகத்திற்குச் சம்மதித்தது என்ன நீதி சொல்லும்பெண்ணே.

தமயந்தி-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

பிரியமெனொருமையாகப் பிராணனென்றுயிருந்தும்
அறியாமல்மனஞ்சோதித்து அரசரோசொல்லலாமோ
தெரியாதோமறுவிவாகஞ் செய்வேனோஅறிவில்லாத
சிறியானோஅடியாள்தன்னைச் சினந்தியாரோசுவாமி.

வசனம்.

கேளும் என்பிராணநாயகா நான் உம்மைப்பிரியாமல் உடலினம் உயிரொன்றுமாயிருந்ததை பரமேஸ்வரா அறியாரோ நானென்ன சிறுபெண்ணோ எனக்குப் புத்தியில்லையா மறுவிவாகத்திற்கு



சைந்தேனென்று தாங்கள் நிச்சயித்து இப்படிப்பட்ட பரியாசவார்த்தைசொல்லலாமோ சுவாமி

இதுவும்-தமயந்திசொல்-விருத்தம்.

நிதில அயோத்திநாட்டில் தேவரிருப்பதாக
பெதினியெல்லாம்போற்றும் வேதியர்வந்துரைத்தார்
ஆதலாற்கல்யாணவோலை யனுப்பினாலருவீரென்று
நாதனே நினைத்தேனிதை தப்புவிருண்டையாக.

வசனம்.

கேளும் என்பிராணநாதா தேவரைக்கண்டுபிடிக்கும்படி ஒரு வேதியனையனுப்பினேன் அவர் அயோத்திநகரத்தையாளும் இருதுபன்னமகாராஜனிடத்தில் தாங்கள் சாரதியாயிருப்பதாகச்சொன்னார் ஆதலால் தங்களை இவ்விடத்திற்கழைப்பிக்கவேண்டி இருதுபன்னமகாராஜனுக்கு முகூர்த்தவோலையெழுதி யனுப்பினேன், தேவரீர் சந்தேகிக்காமல் எளியாள்மீது கிருபைவைத்து தமது பழையருபத்தைக்காண்பியும் சுவாமி.

பொதுவிருத்தம்.

அமரர்கள்போற்றுகின்ற ஆகாயவாணிசொல்லுவாள்
தமயந்தி கற்பைப்போல தரணியிலொருவர்க்குண்டோ
இமைப்பொழுதினிற்குள்ளேயுன் னெழில்வடிவினைக்காட்டென்ன
சமையமேநளராஜேந்திரன் றன்வடிவினைக்காண்பித்தான்.

வசனம்.

அஃதெப்படியென்றால் தமயந்தி இவ்விதமாகச்சொல்லும்போது ஆகாயவாணி ஓநளமகாராஜனே இந்த தமயந்தியைப்போல கற்புள்ளபெண்கள் உலகத்திலுண்டோ நீர் சந்தேகிக்கவேண்டாம் உமது பழையருபத்தைக் காண்பியுமென்றுசொல்ல நளமகாராஜன் சந்தோஷித்து தனக்கு வாசுகிகொடுத்த வஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு தனது பழையருபத்தைக் காண்பித்தான் என்பதாம்.

தமயந்தி-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

என்னுயிர்த்துணைவரான என்பிராணநாதாபோற்றி
உன்னைவிட்டிந்நாள்மட்டு முயிருடன்வாழ்ந்ததற்கும்
மன்னித்துக்கிருபைசெய்து மனத்தினிற்கோபந்நீக்கி
முன்னைப்போல்நீரிருக்க முழுவதுமுமைப்பணிந்தேன்.

வசனம்.

சரணஞ்சரணம் என்பிராணநாயகா நான் தேவரீரைப்பிரிந்து இத்தனைநாள் உயிரோடிருந்திருந்ததை மன்னித்து என்னைரட்சியும் பிராணநாயகா.

நளமகாராஜன்-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

தைபலர்தனித்திரைந்த தமயந்திப்பெண்ணேகேளாய்
வையகமிழந்தபின்பு வனந்தனில்விருந்திடாமல்
செய்தனர்சநியனுருந்தீமையாற்பிரிந்திருந்தோம்
உய்வோம்நாமினியஞ்சாதே உவந்திருப்பாயென்கண்ணே.

வசனம்.

கேளும்பெண்ணே தமயந்தி நாம் நமதுதேசத்தையிழந்து காட்டிற்குப்போனவிடத்தில் ஒருமையாயிராமல் சநியன்செய்த கொடுமையினால் பிரிந்துபோனோம், நீ பயப்படாதே இனி நமக்கு நல்லகாலம்பிறந்தது சுகப்படுவோம்பெண்ணே.

வீமராஜன்-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னர்மன்னவனேவாழி மகுடாபிஷேகாவாழி
கன்னல்வில்மதனுவாழி கனகபூஷணனேவாழி
மின்னிடைதமயந்தியும் மேதினியோரும்போற்றும்
என்மருமகனே நீபுமேத்நாளும்வாழிவாழி.

இதுவும்-வீமராஜன்சொல்-விருத்தம்.

நவகண்டமாளுமன்னா நான்பெற்றபுதல்விதன்னை
பிவன்செயற்படிபிரிந்தீர் நீங்கினிவாராதிந்த
புவனத்தையாண்டுவந்தன் புத்திரருடனேகூடி
கவனமென்பதைவிடுத்துக் கலக்கமற்றிருப்பீர்நீரே.

வசனம்.

கேளும் என் ஆசைமருமகனே உனக்குத் துன்பம்வந்தபோது உன்மனையாளோடு இவிடத்திற்குவந்து சுகித்திராமல் விதிவசத்தினால் காட்டிற்குப்போய் மனையாளைப்பிரிந்து உனக்குப் பகுதிகட்டிவந்த இருதுபன்னமகாராஜனுக்குச் சாரதியாயுப் படவேண்டிய கருமத்தைப் பட்டேதுலைக்கவேண்டும் இனி உன்மனதில் யாதொரு கவலையும்வையாமல் என்னுடைய நாடுநகரங்களை யாண்டுக்கொண்டு பெண்சாதி பிள்ளைகளோடு சந்தோஷமாயிருப்பாய் மருமகனே.



நளமகாராஜன்-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மாமனாராகியிந்தவையகமெல்லாமாளும்
வீமராஜேந்திரனே விநைப்பயனனுபவிக்க
நேமமாயிருப்பதாலே நினைவுபோல்நீக்கிடாது
சாமியின்கிருபையாலே தாழ்வினிவாராதையா.

வசனம்.

கேளும்மாமா விநைப்பயனை அனுபவிப்பது எல்லோருக்கும் இயல்புதானே, அப்படியிருக்க நம்முடைய எண்ணப்பிரகாரம்நடக்குமா, படவேண்டியகஷ்டங்களைப்பட்டுசுவாமியின்கிருபையால்தேவரீர்துநகரத்திற்குவந்துசேர்ந்தோம்இனிசவுக்கியப்படுவோம்மாமா.

இருதுபன்னன்-நளமகாராஜனுக்குச்சொல்

விருத்தம்.

அரசருக்கரசேபோற்றி அண்ணலேபோற்றியுந்தன்
சுருபம்நானறிந்திடாமல் தொண்டெல்லாஞ்செய்யச்சொன்னேன்
கிருபைசெய்தென்மேற்குற்றங் கிஞ்சிற்றும்வைத்திடாமல்
வாமதந்துவீரையா மலரடிபோற்றிபோற்றி.

வசனம்.

சரணஞ்சரணம் நவகண்டத்தையும் ஓர்குடையிலாளும் மகாராஜனே தேவரீர் வேற்றுருவாயிருந்ததால் இன்னாரென்றறியாமல் அடியேன் தங்களை சாரதியாகவைத்துக்கொண்டு வேலைசெய்யச்சொன்ன குற்றத்தை மன்னித்து இரட்சிக்கவேண்டும் சுவாமி.

நளமகாராஜன்-இருதுபன்னனுக்குச்சொல்

விருத்தம்.

விநையென்பதொருவருக்கும் விட்டிடாதென்றுமுன்னோர்
கனிவுடன்சொன்னசொல்லைக் கருதினுற்கோபமுண்டோ
சநியனுரிப்படிக்குச் சஞ்சலப்படச்செய்திட்டார்
மனதினிற்பயமில்லாமல் மகிழ்வாயுன்பதிசேர்வாயே.

வசனம்.

கேளும் இருதுபன்னராஜனே, விநைப்பயன் யாரையும்விடாதென்று பெரியோர்சொன்னவாக்கியத்தை யோசித்தால் கோபமேது என்னை சநியபகவான் இப்படிப்பட்ட வருத்தப்படும்படி செய்தார்

உன்னைநோந்ததனாற் பிரயோசனமென்ன நீ பயப்படாமல் உன்னுடைய அயோத்திநகரத்திற்குப்போவாய் இருதுபன்னராஜனே.

பொதுவிருத்தம்.

அயோத்தியையாளும்வேந்த னையனும்நளனைப்போற்றி
நயமுளவார்த்தைபேசி நல்விடைபெற்றுநாட்டை
இயல்புடன்சேரப்பின்பு இன்பமாயரசர்கோமான்
நயவதாயொருமாதத்தான் தங்கிப்பின்னுரைசெய்வானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் இருதுபன்னராஜன் விடைபெற்றுப் போனபின்பு நளமகாராஜன் ஒருமாதம்வரைக்கும் விதர்ப்பதேசத்திலிருந்த பின்பு தன்னுடையநகரத்திற்குப்போக யோசித்து வீமராஜனுக்குச் சொல்லுகிறவிதக்காண்க.

நளமகாராஜன்-வீமராஜனுக்குச்சொல்-விருத்தம்-

மாமறையோருய்வாழ்த்து மாமாகேளொருவிண்ணப்பம்
பூமியையாளுகின்ற புஷ்கரனிடத்திற்சென்று
நேமமாய்ச்சூதமாடி நிடதநாட்டினைக்கெலிப்பேன்
தாமிசமதுசொல்லாமற் சலுதியாயனுப்புவீரே.

வசனம்.

கேளும்மாமா நான் இப்போது புஷ்கரராஜனிடத்திற்போய் சொக்கட்டாலுடி முன்தோற்ற நாடுநகரங்களைக் கெலிக்கவேண்டும் ஆகையால் தேவரீர் தடைசெய்யாமல் சந்தோஷமாய்விடைகொடுத்தனுப்பும் மாமா.

வீமராஜன்-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

அப்படிதானேதேர்மாவ்வானைசேனைகளைக்கூட்டி
ஒப்பிலாவீரர்சூழ வுன்மகன்மனைவியோடு
இப்பொழுதவிடஞ்சென்று யாவருங்கண்களிக்க
கொப்பெனச்சூதயாடி குவலயந்தனைக்கொள்வாயே.

வசனம்.

கேளும் சக்ராதிபதியே உன்னிஷ்டப்பிரகாரம் இவ்விடத்திலிருக்கும் யானை சேனை பரிவாரங்களோடும் உன்னுடைய பெண்சாதி பிள்ளைகளோடும் நிடதநாட்டிற்குப்போய் அந்த அன்மார்க்கனை புஷ்கரனிடத்திற்சொக்கட்டாலுடி உனது நாடுநகரங்களைக்கெ



லித்து எப்போதும்போல நவகண்டத்தையும் ஆளுவாய் என்னுடைய மருமகனான நளமகாராஜனே.

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் நளமகாராஜன் வீமராஜனிடத்தில் விடைபெற்று பெண்சாதி பிள்ளைகளுடனேதேரின்மீதேறி யானை சேனை பரிவாரங்கள்சூழ நிடதநாட்டைநோக்கிவரும்போது உண்டாகிய நற்சகுனங்களை தமயந்திக்கு விவரித்துச்சொல்லுகிறவிதக்காண்க.

நளமகாராஜன்-தமயந்திக்குச்சொல்-திபதை.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பெண்ணேயுன்தந்தைநகர்-அதில் பிரியமாய்வாழ்ந்திருந்தோமாதம்
கண்ணே நிடதபுரி-நாம் கடுகிச்செல்லப்படிகட்டக்க
எதிரில்சகுனமது-ஒரு எந்திழையாளும்நிறைகுடத்தை
சுதாராய்கொண்டுவரவும்-எந்தன் கையிலேகாகம்பசுவுடனே
நரிமயில்கோழிகொக்கு-நளா யானுஞ்செய்போந்தம்பசக்கிளியும்
வரியுள்ளமாமுயலும்-வல மாகவருகுதபாரும்பெண்ணே
கருடன்பன்றிகிரி-சுலே மானுமாத்தையுங்கூகையுமே
அரவமுத்துறுமட்டை-நமக் காகயிடதினிற்போகுதுபார்
நல்லசகுனமிது-இந்த நாடியறிந்திடவெற்றியுண்டாம்
வெல்விநோயியிவழியில்-வெகு வேடிக்கைபாகவிருப்பதனைச்
சாற்றக்கேளுமயிலே-இந்த சத்திரந்தண்ணிவெளியோர்க்கு
ஏற்றவறுக்கலையும்-எழி லானவமுதபடைப்பகைப்பார்
காட்டுவழிகளிலே-மிரு கங்கள்விளையாடியோடுதுபார்
மாட்சிமையாம்நமது-நல்ல மங்களமானநகருமித்து
பாட்டில்புன்னாகவராளி-இப்போ பாடிவந்தோமடிகாரிகையே
மேட்டிமைமாகயினி-இங்கு வீற்றிருப்பாய்சத்துநேரமட்டும்

நளமகாராஜன்-தமயந்திக்குச்சொல்-விருத்தம்.

அன்னமேசொல்லக்கேளாய் ஆகாதசூதையாடி
இந்நகர்பறித்துக்கொண்ட பிறைவன்புஷ்கரனிடத்தில்
முன்னம்போலாடிவென்று மூர்க்கமாய்நகராள்வேன்
கன்னியேயிவ்விடத்தில் கலக்கமில்லாதிருப்பாய்.

வசனம்.

கேளும்பெண்ணே தமயந்தி முன்னம் பஞ்சபாதகத்திலொன்றாகியசொக்கட்டாடி நமது நாடுநகரத்தைப்பறித்துக்கொண்ட அந்த புஷ்கரனிடத்திற்சென்று முன்னாடிய சொக்கட்டாடி நம்முடைய நகரத்தைக் கெலிக்கப்போகிறேன் நீ இந்தசேனைகளோடு இவ்விடத்தில் சற்றுநேரமிருப்பாய் பெண்ணே.

தமயந்திசொல்-வசனம்.

அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

நளமகாராஜன்-புஷ்கரனுக்குச்சொல்-விருத்தம்.

சூதினில்வென்றுநாட்டை அடுக்காகத்ரகசெய்யும்
நீதிபுஷ்கரனேயென்பால் நீசண்டைசெய்குவாயோ
வாதாய்சூதாடுவாயோ மறுமொழிசீக்கிரத்தில்
நீதடையில்லாதுரைப்பாய் நிமிஷம்நான்பொறுத்திடேனே.

வசனம்.

கேளும் சூதாடி எனது நாடுநகரத்தைக்கெலித்த அரசாளும் புஷ்கராஜனே நான்இத்தனைநாள்பொறுத்துஎன்னுடைய நகரத்தை வேண்டிவந்தேன் நீ இப்போதென்னிடத்தில்சண்டைசெய்வையோ அல்லது முன்னாடிய சொக்கட்டாடுவையோ உனதுகருத்தை சீக்கிரமாகச் சொல்வாய் புஷ்கராஜனே.

புஷ்கரன்-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

மன்னனேசூதைத்தானே மறுவிசையாடவாரும்
இன்னம்நீர்தோற்றாலுந்த னேந்திழையாளைத்தாரும்
பின்னமாயான்தோற்றாலென் பெருநகர்நிதிகளெல்லாம்
சொன்னசொல்தவறிடாமல் அரிதத்திற்கொடுப்பேனையா.

வசனம்.

கேளும் இராஜாதிராஜரே சண்டையென்கிறபேச்சை என்னிடத்திற் சொல்லவேண்டாம், முன்னாடிய சொக்கட்டானையே ஆடுவோம் நீர்தோற்றால் உம்முடைய மனைவியாகிய தமயந்தியைக்கொடும் நான்தோற்றால் இந்த நாடு நகரம் யானைசேனை பொக்கிஷமுதலிய சகலமும் உமக்குக்கொடுத்துவிடுகிறேன் இதற்குச்சாட்சி இவ்விடத்திலிருக்கும் மந்திரி பிரதானிகளே, ஆடுவோம்வாரும் மகாராஜரே.



நளமகாராஜன்சொல்-வசனம்.

இந்தபந்தயம் எனக்குஞ் சம்மதிதான் அப்படியே ஆடுவோம் பகடைகளையெடுத்துவையும் புஷ்கராஜனே.

நளமகாராஜனும்-புஷ்கரனும் சூதாடல்.

நளமகாராஜன்சொல்-தரு-இ-ம்-மோகனம்-மிசுரநானம்.

ஆடுதற்கிருமையுன் டாகவேணும்-சுவாமி
அரிகரிதிருமலரடியிணைபாவிநின்
றாடுதற்கிருமையுன் டாகவேணும்
நாடுநகரனைத்தும் தேடும்பொருள்கள்முற்றும்
நன்மையுடனேபெற என்பொருளினிவர (ஆட)

க-ம௨, உ-ம, உ-தளை, க-ச-ம.

புஷ்கரன்சொல்-தரு-

ஆடவந்தீரோயின்னம் வாரும்-ஐயா
அதிலுமெனதகஷ்டம் இதிலுமறியவேணும்
ஆடவந்தீரோயின்னம் வாரும்
நாடுநகரிழந்த காடுதனிற்றிரிந்த
நானுடையவனெனத் தானுரைப்பதேகனம் (ஆட)

மூணாத்தோலினுதான்.

நளமகாராஜன்சொல் — தரு.

கட்டுவேன்குஞ்சுமத்தைப் பாரும்-கட்டி
கறுப்பிரண்டையுங்வெட்டிப்போடுவேனினி
கன்னுலகனையுற்றுப் பாரும்
அஷ்டதிசையுங்ஜயம் கட்டிவெந்தன்கைவசம்
ஆக்கிக்கொள்வேனிப்போ பாக்கியமளிப்பார்சதி (கட்டு)

உ-ம௨, க-ம, ௩-தளை, ச-௩-எ.

புஷ்கரன்சொல்-தரு.

கட்டும்வகையில்லாமற் போச்சே-இன
கிலியின்செயலேமன வலியால்முடிவதல்ல
காயெல்லாம்வெட்டுண்ண லாச்சே
கட்டில்லாப்பந்தயமேது மறுபடிகாணேனினி
மனவனுக்குதஷ்டம் வந்ததெனக்குக்கஷ்டம் (கட்டு)

ச-க-டு.

நளமகாராஜன்சொல்-தரு.

ஏன்கைபந்தயத்தைநீர் பாரும்-விழு
திருக்காலிலொட்டுதலை பெருக்கும்பணிரண்டிலி
எழில்சேர்செக்கோலினைத் தாரும்
பெருக்கமடுக்காதுன் செருக்கினி நடக்காது
பிரீடல்சேவிது கர்மமெனும்பெரிது (ஏன்)

௩-டை-௧-ச-டு.

புஷ்கரன்சொல்-தரு-

முன்போல்கெலிக்கவல்லவோ வந்தேன்-ஒரு
மூணத்தொண்ணுறையக்காமற் காணேனிதுபரியந்தம்
மோசம்போய்ப்பொருளெல்லாந் தந்தேன்
என்கையினைத்தந்தேது இனிமேல்நம்பவொண்ணுது
குழைமதிக்காது வாழ்வைத்தந்தேனிப்போது (முன்)

மூணத்தொண்ணுறான்.

நளமகாராஜன்சொல்-தரு.

நாலத்தோரஞ்சதான் வேணும்-இப்போ
ஞாலத்துள்ளோர்மகிழ கோலந்தூடன்புகழ
நாவிருகாய்பழுத்தது காணும்
வேலைசூழ்புவிமுற்றும் வேழம்பரியனைத்தும்
விடுப்பத்துவேகனம் கொடுப்பாய்பறித்தனம் (நாலத்)

ஞ-டை-நாலத்தோரஞ்ச.

புஷ்கரன்சொல்-தரு.

காலம்போம்வார்த்தைநிற்கு மென்பார்-அதை
கருத்திற்கருதாமலென் சாதனையுரைத்தேனினி
சதிமான்செய்செயலிது காண்பாய்
மாலையணியும்வீரா மாரனெனுங்கெம்பீரா
மனதிற்றினம்விடுப்பாய் மகிழ்வாய்விடைகொடுப்பாய் (கா)

நளமகாராஜன்சொல்-வசனம்.

ஆ-ஆ-சகிவாச-தோற்றுவிட்டீர் எழுந்திரும் புஷ்கராஜனே.

புஷ்கரன்-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்-

சத்தநற்கடல்சூழ்ந்தக் காசினியோருமெச்ச
அத்திதேர்பரிகள்சேனை யாவையும்புவியும்நல்ல
சித்திரமணியுந்திவ்விய செம்பொன்னுபரணமெல்லாம்
முற்றுமேகெலித்திருந்தன் மொழிப்படி நடப்பேனோ.



வசனம்.

சரணஞ்சரணம் மகாராஜனே தேவரீருடைய நாடுநகரம் யானை சேனை பொக்கிஷமுதலிய சகலமுங் கெலித்துக்கொண்டீர் ஆகையால் அடியேன் பிழைக்கும்வகையுரைத்து அனுப்பவேணும் மகாராஜனே.

நளமகாராஜன்-புஷ்கரனுக்குச்சொல்-விருத்தம்.

என்றுரைசெக்கோல்பெற்று வெளிதல்லநீயார்தம்பி
மனமதுதளரவேண்டாம் வளக்கெழுநிடதநாட்டை
கனமுடனுண்டதாலே காண்பவர்க்கழகெனக்கோர்
சினமில்லைபுஷ்கராநீ செல்லுவாய்செல்லுவாயே.

வசனம்.

கேளும் புஷ்கராஜனே நீ இத்தனைநாள் என்னுடைய நகரத்தையாண்டிருந்ததுஎனக்குச்சந்தோஷமே நீ என் சகோதரனுக்குச் சமானம் சுகமாய் உனதுநகரம்போய்சேர்ந்து எப்போதும்போல் பரிபாலிக்கட்டும் புஷ்கராஜனே.

புஷ்கரன்சொல்-வசனம்.

அப்படியே-மகாபாக்கியம்-போய்வருகிறேன்மகாராஜனே.

நளமகாராஜன்-தனதுமந்திரிக்குச்சொல்-விருத்தம்.

மந்திரிகேளாயெந்தன் மங்கையாள்தமயந்திக்கு
இந்தவாசகமுரைத்தே யிவ்விடமழைத்துவாரும்
சிந்தையில்மகிழ்ச்சியாகச் சிரோரத்நமுடியைச்சூடி
முந்திநாமாண்டதேச முழுவதுமாளுவோமே.

வசனம்.

கேளும் மந்திரி நாம் நமது நாடுநகரங்களைக் கெலித்ததாகையால் தேவியாகிய தமயந்திக்குச்சொல்லி அழைத்துவாரும் எப்போதும்போல முடிசூட்டிக்கொண்டு நவகண்டத்தையும் ஆளுவோம் மந்திரி.

மந்திரி-நளமகாராஜனுக்குச்சொல்-விருத்தம்.

தேவரீருரைப்படிக்கு தேசத்தார்மகிழ்ச்சிகொள்ள
ஆவலாய்முடியைச்சூடி ஆளுவீர்நிடததேசம்
தேவியாள்புத்திரரோடு சிறப்பாய்சிங்காசனத்தில்
மேவுவீர்கிருபையோடு மெய்யனேபோற்றிபோற்றி.

வசனம்.

சரணஞ்சரணம் மகாராஜனே தேவரீரது உத்தரவின்படி தம யந்திதனை அழைத்துவந்தேன் நாங்கள்தமகுபத்தினியோடு சிம் மாசனத்திலமர்ந்து முடிபுனைந்து நலகண்டத்தையும் அரசாக்ஷிசெ ய்யும் மகாராஜனே.

பொது-வசனம்.

அஃதெப்படியென்றால் அரசர்க்கரசனுகிய நளமகாராஜன் தன னாட்டுநகரங்களை செலித்து சிங்காரமுடிசூட்டி பங்கமென்பதை யோட்டி சத்துருக்கள்தாழ மித்துருக்கள்சூழ ஐம்பத்தாறுதேசத்த ரசர்களும்பணிகிட்ட நிடததேசத்தையாண்டிருந்தான்.

மங்களம்.

இராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

மங்களமங்களம்-நித்தியசுப-மங்களமங்களம்.

அனுபல்லவி.

மங்களம்நிடத ...யிங்கிதநகளா
பங்கமில்லாமலான் அங்கதனேந்திரற்கு(மங்களம்)

சரணங்கள்.

சீர்தலானதமயந்திபாளருகில் நிதில்லாமலேமேவ
கோதிலாதசுநர்தாந்தைதாயார்பதம் காதலாகமலர்தூவ(மங்க)
வீரனைவதிருரனென்றுபுல வோர்கள்நின்றுகவிகூற
பாருளோருந்துயர்தீரவேயான தோதாகவேவீற(மங்க)
எங்குமங்கையர்களுக்குமங்களபசந்தனங்கள்கொண்டேற்ற
சங்கிதங்கள்சொல்லியேசுருட்டிதனை அங்கவாணர்பாடிபோற்ற(ம)

வாழிவிருத்தம்.

திருவளர்நிடததேசஞ் சிறப்பொடுசெழித்துவாழி
அருமையாம்நளராஜேந்திரன் அரசொடேந்நாளும்வாழி
குறைவிலாச்சபையோர்வாழி குருவாழிமறைகள்வாழி
பரிவாயிப்பாடல்செய்தோர் பாடுவோர்வாழிவாழி.

தமயந்திநாடகம்

முற்றுப்பெற்றது.